உத்தரமேரூர்ச் சைவ சித்தாந்த சபை வெளியீடு:

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க,

சுயமரியாதை யியக்கச் சூறுவளி.

இதனை

ஆக்கியோன்

ஒரு 'சிவசேவகன்'

இதனை

உத்திரமேரூர்த்

தேவார திருப்புகழ் இசைமணி

து. இராஜரத்தின முதலியாரால்

பொருளுதவி செய்து

சென்னை

ஸ்ரீ லலிதா அச்சகத்தில்

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

முன்னுரை.

—(:)—

'சுயமரியாதை யியக்கச் சூறுவளி' யென்பது இந்நூலுக்குப் பெயர். நான் இந்நூலை யியற்றி ஏறக்குறையப் பதினைந்து ஆண்டுகளாயின. தொடக்கத்தில் இதன் ஒருபகுதி பத்திரிகைகளில் வந்தது. ஒரு பத்திரிகையில் அதன்கீழ்க் கையெழுத்திட்ட ச, மாணிக்கம் பிள்ளை யென்பவர் என் நண்பர். பிறகு இந்நூல் முழுவதையும் நானே ஒரு பத்திரிகையில் வெளியிட்டேன். அதன்கீழ் நான் எனக்கிட்டுக்கொண்டது 'சிவசேவகன்' என்ற புனை பெயர். இப்புத்தகத்திலும் அப்பெயரே யிருத்தல் காண்க. பத்திரிகையில் வெளியானபிறகு இந்நூல் ஆங்காங்கே பல செப்பங்களை வேண்டி நின்றது. அவ்வப்போது நானும் அவற்றைச் செய்து கொண்டே வந்தேன். இப்புத்தகவடிவு பெற இஃ தச்சிலிருக்கும்போதுகூடச் சிலபல திருத்தங்களைப் பெற்றது.

கொளுத்தவுங் கொள்ளவும் வேண்டுவது உண்மையொன்றே. இந்நூலின் உள்ளக்கிடையும் அதுதான், ஆகலின் இந்நூல் விடயங்களை வெட்டவெளியாகச் சிறிதும் மறைவின்றி விளக்கும். நவீன நாகரிகம் நன்கு ஊறிய நெஞ்சுடையார் ஆங்காங்கே உளர். அவர் இந்நூலை வாசிக்கக்கூடும். அப்போது அவர்க்கு என்மேற் சீற்றம் உண்டாகலாம். பொறுமையோடு அவர் இதனைக் கூர்ந்து படிப்பாராக. அவர் தம்மறியாமையைக் காண்பரென்பது உறுதி.

இந்நூலிலுள்ள ஆசங்கைகளுக்குத் தக்க சமாதானங்கள் கூறமாட்டாமை யொன்றானே அந்நவீனர் இவ்வநுவாதங்களிற் கண்ட தம் புதுமைகளைப் போகவிடட்டு மென்பதே இந்நூல் அநுவாத ஆசங்கை முறையி லமைந்ததற்குக் காரணம்.

இந்நூலைக் கருத்தூன்றிப் படிப்பதற்குச் சோம்பி உரைநடை ஆங்காங்கே சிறிது கடினமெனக் கூறி என்னைக் கடிவதிற் பயனில்லை. பொருளின் கடினமே உரை நடையையுங் கடினப்போற் காட்டும். ஆசங்கைகளின் 1, 2, 3 முதலியன வரிசையெண்கள். I, II, III முதலியன விவகார (Arguments) எண்கள்.

A, B, Cக்கள் I, II, III முதலியவற்றின் உட்பெரும் பகுதிகள். a, b, cக்கள், A, B, Cக்களின் உட்சிறுபகுதிகள்.

இந்நூல் தன் பெயருக்கேற்பச் சுயமரியாதை யியக்க மொன்றற்கே சூறுவளி யென்ப தில்லை. இதிற் கண்ட அநுவாதப் பொருள்களைத் தம்மாட்டுக் கொண்ட இயக்கங்களனைத் திற்குமே இஃது அன்னதாகும்.

தொண்டை நாட்டுக் காஞ்சி வட்டத்திலுள்ளது உத்தர மேரூரென்பது. அது சரித்திர சம்பந்தமானதொரு புராதன நகரம். சர்வலோக சரண்யரான ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானார் அங்கே திருக்கோயில் கொண்டு விளங்குகிறார். அப்பெருமானாரின் திருவடிப் பத்தியில் அவ்வூரா ரனைவருந் திளைத்திருப்பார். அவர்களுள் ஒருவராய் விளங்கியவர் திருவாளர் வ. மு. துரைசாமி முதலியாரவர்கள். அவ்வூர்ச் செங்குந்தப் பிள்ளையார் கோவில் தெருவில் சென்ற 42 ஆண்டுகளாகத் தேவார பக்தஜன சபையொன்று நடைபெற்று வருகிறது, செங்குந்த குல திலகராகிய அம்முதலியாரவர்கள் தம்மினத்துப் பல நண்பர்களைத் துணைக்கொண்டு அதனை நிறுவினார்கள். அச்சபையின் உட்பகுதியாகச் சைவசித்தாந்த சபையொன்றும் அவர்கள் முயற்சியால் தோன்றி ஏறக்குறைய 15-ஆண்டுகள் சிவபணி செய்துவந்தது. ஆண்டுவிழாக்களிலும். பிற காலங்களிலும் தமிழ் நாட்டுச் சைவப் பெரியார் அங்குச் சென்று செய்த சைவப்பிரசாரங்கள் பல. அம்முதலியாரவர்கள் அவ்வளவில் நிற்கவில்லை. செங்கற்பட்டு ஜில்லா போர்டிலும், வேறு பிற பொது நிலயங்களிலும் அவர்கள் அங்கத்தினராயிருந்து மக்களுக்குப் பலபடியாலும் பணி செய்துள்ளார்கள். கல்வி, செல்வம், நன்மக்கள் முதலிய சிறப்புக்களெல்லாம் நிரம்பப் பெற்ற அவர்களுக்கு ஜவுளி வியாபாரம், பலசரக்கு வியாபாரம் என்னுமிவைகள் பொருளீட்டுந் துறைகளாகும். அவர்கள் தம் 62-ஆம் வயதிற் சிவபத மெய்தினார்கள்.

அவர்களின் நன்மக்கள் இப்போது வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுள் திருவாளர் இராஜரத்தின முதலியாரென்பவர் ஒருவர். 'மகனறிவு தந்தையறிவு' என்னும் உண்மையை இவர்களிடங் காணலாம். தந்தையார் செய்துபோந்த ஜவுளி வர்த்தகம் இவர்களால் நடந்து வருகிறது. தேவார பக்தஜன சபை தொடர்ந்து சிறந்து நடந்து வருவதற்கு இவர்களின் ஆர்வமே மூலமாகும், தேவாராதி திருமுறைகளை உள்ளங் கனிய இனிய குரலில் இசை ஞானத்தோடு பண்ணடைவு சிதையாமற் பொருள் விளங்கப் பாடித் தாம் இன்புறுவதோடு கேட்போரையும் இன்புறுத்துவதில் இவர்கள் மிக வல்லவர். 'தேவார திருப்புகழ் இசைமணி'யென இவர்களைச் சிறப்பிப்பார் அநேகர்.



உத்தரமேரூர்ச்

செங்குந்த தேவார பக்தஜன சபைத் தாபகர்

திருவாளர் வ. மு. துரைசாமி முதலியாரவர்கள்

ஸ்ரீ முருகப்பெருமானுரிடம் பக்தி மிக்க இவர்கள் அப்பெருமானுர்க்கு அவ்வப்போது செய்துவருங் கைங்கரியம் அளவிடற்கரியது. வைதிக சைவ வளர்ச்சியில் இவர்களுக்குள்ள ஆர்வமும் அப்படிப்பட்டதே

இத்தகைய இவர்கள் எனக்குச் சிறந்த நண்பராகக் கிடைத்தார்கள். என்னிட மிருந்த இந்நூற் கையெழுத்துப் பிரதியை இவர்கள் காண நேர்ந்தது. அதனை முற்றிலும் படித்துப் பார்த்துத்தாமே பொருட்செலவுசெய்து அச்சிடப்போவதாகக்கூறி இவர்கள் என்னிடமிருந்து வாங்கிச்சென்று அச்சிட்டு உபகரித்தார்கள். சிவபணியில் இவர்களுக்குள்ள பேரார்வத்துக்கும் பேருக்கத்துக்கும் இஃதொரு சான்றுதல் காண்க

தனம் படைத்த புண்ணியவான்கள் பலரைக் கொண்டது இச் சைவ வுலகம் அவர்கள் தம் பணத்தால் இன்னின்ன பணிகளை இன்னின்ன முறையிற் செய்ய வேண்டுமென்பதை யறியற்பாலார். அவர்க்கு முன்மாதிரியா யிருந்து அவற்றைச் செய்து காட்டிவருகிற சிலர் இம்முதலியாரவர்களென்று கூறுவது மிகையாகாது. இவர்களுக்கு என் உள்ளம் நிறைந்த நன்றி உரியதாகுக. ஸ்ரீ கஜவல்லீ சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுர் இவர்களுக்கும் இவர்கள் குடும்பத்தார்க்கும் எல்லா நலன்களை யுந் தந்தருளும்வண்ணம் அவர் திருவடித் தாமரைகளை நான் மனமொழி மெய்களால் இறைஞ்சி வேண்டிக்கொள்கிறேன்.

இந்நூலின் பதிப்பு எனக்கே யுரியது.

சிவசேவகன்.

உ

திருச்சிற்றம்பலம்.


ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

பதிப்புரை.

'முத்தேவ ராதி புலவோர்கள் விண்ணின் முழுதின்பகற்றி யருளின்—பித்தேறி நின்ற முனைவன் பதங்கள் பெருகன்பி னேடு பணியு—மத்தேய மான வுயர்பா ரதம்..................' என்று சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னரேயே அருளிப் போந்தனர் கவி சார்வபௌமராகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர்பிரானர். பாரததேச முழுவதும் சைவஸ்தானம். அதில் திராவிடஸ்தான், ஹிந்துஸ்தான், பாகிஸ்தான், சீக்கிஸ்தான் முதலிய வேறு ஸ்தானக் கூச்சல்களுக்கு இடமே யில்லை. சைவ நாடாகிய பாரத தேச முழுவதும் சைவருக்கே யுரியது என்ற சத்திய வாசகத்தை அறிவும் உரனும் ஆண்மையுமுடைய வைதிக சைவ சீலர்கள் ஒன்றி நின்று முழங்கி அத்தேசத்தை முன்போற் சைவமே யாக்க விரைந்தெழுக என்று அப்பாசுரப்பகுதி சைவஜன சமூகத்தைத் தட்டி யெழுப்புகிறது.

ஆயினும் இக்காலைச் சைவர் அம்முயற்சியிற் புகுகிலர். அம்மாட்டாமைக்குப் பல தடைகள் உள. அவற்றுள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நாத்திகக் கொள்கை தலைவிரித்தாடுவது முக்கியமானதாகும். இந்நாட்டிற் சுயமரியாதை யியக்கமென்ற பெயரால் ஒரு கூட்டம் புறப்பட்டு அக்கொள்கையைப் பரப்பி மக்களை விலங்கு நிலைக்குக் கொண்டு போகப் பெரிதும் வேலைசெய்து வருகிறது. அக்கொள்கையை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டுமென்ற எண்ணம் அடிக்கடி என்னுள்ளத்தில் எழுவதுண்டு.

ஸ்ரீ முருகப்பெருமானுருடைய திருவருளால் 'சுயமரியாதை யியக்கச் சூறுவளி' யென்னும் இந்நூலின் கையெழுத்துப்பிரதியை இதனுசிரியராகிய 'சிவசேவகன்' என்பாரிடம் நான் கண்டேன். அதனை யொருமுறை படித்ததும் என் எண்ணம் ஈடேறிவிட்டதென்ற துணிவு எனக்குண்டாயிற்று. 'இந்நூலை என்னிடங் கொடுங்கள். என் பொருட் செலவில் நான் இதனை அச்சிட்டுப் புத்தகமாக்குகிறேன். தமிழ்நாடு சீர்பெற்றுத் திகழ்வதற்கு இந்நூல் நன்கு துணைபுரியு மென்பது என் பரிபூரண நம்பிக்கை' யென்று கூறி நான் அதனை அவர்களிடமிருந்து வாங்கி என்சொந்



உத்தரமேரூர்
தேவார திருப்புகழ் இசைமணி
து. இராஜரத்தின முதலியார்

தப் பொருட் செலவில் அச்சிட்டுப் புத்தகமாக்கினேன். தமிழுல கிற்குக் காலங் கருதி இன்றியமையாது வேண்டப்படும் பணி யிஃ தென்ற வுறுதியே நான் இந்நூலை அச்சிடற்குக் காரணமாகும். வேறு ஊதியம் எதுவும் என்னுள்ளத்தில் எழவில்லை,

இந்நூலுக்கு ஆசிரியராகிய ‘சிவசேவகன்’ என்பார் எனக் கும் ஆசிரியர்: பாண்டி நாட்டுப் பரம்பரைச் சைவ வேளாள குலத் தோன்றலாராகிய இவர்கள் சைவ சித்தாந்த சாத்திர வாராய்ச்சி நன்கு கைவரப்பெற்றவர்கள். சு. ம. இயக்கத்தார் அவ்வப்போது வெளியிட்டுவரும் சிவத்துரோக அபத்த வாசகங் களை இவர்கள் எடுத்துக் காட்டி மறுத்துப் பேசி எங்களைப் பெரி தும் மகிழ்விப்பார்கள். ஈழத்தடிகளென்பார் வெளியிட்டுள்ள ‘பெரிய புராண ஆராய்ச்சி’ யென்னுஞ் சுவடியை இவர்கள் கூர்ந்து பரிசீலித்து எழுதியுள்ள மறுப்புரை யொன்று விரைவில் வெளி வரும் இவர்கள் புரிந்துவரும் இன்ன சிவபணிகளுக்குச் சர்வ லோகைக நாயகராகிய ஸ்ரீ சிவபிரானார் உடனிருந்து ஊக்கந் தந் தருளும்படி அவரின் உபய சரணாரவிந்தங்களையும் நான் வணங்கி வேண்டிக்கொள்கிறேன்.

இந்நூலின் பதிப்புரிமை எனக்காப்தரும், இந்நூலுக் காசிரியருமாகிய ‘சிவசேவகன்’ என்பார்க்கே சொந்தமாகும்.

இந்நூலிற் கண்ட ஆசங்கைகளுக்குச் சமாதானங்கள் யாரேனும் புத்தகமாக எழுதி வெளியிடலாம். அப்படி வெளியிட் டால் அவர் இரண்டு பிரதிகள் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தபால் மூலமாகவேனும் அனுப்பித்தருக. பணத்தைக் கட்டி நான் அவற்றைப் பெற்றுக்கொள்வேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

JAI BHARATH.

உத்தரமேரூர்,
1-11-1946.

தேவார திருப்புகழ் இசைமணி,
து. இராஜரத்தின முதலியார்.

உள்ளுறை.

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

சுயமரியாதையியக்கச் சூறாவளி.

சுயமரியாதையியக்கக் குழாத்தினர்காள்!

'சுயமரியாதை யியக்கச் சூறாவளி' யென்னும் இந்நூலில் உம் இயக்கக் கொள்கைகள் சிலவற்றை யாம் வரிசையாக அநுவதித்துக் கொண்டு அவற்றுள் ஒவ்வொன்றையும் பலவாறு ஆசங்கித்துள்ளேம். நீவிர் அவ்வாசங்கைகளை முறையே அநுவதித்துக்கொண்டு ஒவ்வொன்றற்குஞ் சமாதானங் கூறுவிராக. அறிவுடை யுலகிற்கு அவ்வியக்கம் இயையுமாறு அச்சமாதானங்கள் அறிவும் முரணுமையும் அளவி வெளிப்படுக. சமாதானங்கள் தோன்றுதொழியினும், அறியாமை, அழுக்காறு, வெகுளி, நிந்தை, பராமுகம் முதலியனவே செறிந்த சமாதானப் போலிகள் தோன்றினும் உம் சுயமரியாதை யியக்கம் எம் சூறாவளியின்முன் சிறுபுன் துரும்பாயிடுதல் சத்தியம்,

1. நாத்திகம்.

அநுவாதம்.

பதி, பசு, பாசம், சுவர்க்கம், நரகம், மறுபிறப்பு, பந்தம், முத்தி முதலியன உளவென்பது ஆத்திகம். அவற்றை யில்லை யென்பது நாத்திகம். அறிவாராய்ச்சியால் தகர்த்தெறியப்படும் எளிமையிலுள்ளது முன்னையது. மக்கள் உலகவின்பத்தை நுகர்வதற்கு அது முற்றிலும் இடையூறுயு மிருந்துவருகிறது. பின்னையதே அறிவாராய்ச்சியிற் சரியெனப்படுவதும் உலக வாழ்க்கைக்குத் துணைபுரிவது மாகும்.

ஆசங்கை.

I 1. உம் குழுவினரனைவருமே நாத்திகர்தாமு?

2. அவருட் சம்சய வாதிகளென்போரு மிலரா ?

3. நாத்திகச் சார்பில் நிச்சயவாதிகளாகிய அவர் ஆத்திகச் சார்பு மட்டில் தம்மைச் சம்சயவாதிகளெனச் சொல்லித் திரிவது வஞ்சகமாகாதா ?

4. 'நல்ல தீர்ப்பு' என்னுஞ் சுவடியில் "நமக்குக் கடவுளுணர்ச்சி வேண்டும்", "ஒருவனே தேவனும்' என்ற மனப்பான்மை தேவை. அருளைமட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை" என்று உம். ஸி. என். ஏ. வேண்டியுள்ளது ஆத்திகமன்று?

5. அதனை அவர் உண்மையாகவே உடன்படின் அநீசுர வாதத்தை மறுத்தற்கு அசையாத காரணமொன்றைக் காட்ட மாட்டுவாரா ?

6. பொறிகளோ கரணங்களோ பதி பசு பாசாதிகளை உணரக்கூடியனவா ?

7. அவ்வாத்திகப் பொருள்கள் தம்முள் தொடர்புடையன வென்பது தெரியுமா ?

8. கடவுளுணர்ச்சி வேண்டுமென்ற அவர் பசு பாச முதலிய பிறவற்றை எங்ஙனம் உணர்ந்தார் ?

9. ஈசுரன் உலகை எந்த வுபாதானத்திலிருந்து, எப்படி, யார் பொருட்டு, எவ்வித நன்மையை வழங்கச் சிருஷ்டித்தானென்பது போன்ற விசாரங்களும் அடுக்கடுக்காக நிகழமாட்டாவா ?

II. 10. உலகம் யாராலும் உண்டாக்கப்பட்ட தன்றென்று நீர் கொள்வதில்லையா ?

11. ஆயின் நீர் குடியிருக்கும் வீடு ஒருவனாற் கட்டப்பட்டதன்று?

12. அது நீள, அகல, உயரங்களையுடையதாய் வரம்புட்பட்ட இடத்தில் அகப்பட்டுக் கிடப்பதில்லையா ?

13. தூண், கல், மண் முதலியவாகத் தனித்தனி பிரிக்கபடுவதில்லையா ?

14. அஃதப்படியே யிருந்தபோதும், உறுப்புறுப்புக்களாகப் பிரிக்கப்பட்டபோதும் சடவியல்பே யுடையதா யிருப்பதில்லையா?

15. அங்ஙனம் வரம்புக்குள் அகப்பட்டுக் கிடத்தல்; உறுப் புறுப்புக்களாகப் பிரித்து வேறு வேருக்கப்படுதல், சடமாய்க் கிடத்தல் என்பன அவ்வீடாகிய பொருளிலேயே காணப்படு வன அல்லவா?

16. குடம், துணி, கட்டில் முதலியவற்றிலும் அவையிலவா?

17. மக்கள் செய்த எந்தப் பொருளிலும் அம் மூன்றிற் குறைந்த அல்லது முரணிய வேறொன்று காணப்படுமா?

18. அந்தப் பொருளைக் கண்டு அவற்றை அதில் ஆராய்ந்து அது மக்களாற் செய்யப்பட்டதென்று சொல்லிவிட முடியாதா?

19. ஆகவே செய்யப்பட்டதொரு பொருள் செய்யப்பட்டதே யெனக் காண்பதற்கு அம்மூன்றும் அதன்பாலுள்ள அடையா ளங்களென்பதை யறிகிறீரா?

20. இனி உலகமெனும் பொருள் முதன்முதல் உளதான போது அவ்வுளதாதலை நேரிற் பார்த்தீரா?

21. அஃதநாதி யென்பதையும் அங்ஙனமே பார்த்தீரா?

22. மக்களாற் செய்யப்பட்ட பொருள்களுட் பல நீர் இவ் வுலகில் தோன்றுமுன்னேயே செய்யப்பட்டு உம் காலத்திற் கிடப்பதில்லையா?

23. அவை செய்யப்பட்டதையாவது நேரிற் பார்த்தீரா?

24. ஆயினும் அவை மக்களாற் செய்யப்பட்டனவென்று அம்மூன்றடையாளங்களும் அவற்றிற் கிடப்பன கொண்டு ஊகித் துக்கொள்ள முடியாதா?

25. உலகத்தின் உற்பத்தியோ அநாதித்தன்மையோ நேரிற் காணப்படாததாயுள்ள உலகமென்னும் பொருளிலும் அம் மூன்றடையாளங்களும் இருப்பதை யறிவீரா?

26. அதுகொண்டு உலகமும் ஒருவனாற் செய்யப்பட்ட பொருள் தானென்று ஏன் ஊகித்தல்கூடாது?

27. உலகம் தானே உளதாயிற்றென்பதற்கும், அநாதியென்பதற்கும் வேண்டப்படும் பிரத்தியேக அடையாளங்கள் அதில் உளவாயின் அவை இவையென விளங்கக் கூறுவீரா?

III. 28. 'நான் தமிழன், நான் திராவிடன்' என்று நீர் அடிக்கடி மார்தட்டுகிலீரா?

29. அந்த 'நான்' என்னுஞ் சொல்லுக்குப் பொருள் எது?

30. உம் தோல், எலும்பு, மயிர், குருதி, நரம்பு, பவ்வீ, சிறுநீர் முதலியவற்றுள் ஒவ்வொன்றும் அதுவா?

31. அவற்றின் கூட்டமே அதுவா?

32. உம் 'நான்' ஐ நேரிற் கண்டீரா?

33. பிறர்க்குக் காட்டுவீரா?

34. காட்டுவேமென்பீராயின் நீர் சாவீரல்லீரா?

35. அப்பால் நீர் காட்டுவதெப்படி?

36. 'எனக்குக் காட்டுவீரா?' என்று வினவுகிறவனுடைய 'நான்' ஐயே அவனுக்குக் காட்டுவேமென்பீராயின் அவனை நீர் கொல்வீரல்லீரா?

37. அப்பால் அவன் காண்பதெப்படி?

38. நீரும் அவனும் அல்லாத பிறனுடைய 'நான்' ஐ அவனுக்குக் காட்டுவேமென்பீராயின் உம்மிருவரின் பொருட்டும் அப்பிறன் சாக வேண்டுமா?

39. உம் 'நான்' எந்தப் பொறிக்குப் புலனாகக்கூடியது?

40. அஃதெப்பொறிக்கும் புலப்படாதென்பீராயின் வேறெம்முகத்தாலாயினும் ஊகித்து அச்சொற்பொருளிதுதா

னென்று அறுதியிட்டு உம்மவர் யாரேனும் விளக்கியிருக்கின் றனரா?

41. பலர் பல விளக்கங்கள் தந்திருக்கின்றனரென்பீராயின் அவை தம்முள் முரணுமல் ஒரே படித்தாயிருக்கின்றனவா?

42. உம்முடைய 'நான்' ஐக் காணவுங் காட்டவும் மாட்டா மலிருந்தும் 'நான் தமிழன்' என்பது முதலியவற்றைக் கூறி மார் தட்டிக் கொள்கிற உம் கூட்டத்தினர்க்கும், ஈசுரனைக் கண்டும் காட்டியும் உள்ளார் போகக் காணுமலுங் காட்டாமலுமிருந்தும் 'ஈசுரன் இருக்கிருன், அவனே உலகத்தைப் படைத்தான், அவனே எல்லார்க்கும் ஆண்டவன்' என்று பேசுகிற பிற ஆத்தி கக் கூட்டத்தினர்க்கும் அறிவில் என்ன வேறுபாடு கண்டீர்?

IV 43. அறிவை வளர்த்துக் கொள்ள நீரும் அரும்பாடு பட வில்லையா?

44. ஆனல் உம்மிடம் அறியாமையும் இல்லையா?

45. அவ்வறியாமை உம்மை எப்போது எப்படிப் பிடித்தது?

V. 46. நீர் பிறக்குமுன் இவ்வுலகை யறிவீரா?

47. இது கிடைக்கவேண்டுமென்று உழைத்திருப்பீரா?

48. இங்குத் தற்செயலாகவே பிறந்திலீரா?

49. ஆகலின் இவ்வுலகம் உமக்குப் புதையல் போன்றே கிடைத்த தாகாதா?

50. புதையலைப் பங்கிட்டுக் கொள்வதற்கு உழைப்பதும் ஓர் உழைப்பாமா?

51. சும்மாகிடைத்த வுலகத்தை விடுவதே உமக்கு நியாய மன்ரு?

52. இன்றேல் உழைப்பவருக்கே உலகம் உரியதென்ற உம் கொள்கையை நீர் விடவேண்டாமா?

VI 53. இவ்வுலகம் அறியாமைப்பொருளா? அறிவுப்பொருளா?

A. 54. அறியாமைப் பொருளெனின் அறிவுடைப் பொருள்கள் எப்படி உளவாயின?

55. அறியாமைப் பொருளாகிய உபாதாநத்திலிருந்து அறிவுப் பொருள்களாகிய காரியம் உளதாமா?

56. ஆமெனின் உபாதாநத்தில் அறிவு சூனியமன்று?

57. சூனியம் காரியப்படுமென்று எந்த விஞ்ஞானி சொன்னான்?

58. உபாதாநத்தில் அறிவு சூக்குமமாயுள்ளதெனின் உலகமே அறிவுப்பொருள் தானென்று கூற ஏன் பதுங்குகிறீர்?

B. 59. அறிவுப் பொருள் தானெனின் அறிவாகிய வுபாதாநத்திலிருந்து நில, நீர், தீ முதலிய அறியாமைக் காரியங்கள் தோன்றுமா?

60. அறியாமையும் அவ்வுபாதாநத்திற் சூக்குமமாயுளதெனின் உலகவுபாதாநமானது அறிவு அறியாமைகளின் இயல்பினதென்பதே உமக்குக் கருத்தாதல் வேண்டாமா?

61. அதுவே கருத்தெனின் அறிவும் அறியாமையும் பகைமைக் குணங்களல்லவா?

62. அவை ஒரு பொருளுக்கு இயல்புகளாதல் யாங்ஙனம்?

63. இரும்பு சடமன்று?

64. அச்சட வுபாதாநத்திலிருந்து குடம், சட்டி, குண்டு முதலியவற்றைச் செய்யலாகாதா?

65. அப்படியே சித்தை உபாதாநமாக வைத்துக்கொண்டு எந்தக் காரியத்தையாவது செய்ய வல்லீரா?

VII. 66. அறிவானது பிறிதோருபாதாநத்திலிருந்து உண்டாகுங் காரியமும், பிறிதொரு காரியத்தை யுண்டாக்கும் உபாதாநமும் அன்றென்பதை யறிவீரா?

67. அதனால் அது நித்தப் பொருளென்பது விளங்குகிறதா?

68. ஒரு பிறப்பிலேயே மனிதவுடல் வயது ஏற ஏற வேறுபட்டுக்கொண்டே வருகிறதென்பது உடற்கூற்று நூலின் கொள்கையன்றோ?

69. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னிருந்தவுடலும் பின் வளர்ந்த வுடலும் முற்றிலும் வேறானவை யென்பதை அஃது அங்கீகரிக்கவில்லையா?

70. அப்படியானால் தீர்க்காயுளுள்ள ஒருவனுக்கு ஒரு பிறப்பிலேயே வேறு வேறு பருவங்களில் வேறு வேறு உடலங்கள் உளவாகின்றனவென்பது சித்தியாதா?

71. ஆயினும் அத்தனை யுடலங்களிலும் அறிவு தொடர்ந்து வருவது தெரிகிறதா?

72. ஆகவே அழியாத அவ்வறிவுக்கு ஒரு பிறப்பிலேயே பல வுடல்கள் கிடைப்பதை வைத்துக்கொண்டு அப்பிறப்புக்கு முன்னரும் பல பிறப்புக்கள் வந்திருக்கலாம், பின்னரும் வரவிருக்கலாம் என்று ஏன் கருதிக்கோடலாகாது?

73. முன்னைப் பிறவிகளின் நினைவின்மைக்குக் காரணத்தைக் காண்டலே நீதியன்றோ?

74. ஒரு பிறப்பிலேயே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பலவற்றைப் பின் நினைவின்மையினால் நிகழவேயில்லை யென்பீரா?

75. உம் நினைவில் வாராத உம் குழவிப்பருவத்தை யில்லை யெனல் உமக்குத் தகுமா?

VIII. 76. உலக முழுவதுமே பொதுவுடைமையாய் விட்டால் மக்களனைவரும் பந்தமற்றவராய்விடுவரா?

77. அப்பால் அவருக்கு விசனமோ அழுகையோ இராதா?

78. துன்பங்களுக்குக் காரணமான பந்தங்களெல்லாமுமே பொல்லாதனவல்லவா?

79. அவ்வெல்லாவற்றையுமே நீக்கிக் கொள்ள மக்கள் விரும்பமாட்டாரா? விரும்பவேண்டாமா?

80. அவையெல்லாம் நீங்கப்பெறுவதுதான் உண்மையான விடுதலையென்பது தெரிகிறதா?

81. முத்தியின்பத்தை நீர் கண்டீரா?

82. உலக வின்பத்தைத்தானும் நீர் காண்பது சிறிதே யன்றோ?

83. முத்தியின்பத்தைக் கண்டவர் அதைக் காணுமுன் உலக வின்பத்தையும் நன்கு கண்டவரல்லரா?

84. ஆகலின் அவ்விரண்டின்பங்களையும் ஒப்பு நோக்கிக் கான்டற்கும் காட்டற்கும் முற்றிலுந் தகுதியுடையார் அவரன்றி வேறோர்?

85. அவற்றின் உண்மையின்மைகளையோ, உயர்விழிவுகளையோ அவர் தீர்ப்பைக் கொண்டுதான் புத்திசாலிகள் ஏற்பாரென்பது தெரிகிறதா?

86. மக்கள் வாழவேண்டுமென்ற கருணை உமக்குமட்டிற்றான் உள்ளதா?

87. அவருக்கில்லையா?

88. முத்தியின்பத்தைக் காணாதவருள்ளேனும் எல்லாருமே உலகவின்பத்தை விரும்புகின்றனரா?

89. கள், காமம், பணம், அதிகாரம் முதலியவற்றில் வெறி கொண்டவரே அதற் கலைகின்றனரென்பது உண்மையில்லையா?

90. அறிவு, இரக்கம் முதலிய அருங்குணசீலர் பலர் அவ் வெறிகளை அறவே துறந்து தொண்டுசெய்யுமுகத்தால் உலக வளத்தைப் பிறர்க்குக் கொடுத்துவிட்டு எளிய வாழ்க்கை நடத்தி வருவதை யின்றும் பார்த்திலீரா?

91. உம் ஈ.-வே.-ரா. உலகவின்பத்துக் காசைப்பட்டவரா? அதனை வெறுத்துப் பல துன்பங்களைச் சகித்துக்கொண்டு எளிமையில் வாழ்பவரா?

92. உலகவின்பத்தைத் துறந்தவர் அதனை நுகர்கிறாரென்று எப்படிச் சொல்லமுடியும்?

93. உலகவளத்தை அவசியத்தளவில் நுகர்வது உலகவின்பத்தை நுகர்வதாமா ?

IX. 94. இவ்வுலக மொன்றுதா னிருக்கவேண்டுமென்ற வரையறை யுண்டா ?

95. வேறும் பல வுலகங்க ளிருப்பதால் யாருக்கென்ன நஷ்டம் வந்துவிடும் ?

96. அரசாற் கண்டுபிடிக்கப்படுங் குற்றங்களைப்போன்று கண்டுபிடிக்கப்படாத குற்றங்களையும் மக்கள் செய்யாரா ?

97. அரசநீதியிற் கண்டுள்ள இறுதித் தண்டனையாலுந் தீர்தலாகாப் பெருங்கொடுங் குற்றங்களையும் அவர் செய்வதில்லையா?

98. அக் கண்டு பிடிக்கப்படாத குற்றங்களுக்கும் அரச தண்டனையால் தீர்தலாகாப் பெருங்குற்றங்களுக்கும் அவர் தண்டிக்கப்பட வேண்டாமா ?

99. தண்டிக்கப்படுவ தெங்ஙனம் ?

100. அக்குற்றங்களை வைத்து இங்குள்ள தண்டசாலைகள் போன்று வேறும் நரகங்களெனப் பல வுலகங்க ளிருக்கலாமென ஊகித்துக்கொள்வதாற் கேடென்னை ?

101. அவற்றையில்லையெனப் பிரசங்கித்து மக்களைப் பெருங் கொடுமைகளில் தூண்டுதல் அவர்களை வாழவிடுவதாமா ?

102. அப் பிரசங்கத்தாலேயே மக்களை அக்கொடுமைகளுக் குரிய தண்டனைகளிலிருந்து தப்புவிக்க முடியுமா ?

X. 103. பொறிகளுக் கெட்டாத பொருள்களை வேறொராற்றாற் சிந்தித்து அவற்றின் உண்மைகளை வெளியிட்டால் அவை மக்களின் உலகவின்ப நுகர்ச்சிக்கு இடையூறாய் முடியுமென நடுங்கி அச்சிந்தனையை அப்பொருள்களின் ஆராய்ச்சியிற் செல்ல விடாமல் தடுக்கமுயல்வது தகுமா ?

ஆக அநுவாதம் 1க்கு ஆசங்கை 103.

2. பகுத்தறிவு

அநுவாதம்

விலங்கு பறவை முதலியவற்றுக்கு அறிவு வளர்வதில்லை. அவ்வறிவு வெறும் பொறியுணர்ச்சியே. மக்களுக்கு அவ்வுணர்ச்சி யோடு இன்னொருணர்ச்சியும் உடனிருந்து வருகிறது. அதுவே பகுத்தறிவெனப்பட்டு வளர்வதூஉம், எல்லாஞ் செய்யவல்லதூஉ மாம். அதனைக் கைவிட்டவர் அவ்விலங்கு பறவைகளினுங் கடையரே யாவர்.

ஆசங்கை.

I. 1. மக்கட் சிறப்பாவது பகுத்தறிவே யன்றோ?

2. மக்களுக்கு இயல்பாயுள்ளது அறிவா? அறியாமையா? இரண்டுமேயா?

A 3. அறிவெனின் அறியாமை அவரைப் பற்றிய தெப்படி?

B 4. அறியாமையெனின் இல்லது தோன்றுமா?

5. அவர்மாட் டறிவு வெளிப்பட்டதெப்படி?

C 6. இரண்டுமேயெனின் தம்முள் முரணிய அறிவு அறி யாமை யென்னும் இரண்டு குணங்களும் அவர்க்கு இயல்பாதல் கூடுமா?

II. 7. முற்றறிஞரிவர், பேரறிஞரிவர், சிற்றறிஞரிவர் என்று அவரவர் அறிந்துள்ள பொருள்களின் அளவை வைத்தன்றி மக்களை மதிப்பிடுவதெங்ஙனம்?

8. பொருள்களென்றுள்ளவை யனைத்தையும் அறிந்தவரே முற்றறிஞரென்பது மெய்தானா?

9. ஆனால் உலகில் நாளிதுவரை அம்முற்றறிஞர் ஒருவ ரேனுந் தோன்றியுளரா?

10. உம் ஈ-வே-ராத் தானும் முற்றறிஞ ரலரா?

11. இனியேனும் முற்றறிஞர் தோன்றலாமென நம்புகிறீரா?

12. அதிகப் பொருள்களை யறிந்தவர்தான் பேரறிஞ ரென்பது மெய்தானு?

13. ஆனால் அவர் அறியாத பொருள்களின் அளவைத் தெரியாமல் அறிந்த பொருள்களின் அளவை அதிகமெனல் யாங்ஙனம்?

14 அறியாத பொருள்கள் அறியாத பொருள்களாகவேயிருக்கும்போது அவற்றின் அளவைத் தெரிய முடியுமா?

15. அறிவு வளர்ந்துகொண்டே போகிறதென்பது அறியாத பொருள்களே அதிகமிருத்தல் வேண்டுமென்பதைக் காட்டாதா?

16. ஆகவே எத்தகைய பேரறிஞரும் அவர் அறியாத பொருள்களின் அதிகத்தைக் கொண்டு சிற்றறிஞரே யாவரென்று ஒதுக்கப்படாரா?

III. 17. அறிந்த பொருள்களுக் குள்ளேயே அவற்றின் அளவிற்கோ தரத்திற்கோ ஏற்பச் சிற்றறிஞரிவர் பேரறிஞரிவர் எனக் கணிக்கப்படுவா ரென்பீராயின் பேரறிஞரெனப்படுவோராலேயே மக்களுட் கட்சி வேறுபாடுகளும் பிறவேறுபாடுகளும் உளவாதல் ஏன்?

18. அப்பேரறிஞரேனுந் தம்முள் ஏன் ஒத்துப்போதல் கூடாது?

19. உம் ஈ-வே-ராவும் காந்தியும், காந்தியும் ஜின்னுவும், ஜின்னுவும் சவர்க்காரும் தம்முள் மாறுபட்டுத் தத்தமக்கெனப் படைதிரட்ட வில்லையா?

20. தமிழ்நாட்டில் நடந்த ஹிந்திச் சண்டை பேரறிவின் விளைவா? சிற்றறிவின் விளைவா?

IV. 21. ஒருவர் அறிந்ததனை இன்னொருவர் அறியாதிருக்கலா மன்றோ?

22. ஒருவருக்கே நேற்றுச் சரியெனத் தோன்றியவொன்று இன்றுத் தவறெனவும், இன்றுச் சரியெனத் தோன்றுகிறவொன்று நாளைத் தவறெனவுந் தோன்றி அவரால் ஒதுக்கப்படுவதில்லையா?

23. ஒன்றையே நேற்றுச் சரியெனவும் இன்றுத் தவறென வும் நாளைச் சரியெனவும் கொள்வா ரிலரா?

24. பேரறிஞ ரெனப்படுவோ ருள்ளும் அக்குறைகள் காணப்படாவா?

V. 25. பகுத்தறிவு வளர்ந்துகொண்டே போவதெனில் அப் போக்குக்கு எல்லை உண்டா? இல்லையா?

A 26. உண்டெனின் அஃது எது?

B 27. இல்லையெனின் அப்போக்கு வரம்பின்றி யோடுவதென் னுங் குற்றத்தினை யெய்தாதா?

28. அறிவு வளர்ந்துகொண்டே போகுமெனின் அறியாமை யும் இருந்துகொண்டேயிருக்கு மென்பது சித்தியாதா?

VI. 29. பலவேளைகளில் அறியாமையும் அறிவேபோல் அடர்ந் தெழுவதை யறிவீரா?

VII. 30. மக்களுக்கு வேண்டுவது உலகவின்பமா? வீட்டின்பமா? இரண்டுமேயா?

A. 31. உலகவின்ப மெனின் அஃது ஐம்பொறிகளின் வழித்தே யான தன்றோ?

32. அது விலங்கு முதலியவற்றுக்குக் காட்டிலும் மக்க ளுக்கு எம்முறையிற் சிறக்கின்றது?

33. மலந் தின்னும்போது பன்றிகளும் பாயசான்னம் உண் ணும்போது மக்களும் நுகருஞ் சுவையின்பத்தில் வேற்றுமை யென்னை?

34. நுகர் பொருளின் சிறப்புக்கேற்ப இன்பமுஞ் சிறக்கு மெனின் இன்பமானது நுகர்பொருளி லில்லை, நுகர்கின்றவருடைய உள்ளத் துணர்ச்சியிலேயே யிருக்கிறதென்கின்ற உமக்குச் சிறப்புப் பொருளிது சிறப்பில் பொருளிது வென்கிற வித்தியாசம் ஏது?

35. நுகர்பொருளின் சிறப்பும் இன்பத்துக்கு ஏதுவென வைத்துக்கொண்டாலும் சிறப்புப் பொருள்களை நுகரும் வளம் பெற்றதெள்ளறிஞர்பலர் அவ்வின்பத்தை வெறுப்பானேன்?

36. அப்பொருள்களை மதித்து நுகர்தற்குரிய பகுத்தறிவு அவருக்கில்லை யென்பீராயின் உம் ஈ-வே-ரா உலகபோகத்தை நலக்க நுகர்ந்து வருகிறாரா?

37. பொறியின்பத்துக்கு வேறாய்ப் பகுத்தறிவின்பமென வொன்று உளதென்பீராயின் அவ்வின்பத்தை எந்தப் பொறியின் வாயிலாய் நுகர்கிறீர்?

38. மக்களுக்குப் பகுத்தறிவு எவ்வளவிலாவது துன்பத்தை நீக்கி யுள்ளதா? நீக்கத்தான் வல்லதா?

B 39. வீட்டின்ப மெனின் உலகவின்ப நுகர்ச்சிக்கண் விலங்குகளுக்குப்போல் மக்களுக்கும் வேண்டாவெனப்படும் பகுத்தறிவு அவர்க்கு வீட்டின்ப நுகர்ச்சிக் கண்ணும் வேண்டாவென்பது வீட்டுநூற் றுணுபாவதை யறிவீரா?

40. அக்காலை அப்பகுத்தறிவு வேறொரு வியாபக அறிவில் விழுங்கப்பட்டுவிடுமென்று அந்நூல் கூறுவதுந் தெரியுமா?

C 41 இரண்டுமேயெனின் முதலதிற் பொறியுணர்விலும், அடுத்ததில் வியாபகவுணர்விலும் அகப்பட்டு வசமழியத்தக்க பகுத்தறிவு இரண்டற்குஞ் சேரத்துணைபோதல் யாங்ஙனம்?

VIII 42. நீர் சிறப்பிப்பது அங்ஙனம் வசமழியாத பகுத்தறிவா?

43. அப்பகுத்தறிவு இஃதுயர்வுடையது, இது தாழ்வுடையது எனப்பொருள்களைப் பகுத்துவைப்பதைத்தவிர்த்து வேறென் செய வல்லது?

44. எல்லாவித வேறுபாடுகளுந் தோன்றுவதற்கு மூலம் அஃதன்று ?

45. விலங்கு முதலியனவும் வீடெய்திய வுயிர்களும் பொருள் களில் உயர்வு தாழ்வு காணுமைக்கு அவற்றின் மாட்டுப் பகுத் தறி வில்லாமைதான் காரணமென்பது தெரியுமா ?

46. அப்படியே அவ்விரண்ட னிடைப்பட்ட மக்களிடமும் எவ்வித வுயர்வு தாழ்வும் ஒழியவேண்டுமாயின் அதற்கு மூலமான பகுத்தறிவும் ஒழியவேண்டாமா ?

47. ஆயின் அவ்வறிவுக்கு நீர் ஏன் அவாவுகிறீர் ?

IX. 48. மருந்தை இன்னின்ன சரக்குகள் சேர்த்து இன்னின்ன முறையிற் செய்து இன்னின்ன நோய்க்கு இன்னின்ன அளவில் இன்னின்ன அநுபானத்தோடு கொடுக்க வேண்டுமென்பது மருத்துவனுடைய பகுத்தறிவிற் கொள்ளப்பட்டிருப்பதுபோல் நோயாளியின் பகுத்தறிவிலுங் கொள்ளப்பட்டிருக்குமா ?

49. இராதாக அதனை அந்நோயாளி வாங்கி யுண்பது தன் பகுத்தறிவாலா ? அம்மருந்துவன்பாற் கொண்ட நம்பிக்கை யாலா ?

50. பகுத்தறிவு துணைபுரியாத சமயங்கள் அநேகம் உள, அச்சமயங்களில் நம்பிக்கையே பெரிதும் உதவக்கூடியதென்பது அதனுல் விளங்கவில்லையா ?

51. சில பல சமயங்களில் நம்பிக்கை மக்களைக் குருடராக்கி விடுகிறதே யென்பீராயின் உம் பகுத்தறிவும் அவ்வாறுக்கு மென் பதை யறிகிலீரா ?

52, சிதம்பரனு ரென்பவரால் எழுதி உம் ஈ-வே-ராவால் அங்கீகரிக்கப்பட்டு 1941-இல் 2-ஆம் பதிப்பாக ஈரோடு குடி யரசுப் பதிப்பகத்திலிருந்து வெளியான 'தமிழர் தலைவர் பெரி யார் ஈ. வே. ரா வரலாறு' என்ற சுவடியில் உம் ஈ. வே. ரா. கோயிலுக்குச் சென்றிருந்த தம் மனைவியைத் தாசி யென்று தம் நட்பினராகிய சில தூர்த்தர்களுக்கு வேண்டுமென்றே காட்டி

அவர்களைக்கொண்டு ஏளனஞ் செய்வித்த செய்தியைப் படித்திருக்கிறீரா ?

53. அவர் கலியாணமாகி இரண்டு வருடங்களுக்குப் பிறகு 'காசியை அடைந்தபோது—ஒரு சத்திரத்தின் வாயிலில் நுழைந்தார். இவர் பார்ப்பனர் அல்ல என்று கண்டு வாயில் காப்போன் வெளியே தள்ளினுன் —அப்பொழுது உள்ளேயிருந்து எச்சில் இலைகளை வெளியே கொண்டு வந்து எறிந்தனர். பார்த்தார் இராமசாமி. கோபம் ஒருபுறம். பசிக்கொடுமை ஒருபுறம்.—ஓடினுர் கோபத்தோடு இலைகளிடம் உட்காந்தார் சட்டமாக. கையைப் போட்டுச் சோற்றை வழித்தார். வாயில் வைத்து வயிற்றுக்குள் தள்ளினுர். இலையில் இருந்த பண்டங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. அவர் பசிப்பிணியும் தணிந்தது.———கையில் ஒற்றைப்பவுண் மோதிரம் இருக்க இச்செயலில் புகுந்(தார்)' என்ற விருத்தாந்தமும் அதில் உள்ளதன்ரு ?

54. தூர்த்தரைக் கொண்டு மனைவியைப் பரிகாசஞ் செய்வித்தல், மோதிரத்தை விற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள மனமில்லாத கிருபணத்துவம், தமிழரெனச்சொல்லிக் கொண்டு எச்சிற் சோற்றையுண்டு மானத்தைப் பறிகொடுத்தல், கோபத்தாற் பகைவராகிய பார்ப்பனரின் எச்சிலென்பதைக் கருதாமை, பிறரெச்சிலையுண்ண அருவருப்புக் கொள்ளாமை முதலிய வெல்லாம் பகுத்தறிவின் விளைவா ? அதற்கு மாருனதொன்றன் விளைவா ?

X. 55. விஞ்ஞானியர் அவ்வப்போது கண்டுவரும் புதுமைகளுக்கு அவர் பகுத்தறிவே மூலமென்பீராயின் அதனை 'Necessity is the mother of invention' என்ற ஆங்கிலப் பழமொழி மறுக்கவில்லையா ?

56. அவர் உலகப் புதுமைகளைக் காணக் காணத் தம்மை வியந்து தருக்கிச் சாமானியரை அப்புதுமைகளில் தோய்ந்து உலக வளத்திற் பேராசை கொள்ளுமாறு செய்யவில்லையா ?

57. இதற்குமுன் நடந்த போர்களிற் காட்டிலும் இப்போரில் உலகமடைந்தது பெருநாசமன்ரு ?

58. அப்பயங்கர நாசத்துக்கு விஞ்ஞானமே காரணமென்பதை எவரே மறுக்கவல்லார் ?

59. எத்துணை உலகப்புதுமைகளைக் கண்டாலும் துய்த்தாலும் மக்கள் துயரம் போமா ?

60. அதனைக்கண்ட புத்திமான்கள் அப்புதுமைகளில் வியப்படைவாரா ?

61. எத்துணைப் புதுமைகளைக் கொண்டதாயினும் உலகம் அருவருக்கப்படவே வேண்டுமென்னும் உண்மையை உலகிற் கறிவுறுத்தும் அத்தெள்ளறிஞரின் முன் அவ் விஞ்ஞானியர் எவ்வளவினர் ?

62. மக்களுக்குத் துன்பத்தையே தராததும் இன்பத்தையே தருவதுமாகிய எப்புதுமையை எவ்விஞ்ஞானி கண்டுபிடித்தான்?

63. விஞ்ஞானம் மக்களுக்கு வேண்டுவன அனைத்தையும் நல்கி உள்ள குறைகள் அனைத்தையும் நீக்கி விடுமா ?

64. துயரங்களுக்கெல்லாம் மூலம் அறியாமை தவிர வேறென்ன ?

65. அஃது அறவே நீங்கும்வரை சுகமேது ?

66. எத்துணைச் சிறந்த விஞ்ஞானமும் தன்னையுடைய விஞ்ஞானியின் அறியாமையை அறவே நீக்கிய துண்டா ?

67. விளக்கு எத்துணைப் பிரகாசமுடையதாயினும் இருளை அறவே போக்காததுபோல் பகுத்தறிவு எத்துணை வளர்ச்சியுற்றதாயினும் அறியாமையை அறவே போக்காதென்பதையும், ஞாயிற்றினொளியொன்றே இருளை முற்றிலும் போக்கவல்லது போலப் பகுத்தறிவுக்கு வேறானதொரு முற்றறிவே அறியாமையை முற்றிலும் போக்கவல்லதென்பதையும் அறிவீரா ?

XI 68. விஞ்ஞானத்துக்குக் குறிக்கோள் ஏது ?

69. அதனையெய்திச் சாந்தி பெற்ற விஞ்ஞானி எவன் ?

ஆக அநுவாதம் 2-க்கு ஆசங்கை 172

3. பொது வுடைமை

அநுவாதம்

உலகிலுள்ள எல்லா மக்களும் உழைக்க வேண்டுவது அவசியம் ஒரு சாரா ருழைப்பில் இன்னொரு சாரார் வாழ்வதென்பது எப்போதும் ஆகாது. முதலாளி உழைப்பாளி யென்கிற வேறுபாடு அறக்கொடிது. மக்களெல்லாருஞ் சமமாக வுழைத்து உலகவள மனைத்தையுஞ் சமமாகப் பங்கிட்டுக்கொள்வதே நெறி. அதற்குத் துணைபுரியும் பொதுவுடைமை யரசுதான் நல்லரசு.

ஆசங்கை

I. 1. செல்வம் மக்களை நல்லவ ராக்குமா? ஆக்காதா?

A. 2. ஆக்குமெனின் செல்வரைப் பழிப்பானேன்?

B. 3. ஆக்காதெனின் பொதுவுடைமை யரசால் எல்லாமக்களுஞ் செல்வராவதிற் பயனென்?

II 4. உலகம் மக்களுக்கு உரியதாதல் பிறப்புப் பற்றியதா? தகுதி பற்றியதா?

A. 5. பிறப்புப் பற்றியதெனின் எல்லார்க்கு மென்பதில் விலங்கு முதலியனவும் அடங்குமா? அடங்காவா?

a. 6. அடங்குமெனின் அவற்றின் நலத்துக்கென அவ்வரசில் வகுக்கப்பட்டுள்ள திட்டங்களெவை?

b. . அடங்காவெனின் அவையும் உலகிற் பிறக்கவில்லையா?

8. மக்களுள் விலங்கினுங் கடையர் மலிந்து கிடப்பதை யறிவீரா?

9. அவர் என்றுயினும் இலராகவாவது சிறுபாலராகவாவது ஆவரா?

10. அவருக்கிருக்கும் உரிமை அவற்றிற்கு ஏனில்லை?

B. 11. தகுதி பற்றியதெனின் அதில் ஏற்றத் தாழ்வுகள் இலவா ?

12, அவை மக்களின் சமத்துவத்தைக் கெடாவா ?

13. அத்தகுதியையும் நீர் ஒழிக்க முற்படாத தென்னை ?

14. தகுதியில்லாதாரும் உலகிற் பிறந்தவரலரா ?

III. 15 உழைப்பவருக்கே உலகவளம் உரித்தெனின் அவருக்கு அது கூலியாகாதா ?

16. அவ்வரசில் ஒருவன் தான் பெறுங் கூலியளவுக் கன்றி அதிகம் உழைக்கிருனென்பது உண்மையா ?

17. அவ்வதிக வுழைப்பின் கூலி அவ்வரசையே யடைவ தில்லையா ?

18. அங்ஙனஞ் சேர்ந்த பொருளை நாட்டின் நன்மைப் பொருட்டேயாயினும் அவ்வரசே செலவு செய்யும் அதிகார முடைய தன்ரு ?

19. அந்நலமாவது உழைப்பவன் மேலு மேலும் உழைத்தற் கென அவனுக்கு அளிக்கப்படும் வசதியா ? அதனின் வேருய தோர் இன்பமா ?

A. 20. வசதியெனின் உழைப்பவன் உழைத்துக் கொண்டே யிருக்க வேண்டுமென்பது தவிர அவனுக்குச் சுகமென வொன் றில்லையென்பது சித்தியாதா ?

21. உழைப்பே சுகமாகுமா ?

B. 22. இன்பமெனின் அஃது யாது ?

23. உண்ணல் உடுத்தல் உறங்கல் ஊர்தல் ஏவல் களித்தல் முதலியனவா ? வேரு ?

a. 24. உண்ணல் முதலியன தானெனின் அவற்றை அறவே வெறுக்கும் அறிஞரை அவற்றின் பொருட்டு உழைக்குமாறும் அவ்வின்பத்தில் தோயுமாறும் வற்புறுத்தல் நீதியா ?

b. 25. வேறெனின் அஃது யாது?

IV. 26. மனிதன் தனியே பிறந்து தனியே சாகிறனென்பது உண்மையன்றே?

27. அப்பிறப் பிறப்புக் கிடைப்பட்ட அவன் வாழ்க்கையை அவ்வப்போதுள்ள சமூகமோ அரசோ எப்படி முழுவதுங் கட்டுப் படுத்தலாம்?

28. ஒரு நாட்டு மக்களை முழுமையாகவும், ஒவ்வொருவனை யும் அதன் உறுப்பாகவும் அந்நாட்டுப் பொதுவுடைமை யரசு வைத்து நடத்துமாயின் அங்குத் தனி மகனுக்குச் சுதந்திரம் இருக்க முடியுமா?

29, உம் ஈ. வே. ரா. சமூகத்துக்கோ அரசுக்கோ கட்டுப் படுகிறரா? அல்லது அவற்றைத் தமக்குக் கட்டுப்படுத்த முயல் கிறரா?

30. சமூகத்துக்கோ அரசுக்கோ கட்டுப்படுபவன் அதனை எப்படித் திருத்தமுடியும்?

31. அதனைத் திருத்தத் துணிபவன் அதற்கெப்படிக் கட்டுப் பட முடியும்?

32. சமூகமோ அரசோ செய்யுஞ் சகாயத்தாலுந் தீராத துன்பங்கள் தனி மனிதனுக்கிலவா?

33. அவ்விரண்டாலன்றி வேறு வழிகளால் வரக்கூடிய இன்பங்களும் அவனுக்கிலவா?

34. அத்துன்பங்களிலிருந்து விடுபடவும், அவ்வின்பங்களை யெய்தவும் அவன் முயன்றல் அவனைத்தடுக்க எந்த அரசுக் கேனும் அதிகார மிருக்கலாமா?

V. 35. பொதுவுடைமை யரசில் சிறை வைத்தல் தூக்கிலிடல் முதலிய தண்டனைகளுக் கிடமுண்டாகுமா?

VI. 36. நாடுதோறும் பொதுவுடைமை யரசு தனித்தனி வேண்டுமா? உலக முழுவதற்கும் ஒரே பொதுவுடைமை யரசுதான் வேண்டுமா?

A. 37. முன்னையதே வேண்டுமெனின் மக்கள் நாடுபற்றிப் பிரிந்தவ ராவா ரல்லரா?

38. இயற்கை வளம் சிறிது மில்லாத நாட்டிற் பிறந்த மக்கள் அது நிறைந்துள்ள நாட்டின் நலத்தைத் துய்ப்ப தெப்படி?

B. 39. பின்னையதுதான் வேண்டுமெனின் அவ்வளமுள்ள நாட்டிற் பிறந்த மக்களை அஃதில்லாத நாட்டிலும், அஃதில்லாத நாட்டிற் பிறந்த மக்களை அஃதுள்ள நாட்டிலும் நூற்றாண்டுகளுக் கொருமுறையாவது மாறிச்சென்று குடியேறி வாழ அவ்வரசு வசதிசெய்து கொடுக்குமா?

40. தனியுடைமை சிறிதுமில்லாமை, பிரயாண வசதி அதிக முண்மையாதியன அக்குடியேற்றங்களைச் சுலபமாக்காவா?

41. அக்குடியேற்றங் கூடாதெனின் மக்களுக்குட் பொறாமையும் பகைமையும் வளராவா?

42. வளமில்லா நாட்டிற் பிறந்த மக்களை அப்பிறப்புப்பற்றி அங்கேயே வாழவைப்பது அவர்களைக் கொடுமைப் படுத்தியதாகாதா?

VII 43. அவ்வரசிற் பிரதிநிதிகளாய் வருவார் நாடுபற்றியா? இனம் பற்றியா? கட்சி பற்றியா? மொழி பற்றியா? பிற பற்றியா?

A 44. இந்தியா சீனு முதலிய நாடுகளோ, திராவிடர் ஆரியர் நிகிரோவர் யூதர் முதலிய இனங்களோ, காங்கிரஸ் ஹிந்து மகா சபை முசிலீம் லீக் முதலிய கட்சிகளோ, பிறவோ பற்றியெனின் அவையெல்லாம் நாடு இனம் கட்சி பிற ஆகியவற்றின் பற்றை நிலைக்கச்செய்து மக்களுக்குள் வேற்றுமையையும் பகைமையையும் விளைவிப்பனவாகலின் ஒழிய வேண்டாமா?

B. 45. மொழிபற்றியெனின் அதனுலுண்டாகிய வேறுபாடு தொலைக்க முடியாததொன்றென்பது தெரிகிறதா?

46, மொழிபற்றிப் பிரிந்துள்ள மக்கட் கூட்டத்தினர் தம் முள் தொகையில் ஏறியுங் குறைந்தும் இருப்பாரல்லரா?

47. அந்த அளவிற்றுனே பிரதிநிதிகளும் அமைவர்?

48. அப்போது அவர்க்குட் பெரும்பான்மைச் சிறுபான்மைச் சண்டை நேராதா?

49. உலகப் பொதுவுடைமையரசுக்கு உலகப் பொதுமொழி அல்லது அரசமொழியென வொன்று வேண்டாமா?

50. அவ்வகையிலும் மொழிப்போர் நிகழாதா?

51. உம் ஈ. வே. ரா. உலகப்பொதுவுடைமை யரசு விருப்ப ரல்லரா?

52. அவர் தமிழரா? வேற்று மொழியினரா?

53. இன்று உலகப் பொதுவுடைமையரசு தொடங்கி விட்டால் தமிழரின் பிரதிநிதியாக அவரையே அனுப்ப முனைவீரா?

54. 'இந்தியா சுதந்தரம் பெற்றுவிட்டாலும் உலக சம்பந்தம் இல்லாமல் இந்தியா வாழ்ந்துவிட முடியாது. வருங்கால வுலகம் தேசத்துக்கு தேசம் நாட்டுக்கு நாடு இப்போது உள்ள தூரத்தில் இருக்காது, கூப்பிடு தூரத்தில் இருக்கப்போகிறது. ஹிந்திக்கு ஆகட்டும், வேறு இந்திய பாஷைக்கு ஆகட்டும் இனி அடுப்பங்கரையிலும் படுக்கை யறையிலுங்கூட வேலையிருக்காது" 'தொழிலாளிக்கும் தொழில் கருவியும் யந்திரமும் இங்கிலீஷ் பாஷையில் தான் இருக்கப்போகிறது. விவசாயிக்கும்——வியாபாரிகளுக்கும் —— அரசியல்காரனுக்கும் அதுபோலவே தான்' என்று 'பகுத்தறிவு' III, 6-இல் அவர் கூறியிருப்பதை யறிவீரா?

55. எதிர் காலத்தில் தமிழ் சாவது திண்ணம் என்று அவர் இப்போதே குறிகண்டு உமக்குஞ் சொல்லி மகிழ்வது அவ்வரிகளால் விளங்க வில்லையா ?

56. அவர் விரும்பும் அத்தமிழ்க்கொலையரசு தமிழருக்கு வேண்டுமா ?

VIII 57. 'Danger of Communism to Islam' என்ற தலைப்பின் கீழ் 'Nawabzada Liaqat Ali Khan sounded a note of warning against the great danger of Communism to Islam. He said that those who believed that through Communism they could secure Pakistan, were greatly mistaken. They might secure Pakistan of the conception of Communism, but they would not secure Pakistan of Islamic Conception' என்றுள்ள வரிகளை 13-5-1945 'இந்தியன் எக்ஸ்பிர' ஸில் படித்தீரா ?

58. நீர் விரும்புவது கம்யூனிஸ (பொதுவுடைமை)த் திராவிட ஸ்தானு? இசுலாமியத் திராவிடஸ்தானு?

A 59. முதலதெனின் இங்குள்ள இசுலாமியத் திராவிடரனைவரும் உமக்குப் பரம சத்துருக்களாவா ரென்பதை யறிகிறீரா ?

B. 60. அடுத்ததெனின் நீர் இசுலாமியராவதோடு எல்லாத் திராவிடரையுமே இசுலாமியராக்க வேண்டாமா ?

IX. 61. உலகமுழுவதும் எனக்கே யிருக்கட்டுமென்றல், உலகத்தை எல்லார்க்குஞ் சமமாகப் பங்கிட்டு எனக்குக் கிடைக்கும் பாகம் போதுமென்றல், உலகம் எனக்குவேண்டவே வேண்டாமென்று அறத்துறத்தல் என்னும் இம்மூன்றில் எதைக்கொண்டால் மனிதன் உயர்ந்தவ னுவான் ?

X. 62. பொதுவுடைமையரசில் மக்கள் ஈசுர விசுவாசத்தைக் கொள்ளலாமா ? ஆகாதா ?

A. 63, ஆமெனின் அந்த விசுவாசத்தை இன்ன அளவிற்றுன் கொள்ளவேண்டும், அவ்வுபாசனையை இன்னமுறையியற்றுன் நிகழ்த்த வேண்டும் என்பனவாதிய கட்டுத்திட்டங்களை அவ்வரசு வகுக்குமா?

64. அவை அவ்வச்சமய வணக்க முறைகளுக்கு மாருய் அமையின் நியாயமா?

B 65. ஆகாதெனின் மக்களின் அறிவுலக வாழ்வில் அவ்வரசு மண்போடுவதாய் முடியாதா?

XI 66. பொதுவுடைமை நாட்டில் ஆடம்பரங்கள் இருக்குமா? இராவா?

A 67. இருக்குமெனின் தனிப்பட்ட மனிதருக்கோ, ஏதேனு மொரு கொள்கையைத் தமக்கெனவுடைய ஒரு கூட்டத்து மக்களுக்கோ உவப்புத் தருவதென அவர் விரும்புங் காரியமே ஆடம்பரமெனப்படுவதன்று?

68. அவ்வரசு தான் விரும்புவதொன்றைத்தான் அவர் ஆடம்பரமெனக் கொள்ளவேண்டுமென நிர்ப்பந்திக்கலாமா?

69. அந்நிர்ப்பந்தத்தாற் கிடைப்பது ஆடம்பரமாகுமா?

70. ஆடம்பரத்துக்கான செலவை அவ்வரசே உதவவேண்டுமன்று?

71. அப்போது ஆடம்பரத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொருளை அவரவர்க்குப் பங்கிட்டுக் கொடுக்குங்கடன் அவ்வரசுக்கில்லையா?

72. தமக்கென ஒரு கொள்கையையுடைய ஒரு சமூகத்தார் அக்கொள்கைக்கேற்ற முறையில் தம் பகுதிப்பணத்தைக் கொண்டு தமக்கு விருப்பமான ஆடம்பரங்களைச் செய்து மகிழ அவ்வரசில் அநுமதிக்கப்படுவாரா?

B. 73. இராவெனின் இன்பத்தில் ஒரு பெரும்பகுதி அந்நாட்டு மக்களுக்கு இல்லாதவாறு அவ்வரசு தடுப்பதாய் முடியாதா?

74. இன்றியமையாத வகையிற் பயன்படுத்தப் பட்டன போக எஞ்சியுள்ள பொன்னும் அபரிமிதமான நவமணிகளும் அவ்வரசில் எப்படிப் பயன்படுத்தப்படும்?

75. அங்கு நவமணிகள் மதிப்பிடப்படுவ தெப்படி?

76. பொதுவுடமை யரசில் மக்கள்' வாழ்க்கையின் குறிக்கோள் என்னே?

XII 77. சர்வாதிகாரம், ஜனநாயகம் (குடியரசு) என்னும் இரண்டுவகை யாட்சிகளுள் நீவிர் விரும்புவது எது?

A 78. சர்வாதிகாரமெனின் அதில் மக்களுக்குப் பேச்சு எழுத்து முதலியவற்றிற் சுதந்திரம் இருக்க முடியுமா?

79. இல்லை யென்பதைக் காட்டிச் சர்வாதிகார நாடுகளுக்குள் முதலதும் உம்மால் மதிக்கப்படுவதுமாயுள்ள ரஷியாவைப் பற்றி "The news-paper (Daily Harold) writes............ 'Russia has no parties in the sense in which we the people of Britain and the United States interpret the words parliament and parties. Russia has no free press or free platforms. A man cannot stand up in Moscow, as he can at Marble Arch.........and criticise the government and hope to obtain publication of independent political views in 'Pravda' or 'Izvesta'" என்றொரு செய்தி 15-9-1945 'இந்தியன் எக்ஸ்பிர' ஸில் வந்துள்ளதை யறிவீரா?

B 80. ஜனநாயகமெனின் 'ஆதலால் சர்வாதிகாரம் என்பதைக் குறை கூறுகிறீர்கள். ஜனநாயகம் என்பதே பித்தலாட்டமான காரியம். அதிலும் நமக்கு அது பித்தலாட்டமும் முட்டாள்தனமானதுமான காரியம்' என்று 25-8-1945 'குடியர' சில் உம் ஈ.-வே.-ரா. ஏன் கூறினர்?

ஆக அநுவாதம் 3க்கு ஆசங்கை 252.

4. சுதந்திரம்.

அநுவாதம்.

மக்களுக்குச் சுதந்திரவாழ்வே சுகவாழ்வாகும். துயரந்தரும் பரதந்திர வாழ்வு ஒழியவே வேண்டும்.

ஆசங்கை.

I 1. சுதந்திர பரதந்திரங்களில் மக்களுக்கு இயல்பாயுள்ளது எது?

A 2. சுதந்திரமெனின் அவர் கண்ணின்றிக் காண்பாரா?

3. கையின்றிச் செய்வாரா?

4. மூர்ச்சை கட்குடி முதலிய நேரங்களிலும் அறிவாற்றலோடிருப்பாரா?

5. அறிவு கெடாமல் உறங்குவாரா?

6. அறிந்தவற்றை அயராமலிருப்பாரா?

7. மரணம் வரையுள்ள எதிர்கால நிகழ்ச்சிகளை அவ்வக் காலத்தோடு பொருந்த முன்னரே அறிவாரா?

8. இடி புயல் முதலிய அமாநுஷ்ய சம்பவங்களுக்கு இரையாகா திருப்பாரா?

9. ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றுவானேன்?

10. ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்பானேன்?

11. நனவிற் கண்டவற்றை அப்படியே கனவிலுங் காணமாட்டாமை ஏன்?

B 12. பரதந்திரமெனின் இயல்பாயுள்ள அது என்றுயினுந் தொலையுமா?

13. ஒருவன் மற்றவனுக்கும், ஒரு சமூகம் மற்றைச் சமூகத்துக்கும், ஒரு நாடு மற்றை நாட்டுக்கும் அடங்கிக் கிடத்தலாகிய பரதந்திரமே ஈண்டு மறுப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதெனின் மேற்கூறப்பட்ட' பரதந்திரங்களால் மட்டில் மானங் கெடாதா?

14. சரித்திரம் சுழன்றுகொண்டிருக்கு மியல்பின தென்பதை யறியிரா?

15. அடக்கிய நாடு அடக்கப்படுவதும், அடக்கிய சமூகம் அடக்கப்படுவதும், அவை மாறி மாறி நிகழ்வதும் சரித்திரப் பிரசித்த மல்லவா?

ஆக அநுவாதம் 4க்கு ஆசங்கை 297.

---

5. சகோதர பாவம்.

அநுவாதம்.

எல்லா மக்களுந் தம்முட் சகோதரபாவங்கோடல் வேண்டும்.

ஆசங்கை.

I **1.** எல்லா மக்களாலும் அப்பனென்றும் அம்மையென்றும் பாவிக்கப்பட வேண்டுவோர் யார்?

2. அவரையே விலங்கு முதலியனவும் அங்ஙனம் பாவிக்கலாமா? ஆகாதா?

A. 3. ஆமெனின் அவையும் மக்கட்குச் சகோதர ரல்லவா?

B. 4. ஆகாதெனின் அவற்றிற்கு அங்ஙனம் பாவிக்கப்பட வேண்டுவோர் யார்?

5. மக்களாவார் விலங்காதியவற்றை எங்ஙனம் பாவித்தல் வேண்டும்?

II 6. மக்கள் சகோதர பாவத்தைக் கோடல் உலக வளத்தைப் பங்கிட்டு கொள்வதன் பொருட்டா? அன்பைப் பெருக்கிக் கொள்வதன் பொருட்டா?

A 7. முன்னையதன் பொருட்டெனின் ஒருவன் வயிற்றிற் பிறந்தவர்களில் அங்கப்பழுதுள்ளவர், புதல்வியர், வைப்பாட்டி மக்கள் முதலியோரும் இருத்தல் கூடுமன்ரு?

8. அவரும் அவ்வப்பன் சொத்திற் பங்கு பெறுவாரா?

9. அரசர் புதல்வர்களில் மூத்தவனுக்கே யன்றி மற்றவருக்கு அரசு கிடைத்தல் உண்டா?

10 ஆகலின் சகோதரத்துவமே மக்களைச் சமபாகத்துக்கு உரியராக்கு மென்னும் உமது கோள் தவறவில்லையா?

11. தனக்குரியவற்றை யெல்லாம் தன் புதல்வரின் நலத்துக்கெனத் தியாகஞ் செய்யும் பித்ருவென நீர் உம்மைப் பாவித்துக் கொண்டு உம் செல்வத்தை யெல்லாந் துறந்து நிற்பதின் மற்றவரைச் சகோதரரெனப் பாவித்துக்கொண்டு அவர் செல்வத்திற் பங்குபோடப் பார்ப்பது இழிவாகாதா?

B 12. பின்னையதன் பொருட்டெனின் பித்ருபாவம், மாத்ரு பாவம், புத்ரபாவம், நாயக நாயகி பாவம், சிநேகபாவம் முதலியவற்றினும் அந்த பாவம் செய்யும் விசேட சாதகம் யாது?

III 13. சமூகம் சாதி சமயம் மொழி நாடு முதலியபற்றித் தனித் தனி யுண்டாகுஞ் சகோதர பாவத்தை மக்களின் பிறப்பொப்புப் பற்றி யுண்டாகவேண்டு மென்னுஞ் சகோதர பாவ சித்தியின் பொருட்டுத் தியாகம் பண்ணிவிட முடியுமா?

14 பண்ணிவிடத்தான் வேண்டுமெனின் மக்களின் உடலொப்புப் (மக்களெல்லாரும் ஓரினம் என்பது) பற்றி யுண்டாகவேண்டு மென்னும் சகோதர பாவத்தைப் 'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும்' என்றபடி நாய் பன்றி கழுதை முதலியனவும் மக்கள் போல் உயிர்களே யாகலின் உயிர்ப்பொதுமை பற்றி யுண்டாக வேண்டு மென்னும் சகோதர பாவத்தின் பொருட்டுத் தியாகம் பண்ண வேண்டாமா?

15. சமூகம் சாதி சமயம் மொழி நாடு உயிர் முதலியவற்றுள் ஒவ்வொன்றுபற்றி உளவாம் சகோதர பாவங்களுள் இறுதியதாகிய உயிர்ப்பொதுமைபற்றி எல்லா ராசிகளுக்குள்ளும் உளதாம் சகோதரபாவத்தை நோக்க ஏனைய சகோதர பாவங்களெல்லாங் குறுகிய மனப்பான்மையின் விளைவுகளாகாவா?

IV 16. மக்கள் பிறர்க்கென வாழவேண்டுமா? தமக்கென வாழவேண்டுமா?

A 17. பிறர்க்கென வாழவேண்டுமெனின் பிறர்க்குச் சுமையாகாதவர்தான் அங்ஙனம் வாழக்கூடியவ ரல்லரா?

18. மேலும் ஒருவருழைப்பில் இன்னொருவரை வாழவிடுவது பொருந்துமா?

19, அவருழைப்பில் இவரும் இவருழைப்பில் அவருமாகத் தானே வாழ்கின்றனரென்பீராயின் அவருக்கு வேண்டுவனவற்றை இவரும், இவருக்கு வேண்டுவனவற்றை அவரும் உழைத்துழைத்துக் கொடுத்துக்கொள்கின்றாரென்பதே கருத்தாகாதா?

20. அங்ஙனமாயின் பிறர்க்கென வாழ்பவரென்று அவரை யெப்படிச் சொல்லலாம்?

21. பிறருழைப்பின் பலனைத் தாம் நுகராமல் தம் முழைப்பின் பலனையே பிறர் நுகருமாறு விடுபவர்தான் பரோபகாரிகளாவா ரென்பது பொய்யா?

22. அவரல்லாதாரின் வாழ்வும் ஒரு வாழ்வாமா?

23. பரோபகாரிகளாவார் தம் உழைப்பின் பயனை வடிவொப்புப்பற்றி மக்களுக்கே வழங்கவேண்டுமென்னும் வரையறையுண்டா?

24. இல்லையாகலின் அவருடைய அன்புள்ளம் மக்களினத்தளவில் அடங்காமல் ஈ மூடு கொதுகு முதலிய பிறவினங்களின்பாலும் நீண்டு செல்லுதல் கூடாதா?

B 25. தமக்கென வாழவேண்டுமெனின் அவர் பிற மக்களைத் தாமும் நேசிப்பாரா?

26. ஆகவே வடிவொப்புப்பற்றி மக்கட் பரப்பினளவுக்கு இவருள்ளத்தைக் கனிவிக்கவும், அவருள்ளத்தை அடக்கிக் கட்டவும் முடியாதென்பதை யறிவீரா?

V. 27. பிறப்பொப்புப்பற்றி மக்களை நேசிக்கவேண்டுமெனின் கார்ல் மார்க்ஸ், லெனின் முதலியோரின் சாவுக்குப்போல ஒரு காட்டான் சாவுக்கும் சமமாகத் துக்கிப்பீரா?

28. ஈ-வே-ராவுக்குப்போல் காந்திக்கும் சமமான மதிப்பை நீர் ஏன் வைப்பதில்லை?

29. அன்னவற்றிற்குக் காரணமான உயர்வு தாழ்வு சகோதர பாவத்தால் ஒழியுமா?

VI. 30. விலங்காதியன தம்முட் சகோதர பாவங்கொண்டா வாழ்கின்றன?

ஆக அநுவாதம் 5-க்கு ஆசங்கை 267

6. சாதி

அநுவாதம்

உயர்ந்த சாதியிற் பிறந்தவரும் தாழ்ந்த சாதியிற் பிறந்தவரும் மக்களே. சாதிப்பிரிவுகளை ஆக்கினவரும் அவர்தான், அவருள்ளும் பார்ப்பனரே அப்பிரிவுகளுக்குப் பெரும்பான்மைக் காரணர். அப்பிரிவுகள் மக்களின் நல்வாழ்வைக் கெடுக்கின்றன. அவை அறியாமையின் விளைவே. பிறப்புப்பற்றிச் சாதிகளை வகுத்து ஒரு சாதியினரை உயர்ந்தோரென்றும் மற்றொரு சாதியினரைத் தாழ்ந்தோரென்றுங் கூறுவது கொடுமை. அப்பிரிவுகள் மக்களுக்குச் சம சந்தர்ப்பம் அளிக்கமாட்டா; ஒற்றுமையைக் குலைக்கும்; ஆகலின் ஒழியவேண்டும்.

ஆசங்கை

I 1. மக்களென்று அவருடலைச் சொல்கிறீரா? அறிவைச் சொல்கிறீரா?

A. 2. உடலையெனின் விலங்கின் உடலைப் பகுத்திடுங்கா ற காணப்படுங் குருதி எலும்பு முதலிய மூலப்பொருள்களே மக்களின் உடலைப் பகுத்திடுங்கால் அதனிடை யுங் காணப்படாவா?

3. அதனோடு இதனிடை வேற்றுமையென்னை?

4. அறிவு விளங்குதற்கு ஏற்ற முறையில் மக்களுடல் அமைந்திருப்பது அதற்கொரு சிறப்பெனில் விளங்கிய அறிவு பெறாத மக்கள் என்றுமே பலரா யிருப்பதற்குக் காரணமென்னை?

5. அவ்வெல்லாரும் மக்கள் வடிவுகொண்ட விலங்குகளாகாரா?

B. 6. அறிவையெனின் அவ்விலங்குகளின் அறிவுக்கும் பிறவிலங்குகளின் அறிவுக்கும் வேற்றுமை யென்னை?

7. விளங்கிய அறிவுடையாரெனப்படும் இரண்டொருவரைத் தவிர்த்துப் பிறரனைவரையும் மக்களென நீர் சிறப்பித்து ஓதுவதேன்?

II. 8. சாதி முந்தியதா? சாதியினர் முந்தியவரா? இரண்டும் முற்பிற்பா டில்லாதனவேயா?

A 9. சாதி முந்தியதெனின் பார்ப்பனச் சாதியும் அச்சாதியினர்க்கு முந்தியதாகாதா?

10. ஆயின் பார்ப்பனருக்கு முந்திய பார்ப்பனச் சாதியைப் பார்ப்பனரே ஆக்கிக்கோடல் எப்படிக்கூடும்?

11. மற்றைச் சாதிகளைத்தான் பார்ப்பனர் வகுத்தனரெனின் பார்ப்பனச் சாதியை வகுத்தவர் யார்?

B 12. சாதியினரே முந்தியவரெனின் சாதிக்கு முன்னர்ச் சாதியினர் எப்படி உளராயினர்?

C. 13. இரண்டும் முற்பிற்பா டில்லாதனவேயெனின் ஒரு சாதியினும் அகப்படாதவர்தான் பார்ப்பனச்சாதி முதல் எல்லாச்

சாதிகளையும் ஆக்கியிருத்தல் வேண்டுமென்பது புலப்பட வில்லையா?

III 14. பார்ப்பனருள்ளும் பல பிரிவுகள் உளவாகி அவை தம்முள் உடனுண்ணல் கொண்டுகொடுத்தல் தீண்டுதல் முதலியன செய்யாமையை யறிவீரா?

15. அப்பிரிவுகளுக்குக் காரணம் யார்?

IV 16. சாதிகளெல்லாம் ஒரே காலத்தில் உளவாயினவா? முன்பின்னாக உளவாயினவா?

A 17. ஒரே காலத்திலெனின் அக்காலத்துக்கு முன் ஒன்றுபட்டிருந்த மக்களெல்லாருமே சாதிகளை உளவாக்கி ஒவ்வொரு சாதியிலும் பலர் பலராய் நுழைந்துகொண்டனரென்பதே சித்தமன்றோ?

18. ஆயின் அவ்வொன்றுபட்ட காலத்தில் முறையே சிரைப்பு, வெளுப்பு, மேய்ப்பு, கொல், உழவு முதலிய வுத்தியோகங்களை வகித்துவந்த அப்பன், மகன், ஐயன், தம்பி, மாமன் முதலியோர் சாதிப்பிரிவுகள் உளவானதும் எதிர்காலத்தில் தமக்குள் உறவு முறிந்தேவிடுமாறு பிரிந்து விடுதல் சாத்தியந்தானா?

B. 19. முன்பின்னாகவெனின் அவற்றிற்குக் காலவரிசை காட்டுவீரா?

20. ஒரு காலத்தில் ஒருசாதி யுண்டாயின் அச்சாதியினரோடு பிறமக்களும் அக்காலத்திலேயே உளரென்பது பெறப்படாதா?

21. ஆயின் அவர்களும் வேறு சாதிமக்களாயினதிற் சந்தேகமென்னை?

V 22. சாதிப்பன்மை விளைந்தது அறிவிலா? அறிவுப்போலியிலா? அறியாமையிலா?

A 23. அறிவிலெனின் அதனைப் போற்றவேண்டுவது உம் கடனாகாதா?

B. 24. அறிவுப் போலியிலெனின் அறிவின் விளைவு யாதாகற் பாலது ?

25. அப்பன்மையின் ஒழிவே யாகற்பாலதெனின் அவ் வொழிந்த நிலை விலங்கு முதலியவற்றினிடமே உள்ளதன்று ?

26. மக்களையும் மாக்களாக்குவது அறிவாமா ?

C 27. அறியாமையிலெனின் விலங்கு முதலியவற்றினிடம் அஃது ஏன் விளையவில்லை ?

VI 28. விலங்குயிர் மனிதவுயிர் என உயிர்களில் வேறு பாடுளதா ?

29. இல்லையாகலின் மக்களினப்பற்று (Love of Humanity) என்பது பிறப்பொப்புப்பற்றிய செருக்காகாதா ?

30. மக்கட் பிறப்பே உயர்ந்தது, விலங்குப் பிறப்புத் தாழ்ந் தது என்று பிறப்புப்பற்றிய வுயர்வு தாழ்வைக்கொண்டு உலக மனைத்தையும் ஏனையவுயிர்களுக்கு இலதாக்கி மக்களுக்கே தம் வடிவ விலங்குகளுக்கும் விலக்கின்றி உரித்தாமாறு வளைந்து கொள்ள நீர் எத்தனிப்பது அச்செருக்கின் வழித்தாய வன்கண்மை யாகாதா ?

31. அவ்விலங்காதியவற்றையும் உமக்கு உடைமையாக்கிக் கொள்ள நீர் யார் ?

32. மாக்களை மக்கள் கொன்றுதின்பது அதிகமா ? மக்களை மாக்கள் கொன்றுதின்பது அதிகமா ?

33. மக்கள் மாக்களுக்கும், மாக்கள் மக்களுக்கும் செய்கிற பொல்லாங்குகளை இவ்வளவெனக் கணக்கெடுத்து அவற்றின் ஒரு நாட் சராசரி விழுக்காடு இத்துணையெனக்கண்டு அதைக் கொண்டு மக்கள் பொல்லாதவரா அல்லது மாக்கள் பொல்லா தனவா என்ற வினாக்களுக்குச் சரியான விடை கூறுவீரா ?

VII 34. தொழில்களெல்லாம் உலகவாழ்வை யொட்டியனவே யல்லவா ?

35. அவை தம்மளவிற் சாதிப்பிரிவையாக்க வல்லனவா?

36 கவர்னர்களை மருத்துவர்களை மடைத்தொழிலாளர்களை அவரவரின் உத்தியோகங்கள் தனித்தனிச் சாதியினராகப் பிரித்து விடுமா?

37. குடித்தனம், மணமாகாதவளை மணத்தல், சைவவுணவு முதலியன சதாசாரங்களெனச் சிலராலோ பலராலோ கொள்ளப் படுவன அல்லவா?

38. அவற்றை அவர் தத்தமுள் ஒன்றுபட்டுப் பரம்பரை யாகப் பரிபாலித்து வரவில்லையா?

39. அவற்றுக்கு மாறான விபசாரம், விபசாரிகளை மணத் தல், மணந்தவளை மணத்தல், புலாலுணவு முதலியவற்றைத் துராசாரங்களென அவர் ஒதுக்குவதில்லையா?

40. அவற்றை வேறு சிலரோ பலரோ தம்முட்கூடிப் பரம் பரையாகப் போற்றிவர வில்லையா?

41. சதாசாரமுடையார் துராசார முடையாரோடு கலந்து கொண்டு தம் ஆசாரங்களைக் காத்துவர முடியுமா?

42. 'நிலத்தியல்பால்......' என்ற குறளை யறிவீரா?

43. எளிதிற் படிவன துராசாரங்களா? சதாசாரங்களா?

44 ஆகவே துராசாரமுடையாரினின்றும் சதாசார முடை யார் தம்மாசார பரிபாலனத்தின் பொருட்டே விலகி வாழ்கின்று ரென்பதும், துராசார முடையாரும் அச்சதாசாரங்களின் மேல் வைத்த கௌரவ புத்தியாலேயே அவ்வாழ்க்கைக்கு இடங் கொடுத்துளா ரென்பதும் புலப்படவில்லையா?

45. உலகிற்கு அவ்வுண்மையை மறைத்துத் துராசார கூட் டத்தினரை விலங்கினுங் கடையரென அவர் அவமதித்தே விலகி வாழலாயினரென்று தூர்த்தப் பிரசாரஞ் செய்வது யோக் கியமா?

46. அங்ஙனம் அவமதித்தொழுகும் புத்தி அவருக் கிருந் திருக்குமாயின் அவர் அன்றே துராசாரமுடைய கூட்டத்தினரால் நாசமாக்கப் பட்டிராரா ?

47. சதாசார கூட்டத்தினர் தம்முட் கூடிவாழ்ந்து பரஸ் பரம் உதவிசெய்துகொள்வதாற்றான் அவ்வாசாரங்கள் நிலையுதல் கூடுமென்பது உமக்கு விளங்கிலதா ?

48. அவர் தம் துராசாரங்களுக்கியைந்த தொழில்களையே உலகவாழ்வின் பொருட்டுச் செய்துவர விரும்புவரென்பது தெரி கிறதா ?

49. அவ்வாசாரம் தொழில் என்னும் இரண்டையும் ஒரு சமூகம் பரம்பரையாகக் கையாண்டு வருமாயின் அது தனிக் கூட்டமாவதில் தடையென்னை ?

50. ஆகவே ஆசாரம், அதற்கேற்புடைய தொழில், அவ் விரண்டற்குந் துணைபோய பரம்பரையென்னும் பிறப்பு என்னும் மூன்றுஞ் சேர்ந்துள்ள கூட்டமே சாதியெனப்படுமென்பதைக் காண முடியவில்லையா ?

51. துராசாரம், அதற்கியைந்த தொழில், அவ்விரண்டற் குந் துணைபோய பரம்பரையென்னும் பிறப்பு என்பன சேர்ந் துள்ள கூட்டம் ஏன் வேறு சாதியாதல் கூடாது ?

VIII. 52. உலகில் துராசார கூட்டத்தினர் மிகப் பெரும்பாலா ரல்லரா ?

53. சதாசார கூட்டத்தினர் மிகச்சிறுபாலா ரல்லரா ?

54. அப்பெரும்பாலார் பகையாத காலத்திற்றானும் அவரின் நெருக்கத்தி லிருந்துகொண்டு அச்சிறுபாலார் தம் ஆசாரத்தை அரும்பாடுபட்டுப் போற்றி வந்திருப்பாரென்பதை யுணர உம் உள்ளத்தில் ஆற்ற லில்லையா ?

55. பகைமையை வளர்த்துக்கொண்டு சாதி வேற்றுமையை யொழிக்க வேண்டுமென்ற வியாஜத்தால் அப்பெரும்பாலாரை

அச்சிறுபாலார்மேற் பாயவிட்டு அவருடைய சதாசார வாழ்வுக்கு ஹானி சூழ்வதுதான் மக்களியல்பா ?

56. சாதியை யொழிக்கவேண்டுமென்கிற நீர் முதலில் துராசாரங்களை அப்பெரும்பாலாரிட மிருந்து களையவேண்டாமா ?

57. துராசாரங்களை யொழித்த பிறகாவது சாதிகளை யொழிக்க முயலலாகாதா ?

58. துராசாரங்களைச் சதாசாரங்களேயெனப் பிரசங்கியாமலாவ திருக்கின்றீரா ?

59, 'டாக்டர் வரதராஜுலுவும் யானும் குறிப்பிட்ட வேறு சிலரும் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் விருந்தினரா யிருந்தோம்.........டாக்டர் வரதராஜலு நாயுடு பந்தியிலே தமக்கென்று புலாலுணவை வரவழைத்தார். தண்டபாணி அதைத் தடுக்க முயன்றார். பந்தியில் எல்லோருஞ் சைவ வுணவு கொள்ளும் வேளையில் ஒருவர்மட்டும் புலால் வரவழைப்பது நாகரிகமாகுமா என்பதைப்பற்றிப் பெரிய விவாதம் மூண்டது,' 'புலாலுண்ணாருடன் சாப்பிடும்போதும் நாயுடு புலாலுணவைக் கொணர்வித்து உண்பவரென்று கேள்வியுற்ற துண்டு. அக்கேள்வி கோவையிலும், ஆர்க்காட்டிலும் காட்சியாயிற்று. ஆர்க்காட்டில் அதுபற்றிப் பெருத்த விவாதம் எங்களுக்குள் நடந்தது, "யான் 'விருந்தில் சைவ மணங்கமழ்தல் வேண்டும்.......சாதியைப்பற்றிய கவலை எனக்குக்கிடையாது. யான் சாதி கடந்தவன்' என்றேன். தோழர் வாடியா சைவப்பகுதியில் என்னுடன் உணவருந்தினர். அவர் இலையில் கோழிமுட்டை காணப்பட்டது, அதைப்பற்றி அவரும் யானும் உரையாடினேம்" என்று திரு. வி. க. தம் 'வாழ்க்கைக் குறிப்புக்க'ளிற் சொல்லி யுள்ளதை யறிவீரா ?

60. அவரே, அவர்போன்றாரே நாள் ஏற ஏற உள்ளத்தில் உரங்கெட்டு அப்பெரும்பாலாரின் துராசாரங்களையே தமக்கும் ஆசாரங்களாமெனக் கொண்டு ஏன் தம் வாழ்வை யிழக்க மாட்டார் ?

61. இதுவரை அவர் அங்ஙனம் ஆகவில்லையென்றுதான் எப்படிச் சொல்லமுடியும் ?

62. இவ்வுலகில் ஆசாரவாழ்க்கைக்கு இடமேயில்லையா?

IX. 63 தாழ்ந்த சாதியினருள் இரண்டொருவர் சதாசாரமுடையரா யிருந்தால் அவரை உயர்ந்த சாதியினரோடு சேர்த்துவிடலாமே யென்பீராயின் தாழ்ந்த சாதியினரை நீரே யவமதிக்கின்றீரென்பது விளங்கவில்லையா?

64. அம்மனவலியுடையர் தம் சாதியினரோடிருந்துகொண்டு அவரையுந் திருத்துவதே முறையாகாதா?

65. அம்முறையில் உயர்ந்த சாதியினருள்ளும் சிற்சில துராசாரமுடையார் காணப்படலாமாகலின் அம்மனவலி குன்றியார் விரைவில் திருத்தம் பெருவிடில் அவரை அச்சாதியிலிருந்து ஒதுக்கிவிடலாமன்று?

66. மக்களின் நலத்தின்பொருட்டே சதாசாரங்கள் உளவாயின வல்லவா?

67. அவற்றை அவர் குலைக்கலாமா?

68. கால தேச வர்த்தமானங்கட் கேற்ப அவை மாற்றிக் கொள்ளப்படும் அத்துணையேயெனின் குலைத்த லென்பதற்கும் அதற்கும் வேற்றுமை யென்னை?

69. முக்காலத்துக்கும் வேண்டப்படும் அவ்வாசாரங்களை அவ்வக்காலத்துத் தோன்றியொழியும் மக்கள் தாமுள்ளளவும் ஓம்பித் தம் சந்ததிகளுக்கு வழங்கிப்போவதன்மேல் அவர் ஏதேனுஞ் செய்தற்கு எங்ஙனம் அதிகார முடையார்?

70. சாதிப் பிரிவில்லாத நாடுகளில் சதாசாரங்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்படுகிறதா?

71. எல்லாரும் மக்கள்தானே யென்னும் பொதுமையைக் காட்டிச் சதாசாரமுடையாரின் வாழ்க்கையில் மண்போடத் துணிவது துராசாரமுடையாரின் அழுக்காற்றுள்ளத்தைக் காட்டாதா?

72 தன் தாய்க்கும் மனைவிக்கும் பெண்மையென்னும் பொதுமை யிருப்பதை ஒருவன் தன் தாய்க்கு எடுத்துக்காட்டி அவளைப் பெண்டாளுவதும், தன் மனைவிக்கு எடுத்துக்காட்டி அவள் காலில் வீழ்ந்து வணங்குவதும் செய்யலாமா?

X 73. ஒருவன் பிறந்தது முதற் சாகுர்வரையே அவனுயிர் உள்ளதா? அவன் பிறக்குமுன்னும் செத்தபின்னருங்கூட அஃதுள்ளதா?

74. அவ்வாராய்ச்சியை யடியாகக்கொண்டே சம சந்தர்ப்பமென்னுந் தொடர் பொருளுடையதாகற் பால தென்பதை யறிவீரா?

75. 'Birth is not just an accident. Every man has to reap the fruits of his 'karma'. Life and death are in God's hands' என்று 31-5-1945 'இந்தியன் எக்ஸ்பிர'ஸில் காந்தி சொன்னது அவ்வுண்மையை வற்புறுத்த வில்லையா?

76. அவ்வச்சாதியினரின் ஆசார வாழ்க்கைக்கு இடையூறு நேராதவாறு எல்லாச்சாதியினர்க்கும் அவரபிவிருத்திப் பொருட்டுச் சமசந்தர்ப்பங் கொடுப்பதைத் தடுப்பவரார்?

XI 77. சாதிகள் தோன்றிய நாள்தொட்டு இந்நாள்வரை சாதி பற்றிய போர் நிகழ்ந்த காலம் மிகுதியா? நிகழாத காலம் மிகுதியா?

XII 78 இந்நாட்டில் உயர்ந்த சாதியான் தன் மகளைக்கொடுக்கத் துணிந்தாலும் தாழ்ந்த சாதியான் அவளை மணக்கும் வழக்கம் உண்டா?

79. உயர்ந்த சாதியான் மணந்துகொள்ளத் துணிந்தாலும் தாழ்ந்த சாதியான் தன் மகளை அவனுக்குக் கொடுக்கும் வழக்கம் உண்டா?

80. அதனுல் ஒவ்வொரு சாதியும் தன்னுசாரத்தையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்துவருகிறதென்பது விளங்கவில்லையா?

XIII 81. உட்பேதங்களை இலவாக்கினுற்ருன் பொதுப்பகையை வெல்லவும், பொது நலத்தைப்பெறவும் முடியுமா?

82. பொதுப்பகையென்ற பிரஞ்ஞையும், பொது நலமென்ற ஆசையும் இருப்பது போதாதா?

83. தாழ்ந்த சாதியாரின் உள்ளத்திலுள்ள அழுக்காறும், உயர்ந்த சாதியாரின் உள்ளத்திலுள்ள செருக்கும் நேரிய முறை

யிற் களையப்பட்டால் சாதிபேதங்கள் அந்தப் பிரஞ்ஞைக்கும் ஆசைக்கும் இடையூறு செய்யக்கூடுமா ?

XIV 84. எல்லாச் சாதியினரும் மக்களாவதில் வேறு படாதது போல எல்லா ஆடவரும் பெண்டிரும் முறையே ஆடவராதற் றன்மையிலும் பெண்டிராதற் றன்மையிலும் வேறு படாதவரல்லரா ?

85. சாதிப்பிரிவை வேண்டாத வுமக்கு அப்பன் ஐயன் கணவன் தாய் தங்கை மனைவிமுதலிய முறைப்பிரிவு மட்டில் ஏன் ?

86. சாதிப்பிரிவாற் பயனொன்று மில்லையென்பீராயின் முறைப்பிரிவாலாவது பயனுண்டா ?

87. அதுவும் பயனற்றதுதானென்றதே உம் கொள்கையென்பதற்கு உம் ஈ-வே-ரா 2-6-1945 'குடியர' சில் எழுதிய 'உறவுமுறை' என்ற கட்டுரையே சான்றாகாதா ?

88. காதல் மணம் வாழ்வின் உயிர் நிலையென்பது உமக்குக் கொள்கை யன்றோ ?

89. அம்மணத்துக்குச் சாதிப்பிரிவு செய்யுங் கேட்டினும் முறைப்பிரிவு செய்யுங் கேடு சிறிதோ ?

90. கணவன் மனைவியாவோர் தம்முட் காதல்கொள்வதற்கு முன் நன்கு பழகி ஒருவரியல்பை யொருவர் அறிந்தவரா யிருத்தல் வேண்டுமென்று நீர் சொல்வதில்லையா ?

91. தமையன் தங்கைமாரிடம் அதற்குரிய அவகாசம் மிகுதி யன்றோ ?

92. தமையன் தங்கையை மணந்தால் 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்' அவனுக்கு அவள்மாட் டில்லாமற் போகுமா ?

93. சற்புத்திரர்தான் பிறவாமற் போவரா ?

94, பின்னை ஏன் உம்மவருள் தமையன் தங்கையைக் காதலித்து மணப்பதில்லை ?

95. முறைப்பிரிவை யொழிப்பதற்கும் நீர் பிரசாரஞ்செய்ய வேண்டாமா?

XV 96. அப்பன் சொத்துக்கு மகன் உரியனுதல் பிறப்புப் பற்யதா? பிறிது பற்றியதா?

XVI 97. பெற்ருேர்பாலுள்ள அறிவு அழகு ஆண்மை நோயின்மை பெருந்தகைமை முதலிய நலன்கள் பிள்ளைகள்பாலும் இறங்குதல் உண்டா? அன்ரு?

A. 98. உண்டெனின் பிறப்பால் தாரதம்மியங்கோடல் அவசியமாகாதா?

B. 99. அன்றெனின் குழந்தைகளின் உடல்நல முதலியவற்றைக் கெடுத்துவிடுமெனக் கூறி இளமணத்தைக் கண்டித்தல், கர்ப்பத்தடையை யாதரித்தல் முதலியவற்றை ஏன் செய்கிறீர்?

XVII 100. கற்பு வாழ்க்கை கடினமென்பதையும், விபசார வாழ்க்கை சுலபமென்பதையும் அறியமுடிகிறதா?

101. கற்பரசிகளும் விபசாரிகளும் பிறப்பொப்பாற் பெண்டிர்தானே யெனப்பேசிக் கற்பரசிகளின் சமூகத்தில் விபசாரிகளையும் சேரவைத்து மதிக்கலாமா? ஆகாதா?

A. 102. ஆமெனின் கற்பரசிகள் தமக்கும் வேசிகளுக்கும் சமூகத்திற் சமமதிப்புத்தானே யிருக்கிறதெனக் கண்டால் தம் கற்பைக் கஷ்டப்பட்டுக் காத்துந் தமக்குரிய மரியாதை யங்கீகரிக்கப்படவில்லையே யெனக்கருதிச் சோர்வடைதல் கூடுமன்ரு?

103. அங்ஙனமாயின் அவர்களும் விபசாரத்தொழிலை மேற்கொள்ள ஏன் துணியார்?

104. துணியட்டுமேயெனின் அங்ஙனங் கூறுவார் தம் தாய் மனைவி மகள் உள்பட உலகத்துப்பெண்டிரனைவருமே வேசிகளாக வேண்டுமென்று விரும்பினவராக மாட்டாரா?

105, அங்ஙனம் விரும்பினுலுங் குற்றமில்லையெனின் 'அப்பன் வருவா னதன்பின் மகன்வருவான்—தப்பு முறையென்று

தள்ளர்தே' என்றபடி விபசாரிகளான தம் தாய் முதலியவரைத் தாமும் புணர்ந்து மகிழலாமென்ற கொள்கையையுடைய தூர்த்த ரல்லரா அவர் ?

B. 106. ஆகாதெனின் பிறப்பொப்பென்னும் பொதுமையை நீர் விடுவதுதான் உமக்கு மானம் என்பது ஏன் தெரியவில்லை ?

XVIII 107. உத்தமிமகனுக்கும் வேசிமகனுக்கும் பிறப்புப் பற்றிய உயர்வு தாழ்வில்லையா ?

108, 'அயோக்கியத்தனமாய் தன்னைப்பெற்ற தாயாருக்கு பண வரும்படிக்கு மாப்பிள்ளை தேட முச்சந்தியில் நிற்கும் மாஜி குச்சிக்காரிகள் பிள்ளைகள்போல்.....' என்று உம் ஈ-வே-ரா சொன்னதைப் 'பகுத்தறிவு' III, 8, 9, இல் படித்திருக்கிறீரா ?

109. அவ்விருவர்க்கும் பிறப்புப்பற்றிய உயர்வு தாழ்வில்லை யாயின் 'குச்சிக்காரிகள் பிள்ளைகள்' என்பது அவர் வாயில் ஏன் ஏசற் பிரயோகமாய் வந்தது ?

110. வேசிமகன் மானமுள்ளவனாயின் தன் பிறப்பின் இழி தகைமைக்கு நாண மாட்டானா ?

111. 'யான் இதனைச் செய்யாதொழிவனேல் என் அப்ப னாகிய இவனுக்குப் பிறக்கவில்லையென உலகம் என்னைப் பழித் திடுக' என்னுஞ் சபதம் பிறப்புப்பற்றிய உயர்வில்லாதவனுக்கு ஏது ?

112. '———தமிழ் மக்கள்———பல ஜாதியார்க்குப் பிறந்த கூட்டத்தோடு செல்வாரைப்போல———செந்தமிழின் சிறப்புக் குக் கேடு செய்கின்றனர்' என்று S. S. பாரதியார் M. A. B. L. 'பகுத்தறிவு' III, 11-இல் கூறிச் சாதிக்கலப்பாற் பிறந்த மக் களை அப்பிறப்புப் பற்றிப் பரிகசிப்பானேன் ?

113. 'நாம் ஒரு இனம் என்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் நாம் ஒருவகுப்பு மக்கள் என்று ஆகாமல் ஒரு இனமக்கள் என்று சொல்லிக்கொள்வதால் ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. ஆத லால் ஒவ்வொவருவரும். இம்மாதிரி ஒருவகுப்பாக ஆக முயல வேண்டும். பிரியவேண்டிய அளவுக்குமேல் பிரிந்து விட்டோம்'

என்று உம் ஈ. வே. ரா. 9-6-1945 'குடியரசி'ற் கூறியது மக்களுக்குள் வகுப்புப்பேதம் வேண்டுமென்பதை ஆதரிக்கவில்லையா?

XIX 114. திராவிடர் ஆரியர் என்ற வகுப்புப் பேதத்தை நீர் கொண்டது அதன்படிதானு?

115. ஆயின் அப்பேதம் பிறப்புப் பற்றியதா? பிறிது பற்றியதா?

A. 116. பிறப்புப் பற்றியதெனின் உம் கொள்கைக்கு அஃது ஏற்புடைத்தாமா?

117. திராவிடப் பெண்டிருள் வேசிக்கூட்டத்தினர் இலரா?

118. அவருட் சிலர் ஆங்கிலேயரைக் கூடிப்பெற்ற சந்ததிகள் ஆங்கிலோ திராவிடரும், மற்றுஞ் சிலர் ஆரியரைக் கூடிப் பெற்ற சந்ததிகள் பார்ப்பனரும் ஆவாரென்று உம் ஈ-வே-ரா சொன்னதை 25-2-1945 'திராவிட நாடு' விற் கண்டீரா?

119. தமிழ்நாட்டிற் பின்னருள்ள திராவிட வேசியர் அவ்வாங்கிலோ திராவிடரையோ, பார்ப்பனரையோ மற்றுள்ள வேற்றினத்தாரையோ கூடிச் சந்ததிகளைப் பெறுகின்றாரல்லரா?

120. திராவிடரல்லாத பிறவினத்துப் பெண்டிராகிய பார்ப்பனிகள் முதலியோருள்ளும் விபசாரிகளாய்ப் போனவர் திராவிடராதி பல இனத்தவரைக் கூடிச் சந்ததிகளைப் பெறுவதின்று?

121, அவ்விருவகைச் சந்ததியினரையும் திராவிடரேயெனக் கருதி நீர் உம் கூட்டத்திற் சேர்த்துக் கொள்ளவில்லையா?

122. அவரெல்லாந் தூய திராவிடர்தானு?

123. தூயகுலத் திராவிடர் உம் கூட்டத்திற் சேர்ந்தால் அவருக்கு மானந் தங்குமா?

124. நீர் ஒருவகுப்பாரை ஆதித்திராவிடரெனக் கூறுவதேன்?

125. மீதித்திராவிட ரெல்லாரும் மத்தியத் திராவிடரா?

126. அவர் கலப்புப் பிறப்பினரென்பதை நீர் அங்கீகரித்தி ராக மாட்டீரா?

127. எந்த எந்த வகுப்பார் கலப்பு மணத்தையாவது செய்து கொண்டு அவரைப் பெற்றனர்?

128. அந்த மணம் நடந்தமைக்கு ஆதாரமென்ன?

129. மணத்தின் வழியன்றிப் பிறந்த கலவைப் பிறப்பின ரெல்லாம் விபசாரி மக்களல்லரா?

130. ஆதித்திராவிடரென ஒரு சாரார் பிரிக்கப்பட்டதைச் சரியென நீர் உடன்பட்டீராயின் மீதித் திராவிடரனைவரும் அன் னர்தா னென்பதையும் உடன் பட்டீராக மாட்டீரா?

131. அங்ஙனமாயின் அத்திராவிடர் சூத்திரர்தானென்று சூத்திரரென்னும் பதத்திற்கு நீர் கற்பிக்கும் பொருளையே வைத் துப் பார்ப்பனர் கூறினுற் குற்ற மென்னை?

132. ஒருக்கால் அம்மீதித்திராவிடர் வெளிநாட்டிலிருந்து இத்தமிழ்நாட்டில் வந்து குடியேறியவரென்பீராயின் இக்காலே அரசியல் உலகில் ஏற்கப்பட்டிருக்கும் Quit India Policy, Quit Asia Policy என்பவற்றின்படி அவரும் இத்தமிழ்நாட்டை அவ் வாதித்திராவிடரிடங் கொடுத்துவிட்டு வெளியில் ஓடவேண்டு பவரே யல்லரா?

B. 133. பிறிது பற்றியதெனின் அஃதெது?

134. 'நான்... ..திராவிடர் ஆரியர் என்று உடல்கூறு சாஸ் திரப்படி பரீட்சித்து அறிந்து பிரித்துப்பேசுவதாகக் கருதாதீர் கள். அல்லது திராவிடருக்கு என்று ஏதோ சில தன்மைகளை எடுத்துச்சொல்லி அதைச் சரித்திர ஆதாரப்படி மெய்ப்பித்துச் சொல்லுவதாகக் கருதாதீர்கள். இவைகள் எப்படி இருந்தாலும் ——சரி நம்மை இன்றைய இழிவிலிருந்து——தாண்டிச் செல்ல நமக்கு ஒரு குறிச்சொல்வேண்டும். சுயராஜ்யம் என் ருல் எதைக்குறிக்கிறது? பாகிஸ்தான் என்ருல் எதைக்குறிக்

கிறது? மோக்ஷம் என்றால் எதைக்குறிக்கிறது?—என்று பார்த்தால் அவை ஒருகருத்தை, ஒருவிடுதலைத் தன்மையை, ஒருபயனை அனுபவிப்பதை எப்படிக் குறிப்பிடுகின்றனவோ அப்படிப்போல் நம்மை இழிவிலிருந்து விடுதலைசெய்து ஒரு முற்போக்கை—— குறிப்பிட ஏற்படுத்தியிருக்கும் சொல்லாகும். ஆதலால் வார்த்தையின் பேரில் வழக்காட வேண்டியதில்லை.———ஆகவே திராவிடர் என்பது நமக்கு ஒரு குறிச்சொல், லட்சியச்சொல் ஆகும்,———ஆரியம் என்றால் மாற்றத்திற்கு இடமில்லாதது திராவிடம் என்றால் மாற்றிக்கொள்ள இடமளிப்பது என்பது தான் உண்மை தத்துவமாகும்' என்று உம் ஈ-வே-ரா 14-7-1945 'குடியர'சில் திராவிடம் என்பதற்கு ஒரு புதுப்பொருள் கற்பித்துக்கூறினரே ; அதுவா ?

135. மாற்றிக்கோடல் என்பது புரட்சி அல்லது புரட்டு என்பதாகாதா ?

136. இங்கிலாந்து பிரான்சு ரஷியா முதலிய தேசங்களில் அப் புரட்டர்கள் இலரா ?

137. அவ்வத் தேசத்துப் புரட்டர் தத்தம் தேசத்தையே தமக்குச் சொந்தமாகக் கொண்டிலரா ?

138. அவ்வெல்லாத் தேசங்களிலுமுள்ள புரட்டரனைவருங் கூடித் தமக்கென ஏதேனுமொரு பொதுஸ்தானத்தை விரும்புகின்றனரா ?

139. அவ்வத்தேசத்துப் புரட்டர் தம் தம் தேசப்பெயர்க்குப் புரட்டு எனப்பொருள் கூறித்திரிகின்றனரா ?

140. திராவிடர்மட்டில் திராவிடம் என்பதற்குப் புரட்டெனப் பொருள் கற்பித்துக்கொண்டு தமக்கொரு திராவிடஸ்தானை ஏன் விரும்பவேண்டும் ?

ஆக அநுவாதம் 6-க்கு ஆசங்கை 437.

———

7. தீண்டாமை

அநுவாதம்

தீண்டாமை தீண்டப்படாத சாதிக்கு அவமானந் தருகிறது, பொது நிலயங்களில் விலங்குகளுக்கிருக்கும் உரிமையைத்தானும் அச்சாதிக்கில்லாதவாறு தடுக்கிறது, ஆகலின் ஒழியவேண்டும். ஒருவரையொருவர் தீண்டிக்கொண்டு வாழ்வதால் கெடுவதொன்றுமில்லை. நலமே விளையும்.

ஆசங்கை

I. 1. நீர் வெறுப்பது மெய்யால் தீண்டாமை யொன்றேயா? பிறபொறிகளால் தீண்டாமையுமா?

II. 2. ஜனனம் மரணம் ரஜஸ்வாலை யென்னும் இக்காலங்களில் ஒரு சாதி தனக்குள்ளேயே தீண்டாமையைக் கொள்வதில்லையா?

3. அத்தீண்டப் படாதார்க்குப் பிறர் தம்மை அவமானப் படுத்துவதாக எண்ணமா?

4. அத்தீண்டாமை சில பொழுதே நிகழ்வதாயினும் அவ்வளவிலும் அவமானப்பட யாரே சம்மதிப்பார்?

5. சிலர் முனைப்பால் தீணடவரினும் அத்தீண்டப்படாதார் அவரைத் தடுப்பதேன்?

6. அத்தீண்டாமை அச்சாதிக்கு ஏற்புடைத் தாயதோர் குறிக்கோள் பற்றி அவசியமாதலிற்றான் அவர் அவ்வாறு செய்கின்றனரென்பது தப்பா?

7. ஆனால் தீண்டப்படாத சாதிமட்டில் தன்னைப் பிறசாதிகள் அவமானப்படுத்துவதாக ஏன் எண்ணிக்கொள்ள வேண்டும்?

8. எல்லாச் சாதிகளுக்கும் பொதுவாயதோர் குறிக்கோளை அச்சாதி அறியமாட்டாமையே அதற்குக் காரணமென்றுற் குற்றமென்னை?

III. 9. பொது நிலயங்கள் தீண்டப்படாத சாதிக்கும் உரியவெனின் அந்நிலயங்களிற் சில இவையெனக் கூறுவீரா?

10. அவற்றில் அச்சாதி எப்போதேனும் போக்கு வரவு புரிந்த துண்டா? இல்லையா?

A. 11. உண்டெனின் அதற்கு ஆதாரமென்னை?

12. அச்சாதி இப்போது அங்குத் தடுக்கப்படுகின்றதா?

B. 13. இல்லையெனின் அவை தம்மிற் போக்குவரவு புரிந்து வருஞ் சாதிகட்குமட்டிற்றான் பொதுவாதல் கூடுமென்பது போதரவில்லையா?

14. எந்தப் பொதுவுடைமையாவது இன்னின்னாருக் கென்னும் வரன்முறை யற்றிருக்கிறதா?

15. சாத்தன் கப்பல் நிரம்பப் பாக்கு ஏற்றுமதி செய்து கொண்டுவர, உடனிருந்த கொற்றன் தன்பாலுள்ள ஒருபாக்கை இரண்டு பாதியாக வெட்டி ஒரு பாதியை அவனறிய அக்கப்பற் பாக்கோடு போட்டுவிட்டுத் துறைமுகம் வந்ததும் பாதிப்பாக்குத் தன்னதென்று அச்சாத்தனை எதிர்த்து வழக்காடிக் கப்பற் பாக்கு முழுவதிலும் பாதியை யடைந்தானென்னுங் கதையை யறிவீரா?

16. கொற்றன் அடுத்தவன் பொருளை அபகரித்தற்கு வாதிற் பிரயோகித்த 'பாதி' யென்னுஞ் சொல்லுக்கும், நீர் ஒரு சாதியினுடைமையை இன்னொரு சாதிக்குப் பிடுங்கிக்கொடுக்கவோ நீரே பிடுங்கிக்கொள்ளவோ வாதிற் பிரயோகிக்கும் 'பொது' வென்னுஞ் சொல்லுக்கும் பிறரை ஏமாற்றுந் தரத்தில் என்ன வித்தியாசம்?

17. தமக்கெனப் பிரத்தியேகமான கொள்கையையுடைய ஒரு சாரார் பிறர்க்குப் பிரத்தியேகமாயுள்ள வேற்றுக்கொள்கையைக்கண்டு அவர்மேல் வைத்த பற்றினுலோ பிறவற்றினுலோ அதன் வளர்ச்சிக்குப் பொருள் உதவியுள்ளாரென வைத்துக் கொண்டால் பிறகு அப்பொருள் உதவியாரோ அவர் சந்ததியாரோ தாமுந் தமிழரே, திராவிடரே, அவ்வேற்றுக்கொள்கையுடையாரும் அங்ஙனமே யென்பது முதலிய பொதுமைகளைப் புகலாகக் காட்டி அப்பொருளை மீண்டுங் கவரவும், அப்பொருளின் துணையால் நடைபெற்றுவரும் நிலயங்களில் உரிமை கொண்டாடி நுழையவும் பார்ப்பது பெருத்த அக்கிரம மாகாதா?

18. ஒரே கொள்கையுடையார்தானும் தம்மதாகிய அக் கொள்கையின் வளர்ச்சிக்கெனப் பொருள் கொடுத்து அதனால் அக்கொள்கை வளர்வுற்று வருகையில் அவரோ அவர் சந்ததி யாரோ வேற்றுக்கொள்கையைச் சார்ந்துவிட்டாரென வைத்துக் கொண்டால் அப்போது அவர் தாம் பழங்கொள்கையிலிருந்த போதுந் தமிழரே, திராவிடரே, புதுக்கொள்கையைக் கொண்ட பிறகும் அங்ஙனமேயெனப் பொதுமையைப் புகலாகக்காட்டித் தம் புதுக்கொள்கையின் வளர்ச்சிநிமித்தம் மீண்டும் அப் பொருளையோ அதனால் நடைபெற்றுவரும் நிலயங்களையோ அப் பழங்கொள்கைக்கு உதவாத விதத்திற் பிடுங்கப் பார்ப்பதும் முன்னையது போன்று பெருத்ததோர் அக்கிரமமாகாதா?

19 குறிப்பிட்ட ஒரு கொள்கையின் வளர்ச்சிக்கென விடப் பட்டபொருள் யாரால் விடப்பட்டதா யிருந்தாலும் அக்கொள் கைக்கே சொந்தமென்பதும், அக்கொள்கையை யாசரிப்பவரே அப்பொருளை வைத்துக்கொண்டு வளர்த்து வருதற்குரிய ரென் பதும் நியாயமல்லவா?

20. சாதாரண நாமதேயங்கள் விபசரிக்கு மியல்புடையன வென்பதையும், அசாதாரண நாமதேயங்கொண்டு சரிப்பவர்களை அவருரிமை கெடுமாறு அவ்விபசார நாமதேயங்களுக்குள் அகப் படுத்திப் பேசுவது அவர்களை வஞ்சிப்பதாகுமென்பதையும் யாரு மேயா அறியார்?

IV. 21. தனக்கென விதிநூ லில்லாத ஒரு சமயமுண்டா?

22. ஒவ்வொரு சமயத்துக்கும் உரிய பிரமாண விதிநூலை அவ்வச் சமயத்தில் வழிபடப்படுங் கடவுளோ ஆசாரியரோதான் தந்தாரென்று அவ்வச்சமயத்தார் கூறி விசுவசிப்பதில்லையா?

23. ஒவ்வொரு சமயத்துக் குரியாரும் தம் சமயத்துக் கோயில்களில் தம் சமயவிதிநூலை யநுசரித்தே வணங்குதல் வேண்டுமென்பது நீதியன்றோ?

24 சிவாலயங்கள் ராஜ ராஷ்டிர க்ஷேமத்துக்கெனவே உள வாயினவென்று சைவசமய பிரமாண சாத்திரமாகிய சிவாகமங் கள் சொல்வது தெரியுமா?

25. அங்கு அவ்வாகம விதியைப்புறக்கணித்துப் பூசை விழா முதலிய வணக்கங்கள் நிகழுமாயின் அந்த க்ஷேமத்துக்கு மாறாக க்ஷாமமே சித்திக்கு மென்பதையும் அச்சாத்திரத்திற் கண்டிலீரா?

26. சிவாலயங்களுக்குள் இன்னின்ன சாதிகள் இன்னின்ன கட்டுவரையும் போகலாம், இன்னின்ன சாதிகள் அவற்றுக்கு வெளியிற்றான் நிற்கவேண்டும் என்பது அஃதிட்ட கட்டளையென் பதை யறிவீரா?

27. தந்நலமுடையோ ரெனப்படுவார் அக்கட்டளையை மீறு பவரா? அம்மீறுபவரைத் தடுப்பவரா?

28. மீறுவதால் வரும் க்ஷாமம் அம்மீறுபவரோடு பிறரை யும் பீடியாதா?

29. தடுப்பதால் வரும் க்ஷேமம் அத்தடுப்பவர்க்கும் தடுக் கப்படுவார்க்குமே சித்தியாதா?

30. ஒரு சமயத்தை யாசரித்து வருவதெனச் சொல்லிக் கொண்டு அச்சமய விதிநூலைத் தன் புத்திக் கொவ்வாதளபோல் தோன்றுகிற பகுதிகளில் உல்லங்கனம் பண்ணி அரசின் மூலம் அவற்றினளவிற்குச் சட்டங்களை யாக்கித் தனக்கு அச்சமய விதி நூலின்படி விலக்குகளாயுள்ள ஆலயப்பிரவேச முதலியவற்றை அச்சட்டங்களின் வலியால் மேற்கோடல் எந்தச் சாதிக்காவது சமய மானத்தைத் தருமா?

31. அச்செயல் சமயத்துக்கும் அதன் பிரமாண சாத்திரத் துக்குமுள்ள தொடர்பைச் சிதைத்து விடாதா?

32. அப்பால் சமயம் மக்கட்கு உதவுவ தெப்படி?

33. தம் சமய விதிநூலில் விசுவாச மில்லாதவர் தம்மைச் சமய விசுவாசிகளெனச் சொல்லித்திரிவது வஞ்சக மன்று?

34. தம் சமயத்தை அடுத்துக்கெடுப்பவர் அவரன்றிவேறார்?

35. ஆகம விதியை யநுசரித்தே கோயில்களின் உட்சென்று

தத்தமக்கென வரையறுக்கப்பட்டுள்ள கட்டுகளில் நின்று வணங்கிவருகிற ஒரு சில சாதிகள்மேல் அவ்விதியாலேயே அக்கோயில்களுக்கு வெளியில் நிறுத்தப்பட்ட பிறசாதிகளெல்லாம் ஆலயங்கள் பொதுவென்னுந் தொடர்பைப் போர்த்துக்கொண்டு சீறுவதையும் பாய்வதையுமே அவ்வரசச் சட்டங்கள் காட்டாவா?

36. சிவாலயங்களுள் அந்நிய சமயத்தார் செல்லுகின்றனரே அது தகுமா வென்பீராயின் அவரை நெறிமுறையில் தடுப்பது தான் ஆண்மையென்பது தெரியவில்லையா ?

V. 37. பொதுவென்னுஞ் சொல்லுக்கே வியவஸ்தை கிடையாதா ?

38. ஐந்தாறு சகோதரர்க்குப் பொதுவாயதோர் வீட்டின் அறையொன்றில் ஒரு சகோதரன் தன் மனைவியைக் கூடிக்கொண்டிருக்கும்போது மற்றைச் சகோதரர் அங்குப் போக்குவரவு புரியலாமா? ஆகாதா ?

A. 39. ஆமெனின் நடுத்தெருவில் நாலுபேர் பார்க்க ஒருவன் தன் மனைவியைக் கலந்தாலென்னை ?

40. அச் சம்பவமொன்று உம் பார்வையிற் பட்டால் நீர் என் செய்வீர் ?

B. 41. ஆகாதெனின் அவ்வறை மற்றைச்சகோதரர்க்கும் பொதுவன்று ?

42. கலவியி லிருக்கும் அச்சகோதரன்போன்று மற்றைச் சகோதரரும் மனிதரல்லரா ?

43. அவன் அவளை அணையும்போது அவ்வறையில் எலி பூனை மூடு கொதுகு முதலியன போக்குவரவு புரிவதில்லையா ?

44. அப்பிராணிகளிலும் அம்மனிதர் இழிந்தவரா ?

45. அல்லராகலின் அப்போது அவ்வறையில் நுழையும் உரிமை அவற்றிற் கிருக்கும்போது அவருக்குமட்டில் ஏனில்லை ?

VI. 46. புணர்ச்சி மக்களுக்கு ஆகுமா? ஆகாதா?

A. 47. ஆகுமெனின் ஒருவர் புணர்வதை மற்றவர் பார்த்தல் ஏன் தவறு?

48. பார்த்தலாவது கண்ணால் தீண்டுதலே யன்றோ?

49. விலங்காதியவற்றின் புணர்ச்சியைப் பாராதவர் யார்?

50. அவையும் பலர் பார்க்கப் புணர்வதின்றோ?

B. 51. ஆகாதெனின் அதனை யாரும் மறைவாகத்தானுஞ் செய்தல் தவறன்றோ?

VII 52. உலகிலுள்ள அத்தனைகோடி மக்களும் பரஸ்பரம் தீண்டிக்கொண்டேயா வாழ்கின்றனர்?

53. அவசிய காலங்களில் தீண்டிக்கொள்வதை மறுப்பார் யார்?

54. முத்தங் கொடுத்தாலும் அருகிற் படுத்தாலும் நோய் வருமென் றஞ்சுகிற நீர் வெறுந் தீண்டலுக்கு ஆசைப்படுவதேன்?

55. சின்னாட்கு முன்வரைத் தீண்டாத சாதிக்குந் தீண்டப் படாத சாதிக்கும் ஒற்றுமைக்குறைவு இருந்த துண்டா?

56. சின்னாட்களாக ஆடவரைப் பழிக்கப் பெண்டிர் கூட்டம் போடுவதில்லையா?

57. அதற்குத் துணைபோகின்ற ஆடவப்போலிகளும் இலரா?

58. கிழவரைப் பழிக்கக் குமரர் கும்பல் கூடுவதில்லையா?

59. அதற்குத் துணைபோகின்ற கிழப்புல்லர்தா னிலரா?

60. ஆடவன் அரிவைப் பிரிவும், கிழவன் குமரற் பிரிவும் ஒற்றுமைக் குறைவை உண்டுபண்ணவா உளவாயின?

61. ஆயினும் இக்கால மக்களுக்குட் பகைமையைப் புகுத்த அப்பிரிவுகள் கருவிகளாகப் பிரயோகிக்கப்பட வில்லையா?

62. அப்படியே தீண்டாதார் தீண்டப்படாதார் என்னும் பிரிவும் பிரயோகிக்கப்படுகிறதென்பது விளங்கிலதா ?

VIII 63. பௌத்த சமணங்கள் தீண்டாமையை உடன்படாதன அல்லவா ?

64. அவை பாரததேச முழுவதிலும் பரவியிருந்த காலமும் உண்டன்ரு ?

65. அப்பால் அவை போனவிட மெங்கே ?

66. தீண்டாமையையும் ஒருமுக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள இத்தேசத்துப் புராதன சமயங்கள் மீண்டுந் தலைக்காட்டி நிலைத்த தெப்படி ?

67. தீண்டாமையை யுடன்படாத இக்காலைச் சில அந்நிய தேச சமயங்களும் ஆண்டாண்டுப் பெருகுவதுபோலத் தோன்றினும் விரைவில் இந்நாட்டை அதற்கே சொந்தமான அப்புராதன சமயங்களிடமே கொடுத்துவிட்டு ஓடிப்போம் என்பதை அப் பௌத்த சமண கதிகொண்டு கண்டுகொள்ள முடியாதா ?

68. ஒரு சமயத்தைவிட்டு இன்னொரு சமயத்துக்கு மாற விரும்புபவன் அது செய்யுமுன் அவ்விரண்டு சமயங்களையும் நன்கு கற்ருராய்ந்த பண்டிதனுக இருக்கவேண்டாமா ?

69. அங்ஙனமின்றி ஊணுக்கும் உடைக்கும் உறக்கத்துக்கும் மதிப்பல்லாத தொன்றை மதிப்பெனக்கருதி அது கிடைக்கவில்லையேயென்ற கவலை நிவிர்த்திக்கும் இன்ன பிறவற்றிற்கும் ஆசைப்படுவதாலோ அன்ன பிறவற்ருலோ ஒருவன் தன் சமயத்தைவிட்டுப் பிறசமயம் புகுவானுயின் அவன் புத்திசாலியெனப் படுதல் யாங்ஙனம் ?

70. நபும்சகன் மதிமுகியிட மிருப்பதும் அசமுகியிடம் போவதும் ஒன்றே யன்ரு ?

IX 71. சாத்தனைத்தீண்டி வாழாத கொற்றனை 'என்னைத் தீண்டிக்கொண்டுதான் நீ வாழவேண்டும்' என்று அச்சாத்தன் எப்படி வற்புறுத்தலாம் ?

72. தீண்டிக்கொண்டுதான் வாழவேண்டுமென்று வற்புறுத்த ஒருவனுக்கு உரிமையிருக்கும்போது அதனை மறுத்து வாழ அடுத்தவனுக்கு ஏன் உரிமையில்லை?

X. 73. நோயுடையானைத் தீண்டினால் நோய் பரவாதா?

74. சுகமுடையானைத் தீண்டினால் சுகமும் பரவுமா?

75. நோயே பரவுமெனின் தீண்டுதலாற் கேடே பலிதமென்பது தெரியவில்லையா?

76. சுகமும் பரவுமெனின் அஃதுடையான் நோயுடையானைத் தீண்டவேண்டுமென்பது அவசியமாகாதா?

ஆக அநுவாதம் 7-க்கு ஆசங்கை 513.

8. இருபாலாரின் சமத்துவம்

அநுவாதம்

ஆடவர்போற் பெண்டிரும் மக்களே, இருபாலார்க்கும் அறிவாற்றல்கள் ஒரே விதமாகத்தானிருக்கின்றன. ஆகலின் அவர்க்குட் சமத்துவமே யிருக்கற்பாலது. ஆயினும் உடற்கூறு சிறிது வேறுபட்டிருப்பதுகொண்டு ஆடவர் தம் ஆண்மையாற் பெண்டிரைத் தமக்கு அடியராக்கி வைத்தனர். அது கொடுமை. ஆடவர் தம் கொடுமையைக் களையாதொழியின் பெண்டிரே அவரையெதிர்த்து அச்சமத்துவத்தைப் பெறவேண்டும். அச்சமத்துவந்தான் மக்களின் உயரிய நாகரிகமாகும்.

ஆசங்கை

I. 1. சிங்கத்தன்மைகளில் வீரஞ் சிறந்ததன்றோ?

2. அங்ஙனமே மக்கட் பண்புகளில் பகுத்தறிவு சிறந்ததன்றோ?

3. பிற விலங்குகளை அடக்கியாளவல்ல வீரம் ஆண்சிங்கத்துக்குப்போன்று பெண்சிங்கத்துக்கும் உள்ளதன்றோ?

4. அங்ஙனமே பிறவிலங்குகளுக்கில்லாத அறிவுமேம்பாடு ஆடவர்க்குப்போன்று பெண்டிர்க்கும் உள்ளதன்று?

5. ஆனாற் பெண்சிங்கவீரம் ஆண்சிங்கத்தினிடஞ் செல்லுமா?

6. பெண்டி ரறிவு மட்டில் ஆடவரறிவிலும் மேம்படுதல் யாங்ஙனம்?

7. குட்டிச்சிங்க வேற்றைத் தாய்ச்சிங்கவீரம் அடக்கி யாளுவதில்லையா?

8. ஆடவரறிவினும் மேம்பட்டு ஆண்டாண்டுத் தென்படும் பெண்டிரறிவும் அந்த அளவிற்கு மேலாகுமா?

II. 9. அறிவுக்கு நிலயம் மூளையே யன்று?

10. அது பெண்டிர்க்குக் காட்டிலும் ஆடவர்க்கு அதிகமென உடற்கூற்று நூல் கூறவில்லையா?

11. மக்களுக்குக் காட்டிலும் சில விலங்கினங்களுக்கு மூளை அதிக மிருக்கிறது, ஆயினும் அறிவில்லையே யெனக்கூறி அறிவுப் பெருக்கத்துக்கு அதிகமூளை வேண்டாமென்பீராயின் ஆணுக்குக் காட்டிலும் பெண்ணுக்கு அதிகமூளை யிருக்கும் விலங்கினம் எது?

12. அதிற் பெண்ணுக்குக் காட்டிலும் ஆணுக்கு அறிவு மிக்குளதா?

13. பால்பற்றிய தொன்றைத் திணைபற்றிய தொன்றால் மறுப்பது முறையா?

III. 14. உலகந்தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை அறிவால் உலகத்தை வளப்படுத்தியவருள் அநேகமாய் எல்லாரும் ஆடவரே யென்பதை வரலாற்று நூலிற் கண்டிலீரா?

15. உலகத்தில் நாளிதுவரைத் தோன்றியுள்ள மதம் இயக்கம் புரட்சி அரசியல் சீர்திருத்தம் முதலியவற்றின் தலைவர்களில் எத்தனைபேர் பெண்டிர்?

16. நேற்றுத் தோன்றிய சுயமரியாதை யியக்கத் தலைவர் ஆட வரா ? பெண்டிரா ?

IV. 17. மாதந்தோறும் நாலைந்து நாள் இரத்தம் வடிதல், பத்து மாதம் கருவைத்தாங்கித் திரிதல், கருவை யுயிர்த்தபின் சில பல மாதங்கள் வலிகுன்றிக் கிடத்தல், பிரசவமரணம் முதலியன பெண்டிர்க்கே யுரிய துன்பங்களல்லவா ?

18. அறிவு வளர்ச்சிக்கு வேண்டப்படுங் காலவசதி, உடல் நலம் முதலியன அத்தனை துன்பங்களையும் பிறப்புரிமையாகப் பெற்ற அவர்க்கு இருக்குமா ? அத்துன்பங்களுள் ஒன்றேனும் பெருத ஆடவர்க்கு இருக்குமா ?

19. தாய் முலைப்பால் குழந்தைகளின் வளர்ப்புக்கு இன்றி யமையாத தன்ரு ?

20. அதனைப் பெறுதற்பொருட்டுச் சிலமாதங்கள் வரையி லாவது குழந்தைகள் தாயைச் சிரமத்துக் குள்ளாக்காவா ?

21. பெண்டிரின் அறிவு வளர்ச்சிக்கு அதுவுந் தடையன்ரு ?

22. ஆடவர்க்கு அத்தடை ஏது ?

V. 23. 'கோடி ஒரு வெள்ளைவரையும், குமரி ஒரு பிள்ளைவரை யும்' என்ற பழமொழி 'நல்ல திரேகத்திட னும்............உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாகப் பொலி காளைகள்போல்............ பொலி மக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை இன்சக் ஷன்மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்லகுழந்தை களைப் பிறக்கச் செய்யப்படும்' என்று உம் ஈ. வே. ரா. 'இனி வரும் உலகம்' என்ற சுவடியிற் கூறி மகிழ்ச்சியுடன் எதிர்பார்க் கிற காலத்திலாவது பொய்க்குமா ?

24. குமரன் கிழவனுதல் அத்துணை விரைவில் நடக்கக் கூடி யதா ?

VI. 25. புத்தர்சார்பிற் சொல்லப்படுவதுபோல் ஓராடவன் அறிவு வளர்ச்சியின் பொருட்டுக் காடுமலைகளி லெல்லாந் தனித் துத் திரிவா னல்லனு ?

26. ஓ ரரிவைக்கு அது முடியுமா ?

VII. 27. பெண்டிர் அதிகாரம் பண்ண முற்பட்ட காலத்திலேனும் அத்துன்பங்கள் குறுக்கிடாவா ?

VIII. 28. புணர்ச்சியின்ப நுகர்ச்சியிலும் இருபாலார்க்குஞ் சம நிலையின்றி ஆடவரைப் பெண்டிர் சுமக்கவில்லையா ?

29. விலங்கு பறவை முதலிய சகல பிராணிகளின் கலவியிலும் அது காணப்படுவதின்று ?

30. ஆடவர் கீழும் பெண்டிர் மேலுமாகக் கிடந்து கலப்பது சுக்கிலத்தின் தடையற்ற வெளிப்பாட்டிற்கும் புத்திரோற்பத்திக்கும் இடையூறுகலின் இயற்கை விரோத மாகாதா ?

IX. 31. ஒருவன் இருபெண்டிரை மணந்து அவ்விருவரையுஞ் சேரவைத்துக்கொண்டு குடித்தனஞ் செய்துவருவதுபோல் ஒருத்தி இரண்டாடவரை மணந்து ஏககாலத்தில் அவ்விருவரையும் வைத்துக்கொண்டு வாழமாட்டுவாளா ?

32. வேறு சில நாடுகளில் அதுவல்ல பெண்டிர் உளரென்பீராயின் இந்நாட்டில் உம்மவருள் அன்ன பெண்டிர் ஒரு சிலரேனும் உளரா ? இலரா ?

A. 33. உளரெனின் அவரை யேன் நீர் எடுத்துக் காட்டுதல் கூடாது ?

B. 34. இலரெனின் அவ்வரட்சியைப் போக்கி எடுத்துக் காட்டுதற் பொருட்டாகவாயினும் ஓ ரிரு பெண்டிர்க்கேனும் அவ்வாழ்க்கை வலிமையை யேற்ற நீர் முயலவேண்டாமா ?

X. 35. பெண்டிர்க்குச் சமத்துவங் கொடுத்துள்ளாரெனக் கருதப்படுகிற இசுலாமிய ராதியோர் தம் கடவுளரை ஆண்பாலிற் கூறுதலும், பெண்பாலிற் கூறுமையும் ஏன் ?

XI. 36. பெண்டிரை ஆடவர் இடையிலொரு காலத்தில் அடக்கி வைத்தனரெனின் அதற்கு முற்பட்ட காலத்தில் ஆடவரைப்

பெண்டிர் அடக்கி வைத்திருந்தனரா? இருபாலாருஞ் சமத்துவத் தோடிருந்தனரா?

A. 37. முதலதெனின் அவ்விடைக்காலத்து நிகழ்ச்சியும் ஆடவர்க்கு அவசியமாகாதா?

B. 38. அடுத்ததெனின் இடைக்காலத்திற் பெண்டிரை ஆடவர் அடக்கக் காரணமென்னை?

39. இடைக்காலத்திற் பெண்டிர்க்கு அடிமை வாழ்வு உலகெங்குந் தோன்றிற்ரு? ஒரு நாடுமட்டில் தோன்றிற்ரு?

A. 40. உலகெங்குமெனின் புகைவண்டி கப்பல் தபால் தந்தி பத்திரிகை முதலிய சாதனங்கள் சிறிது மில்லாத காலத்தில் உலகெங்குமாயிருந்த அவ்வாழ்வு அவர்க்கு இயற்கையா யுள்ளதென்பதிற் சந்தேகமென்னை?

41. அதனை ஆடவரின் கொடுமை யென்றதேன்?

B. 42. ஒரு நாடுமட்டிலெனின் அது எந்நாட்டில் முதலில் தோன்றிற்று?

43. மேற்கண்ட சாதனங்கள் சிறிது மில்லாத காலத்தில் ஒரு நாட்டிலுள்ள அது உலகமுழுவதிலும் பரவிய தென்பது எப்படி?

44. மக்களெல்லாரும் மத்திய ஆசியாவிலிருந்தபோதே அக் கொடுமை தோன்றி அவர்கள் உலகெங்கும் பரவ அவர்களோடு பரவுதல் கூடுமாகலின் அச்சாதனங்கள் வேண்டாவெனின் அவர்களுள்ளும் அக்கொடுமையின் தொடக்கம் சரித்திரத்துள் அகப்பட்ட காலத்துக்கு முற்பட்ட தன்ரு?

45. அக்காலத்து ஆடவரின் அடக்குமுறை உமக்கு அறிய வந்த தெங்ஙனம்?

46. இக்காலைக் கண்கூடா யறியப்படும் பெண்டி ரடிமைத் திறத்தை வைத்து அக்காலை அவரடிமைத்திறமுங் கருதியறியப்

படுமெனின் இக்காலைப் பெண்டி ரனைவரும் ஆடவர்க் கடியர் தாமா ?

47. ஆயின் அன்னை அக்கை அத்தை அண்ணி முதலிய பெண்டிர்முன் மகன் தம்பி மருகன் மைத்துனன் முதலிய ஆடவர் சிற்றடியராய் நின்று குற்றேவல் புரிவதேன் ?

48. அப்பன் ஐயன் கணவன் முதலிய ஆடவர்முன் மகள் தங்கை மனைவி முதலிய பெண்டிர் சிற்றடியராய் நின்று குற்றேவல் புரிவதும் அங்ஙனமே யன்றோ ?

49. மேலும் ஆடவரும் பெண்டிரும் சமத்துவத்தோ டிருந்துவரும் நாடுகளும், ஆடவர் அடியராயும் பெண்டிர் ஆண்டவராயுமிருந்துவரும் நாடுகளும் இப்போதும் ஆங்காங்கு உளவென்பதை முன்காட்டப்பட்டுள்ள 'உறவுமுறை' என்ற கட்டுரையிற் கண்டிலீரா ?

50. ஆகலின் நீர் கூறும் அந்த ஹேது அவ்வியாப்தி யென்னுந் தோஷமுடைய தன்றோ ?

51. அதுகொண்டு அவ்வடக்குமுறை கருதியறியப்படுதல் யாங்ஙனம் கூடும் ?

52. ஆடவர் கூட்டமும் பெண்டிர் கூட்டமும் பரஸ்பரம் விரோதங் கொண்டு என்றேனும் போர் நிகழ்த்திய துண்டா ? இல்லையா ?

A. 53. உண்டெனின் நாடு மொழி அரசியல் முதலியவற்றுள் எதுபற்றி அஃது உண்டாயிற்று ?

54. நாடு மொழி அரசியல் முதலியன ஆடவர்க்கு வேறு, பெண்டிர்க்கு வேறு என உளவா ?

55. பெண்டிரை அடக்காவிட்டால் ஆடவர் குடியே முழுகிவிடுமா ?

56. ஆமெனின் பெண்டிர் குடியும் முழுகிவிடாதா ?

B. 57. இல்லையெனின் ஆடவர் ஏன் அவ்வடக்கு முறையைக் கையாளவேண்டும் ?

XII. 58. இருபாலாருஞ் சமநிலையிலிருக்கும் நாடுகளில் அவ்விரு பாலார்க்குமே இன்பங் கிடைக்கிறது என்கிலீரா ?

59. அவருள் எப்பாலார் அடக்கப்படினும் இருபாலார்க்குமே துன்பமென்பதும் உம் கொள்கை யன்ரு ?

60. அங்ஙனமாயின் முற்காலத்தில் இருபாலாரும் சமநிலையிலிருந்தன ரென்கின்றீராகலின் அப்போது அவ்விருபாலாரும் இன்பமே துய்த்திருப்பா ரென்பது பெறப்படாதா ?

61. அவர் தம்மெல்லார்க்குமே துன்பம் வருமாறு அடக்குமுறையை யெப்படிக் கையாண்டிருக்க முடியும் ?

XIII. 62. 'உண்மையான பெண்கள் விடுதலைக்குப் பிள்ளை பெறுந் தொல்லை அடியோடு ஒழிந்துபோக வேண்டும். அது ஒழியாமல் சம்பளம் கொடுத்து புருஷனை வைத்துக்கொள்வதா யிருந்தாலும் பெண் பொதுவாக உண்மை விடுதலை அடைந்துவிட முடியாது என்றே சொல்லுவோம்...............பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையில் இருந்து விடுதலையாக வேண்டும் என்கின்ற மார்க்கத்தைத் தவிர, வேறு எந்த வகையிலும் அவர்களுக்கு விடுதலை இல்லை என்கின்ற முடிவு நமக்குக் கல்லுப்போன்ற உறுதியுடையதா யிருக்கிறது' என்று உம் ஈ. வே. ரா. 'பகுத்தறிவு' IV, I இல் கூறியிருப்பதை யறிவீரா ?

63. அவர்கருத்து நிரம்பிப் பெண்டிரி னடிமை வாழ்வு நீங்கினதெனக் கொள்ளினும் பெண்டிர் கூட்டமாவது வழிவழி யிருந்துவருமா ?

64. அவர் தமக்குள்ளேயே புணர்ச்சிகளை நிகழ்த்தித் தம்மை விருத்திசெய்து கொள்வாரா ?

65. நும் மியக்கத்துப் பெண்டிராயினும் பிள்ளைகளைப் பெறும லிருந்துவருகிருரா ?

66. இலராகலின் ஆண்டும் ஆடவர்க்குப் பெண்டிர் அடியராகவே யிருந்துவருகின்றன ரென்பது சித்தமன்ரு ?

67. 'இனிவரும் உலக'த்திற் கூடப் 'பொலிமக்களது வீரியத்தை இன்சக்ஷன் மூல' மாகவாவது 'பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி'யே யாகவேண்டாமா?

68. பெண்டிரை யடக்கியாயினுங் காத்து இருபாலாரையும் பெற்றுவருதலாகிய ஆடவர்செயல், ஆடவரின் அடக்குமுறையினின்று மீள்வதே போதுமெனக் கொண்டு மக்கட் பேற்றையே வெறுத்துத் தம பாலார்க்கும் அழிவைத் தேடிக்கோடலாகிய பெண்டிர்செயல் என்னும் இரண்டனுள் வேண்டாற்பாலது எது?

69. மக்கட் சமூகமே பூண்டற்றுப்போக வேண்டுமென்ற கொடுநினைப்பு உம் ஈ. வே. ரா. வின் அடியுள்ளத்திற் பதுங்கிக் கிடக்கிற தென்பது அவ் வாக்கியங்களால் விளங்கவில்லையா?

XIV. 70. அரசன், Viceroy, Governor முதலியோரைப்போல் அவர் மனைவியரையும் அவ்வுத்தியோகப் பெயரேபற்றி அரசி, Vicerein, Governess என்று கூறி உலகம் கௌரவிப்பதில்லையா?

71. ஆனால் Queen Empress ஆகிய விக்டோரியாவைப்போல் அவர் கணவனுரை King Emperor என்று கூறி மக்கள் கௌரவித்தனரா?

72. தமக்குக் கிடைக்கும் பெருமையைப் பெண்டிர்க்கு ஆடவர் கொடுப்பார், ஆடவர்க்குப் பெண்டிர் கொடார் என்பது அதனுல் தெரியவில்லையா?

XV. 73. ஸி. என். லக்ஷ்மிகாந்தன் கொலை வழக்கு ஸெஷன்ஸில் விசாரிக்கப்பட்டபோது திருவேங்கடனென்பாரின் விசாரணையில் என். எஸ். கிருஷ்ணனையும், அவருக்கு மனைவியாயிருந்துவந்த டீ. ஏ. மதுரத்தையும் சேர்த்து வக்கீல் 'Krishnans' என்று பிரஸ்தாபித்ததை 25—4—1945 'ஹிந்து'விற் கண்டீரா?

74. அப்பன்மையை விடுத்து 'Mathurams' என்று அவ்விருவரையும் பிரஸ்தாபிக்கலாமா?

75. ஆகாதாயின் ஏன் ?

XVI. 76. Jack என்பவன் மகளாகிய Jill என்பவளை Miss Jack என்பது போல் மகனாகிய Tom என்பவனை எப்பதத்தை முன் வைத்தாவது Jack என்று வழங்குவதுண்டா ?

77. அந்த Jill தன் தாய் பெயராலும் வழங்கப்படுவாளா ?

XVII. 78. ஆங்கிலேயர் தம் முன்னோர்களை Fore-Fathers என்று சொல்லுவதுபோல் Fore Mothers என்று சொல்லாமை ஏன் ?

ஆக அநுவாதம் 8-க்கு ஆசங்கை 591.

---

9. கர்ப்பத்தடை

அநுவாதம்

உலகத்தில் மக்களின் தொகை வரவரப் பெருகுகின்றது. உலகவளமோ அத்தொகைக்குத் தக்கபடி பெருகவில்லை. ஆகலின் வறுமையே கைகண்ட பலனாகின்றது. மேலும் அதிகமான குழந்தைகளைப் பெறுவதால் பெண்டிர் உடல்நலங் கெடுகின்றனர். உலக வின்பத்தைப் போதுமானவரை அவரால் நுகரமுடியவில்லை. பிறக்குஞ் சந்ததிகளும் உடல் அறிவு முதலியவற்றின் வளங் குன்றியவ ராகின்றனர். அங்ஙன மெல்லார் நேராதவாறு தம்பதிகள் புதல்வர்களையும், புதல்விகளையும் சுருங்கிய தொகையிற் பெற்றமைவதே பொருத்தமாகும். பிறகு அவர்கள் மருந்தை யுண்டு கர்ப்பத்தடை செய்துகொள்ள வேண்டும்.

ஆசங்கை

I. 1. பேற்றுத்தடை செய்துகொள்ள வேண்டுபவர் ஆடவரா? பெண்டிரா ?

A. 2. ஆடவரெனின் அவர் கர்ப்பத்தை வாங்கி வெளியிடுபவர் பெண்டிரல்லரா ?

3. ஆகவே பெண்டிர்க்குமட்டில் அத்தடை போதாதா ?

4. அன்றியும் ஆடவர்க்குத் தம்பணவருவாயின் மிகுதி குறைவுகள் தெரியாவா ?

5. அவற்றிற்குத் தகத் தாம் விரும்பிய அளவு புதல்வர்களையும் புதல்விகளையும் பெற்றுக்கொண்ட பிறகு அவர் புணர்ச்சியையே நிறுத்திக்கொள்ள லாகாதா ?

B. 6. பெண்டிரெனின் கணவன்மார் தம் மனைவியரின் உடல் நலத்தைப் போற்ற விரும்பாதவரா ?

7. கணவன்மாரின் சம்பாத்தியத்தில் வாழ்ந்து அவர்தருங் கர்ப்பத்தைச் சுமந்துபோற்றக் கடப்பட்டவ ரல்லரா மனைவியர் ?

8. ஆகலின் தம் பேற்றுத் தடைக்கு அவர் தம் கணவன்மாரிடம் சம்மதம் வாங்கவேண்டாமா ?

9. தாம் புத்திசாலிகளாயின் அவரும் ஓரளவு பேற்றுக்குப் பின் புணர்ச்சியையே நிறுத்திக்கொண்டா லென்னை ?

II. 10. மருந்தை உட்கொண்டுதான் பேற்றுத்தடை செய்துகொள்ளவேண்டுமென்ற நியமம் அவ்விருபாலார்க்கும் அவசியமா ?

11. தாம் வேண்டுமளவுக்கு மக்களைப்பெற்று மருந்தாற் பேற்றைத் தடுத்துக்கொண்ட பிறகு அம்மக்கள் செத்துப்போய் விட்டால் அவ்விழந்தோர் மீண்டும் மக்களைப் பெற்றுக்கொள்ள மாட்டுவாரா ?

12. மாட்டாராயின் தாம் சாகும்வரை அவர் பிள்ளையாசையை யொழித்துவிட வேண்டுவதுதானா ?

13. ஒருக்கால் அம்மாண்ட மக்களையே அவர் மீண்டும் பெற்றுக்கொள்ள விஞ்ஞானிகள் மருந்து கண்டுபிடித்திருக்கின்றனரா ?

14. ஆயின் இப்போ திருப்பவருள்ளேயே ஆங்காங்குச் சாபவரை அம்மருந்தால் உயிர்ப்பித்து எல்லாருஞ் சிரஞ்சீவி

ளாய் வர்முலாமென்றும் புதுவதாக மக்கட்பேறே வேண்டா மென்றும் நீர் பிரசங்கியாததென்னை ?

15. பேற்றுத் தடைமருந்துக்கு மாறுன விடைமருந்தும் உளதா ?

III. 16. இரண்டு புதல்வர்களையும் இரண்டு புதல்விகளையும் பெற்றுக்கொள்வது ஒரு தம்பதிக்குப் போதுமென வைத்துக் கொண்டால் தாம் விரும்பிய பாலாரைப் பெற்றுக்கொள்ள யாராலேனும் முடியுமா ?

17. விஞ்ஞானமாவது அவ்வகையில் துணைபுரியுமா ?

18. புதல்வர்க் காசைப்பட்டுக்கொண்டே புணர்ந்தும் புதல்வியரே ஏழு எட்டு என வரிசையாய்ப் பிறந்துவிடுதலும், புதல்வியர்க் காசைப்பட்டுக்கொண்டே புணர்ந்தும் புதல்வரே ஏழு எட்டு என வரிசையாய்ப் பிறந்துவிடுதலும் கண்கூடல்லவா ?

19. தமக்கு இன்னபோது இன்னபாற் குழந்தைதான் பிறக்குமென்ற நிச்சயமேயில்லாதபோது எவர்தான் அக்கணக்கில் நிற்க வல்லார் ?

IV. 20. இன்ன சிப்பியிற்முன் முத்துண்டென்பதை யாராலாவது அறியமுடியுமா ?

21. அகப்பட்ட சிப்பிகளனைத்தையும் வாரிவந்து ஒவ்வொன்றையும் அறுத்துச் சோதிப்பதற்கு அம்முடியாமையே காரணமன்று ?

22. அங்ஙனமே நல்லியல்புடைய ஒருவனோ ஒருத்தியோ பிறப்பதை யாராலாவது அறியமுடியுமா ?

23. முடியாதாகலின் ஒவ்வொருவனும் அவனாலானவரை பிள்ளைகளைப் பெறுமாறு அவனை விட்டுவிடுவதே முறையாகாதா?

24. நல்லியல்புடைய ஆடவரும் பெண்டிரும் உலகிற் பிறந்து அதனை அலங்கரிப்பதைப் பேற்றுத்தடை நாசமாக்கிவிடாதா ?

25. பல்லாயிரவர் மூடர் வாழ்வதைவிட நல்லறிஞர் ஒருவர் வாழ்வதே வேண்டற்பாலதன்றோ?

26. பேற்றுத்தடை மூலம் நல்லறிஞர் தோற்றத்தை யொழிப்பதினும் பிறந்தவருள் மூடராயிருப்போரைக் கொலை புரிந்தொழிப்பது இலாபகர மாகாதா?

V. 27. கர்ப்பத்தடை செய்துகொண்ட வொருவன் பல கள்ளப் புணர்ச்சிகளைச் செய்து பல பெண்டிரை அசுத்தப்படுத்த வாய்ப்புப் பெற்றவனாகானோ?

28. அத்தடை செய்துகொண்ட வொருத்தி தன் கணவன் பல மாதங்கள் வெளியிற் சென்றிருந்த காலத்தில் பல சோரர்களைப் புணர்தலும், குழந்தைகளைப் பெறமாட்டாமையால் அக்கணவன் திரும்பி வந்தபோது தன்னைப் பதிவிரதைபோற் காட்டி அவனை வஞ்சித்தலும் செய்து திரிய வசதிபெற்றவளாகாளா?

29. அத்தடை செய்துகொண்ட வொருவிதவை திருட்டுக் குழந்தைகளைப் பெறவும் அதனால் தன் மானம் போகவும் நேராவாகலின் குடும்பத்தி லிருந்துகொண்டே தாராளமாக விபசரிக்க இடம்பெற்றவளாகாளா?

30. குடிப்பதற்கென வெட்டப்பட்டுள்ள கிணற்றைச் சாவதற்கென வொருவன் உபயோகப்படுத்திக் கொள்வதைக்கொண்டு கிணறு கேடு செய்வதேயாமெனத் தீர்ப்பதும், சமூக நலத்துக்கெனக் காணப்பட்டுள்ள அத்தடை மருந்தைச் சிலர் துர்விநியோகஞ் செய்வதைக் கொண்டு அம்மருந்து கேடு செய்வதேயாமெனத் தீர்ப்பதும் ஒன்றெனப்பிராயின் மனத்தை வயப்படுத்திக்கொண்டு செய்து கோடற்பாலதான பேற்றுத்தடையை மனம் புணர்ச்சியில் வெறிகொண்டோட இடனுமாறு மருந்தாற் செய்துகொள்வது பித்தர்கள் வாழுமிடத்திற் கிணற்றை வெட்டிவைப்பது போன்றதாகுமன்றோ?

VI. 31. ஆண் பெண் பிரிவு உளதானது புணர்ச்சி யின்பத்தின் பொருட்டா? இனவிருத்தியின் பொருட்டா?

A. 32. முதலதன் பொருட்டேனின் மரம், செடி, கொடி முதலிய தாவரங்களிலும் அப்பிரிவு இருப்பதை அறிவீரா?

33. அவ்வாண் பெண்கள் புணர்கின்றனவா?

34. இன்பம் துகர்கின்றனவா?

35. அவை இடம்விட்டு இடம்பெயர்ந்து தம்முட் புணர்ந்து இன்பம் நுகர்வதற்கு முடியாமல் இருந்தாங் கிருக்குமாறே இயற்கை செய்துள்ளதைக்கொண்டு அப்பிரிவு புணர்ச்சியின்பத்தின் பொருட்டன்று என்பதை உம்மால் ஏன் ஊகித்துக் கொள்ள முடியவில்லை?

36. அவற்றிற்கு இனவிருத்தியிலும் விருப்பமில்லையென்பது தெரிகிறதா?

37. ஆயினும் ஆண்டு இவ்விருத்தி நடந்துவருவது பிரத்தியக்ஷ மன்றோ?

38. அதனை நடத்திவைப்பன அவற்றிற்கு வேறாய காற்று சில பறவைகள் முதலியனவே யென்பதை யறிகிறீரா?

39. இனி விலங்கு பறவை முதலிய சங்கமங்களிலும் அப்பிரிவு உளதன்றோ?

40. வலாற்காரப் புணர்ச்சியில் வலாற்கரிக்கப்பட்ட ஆணுக்கோ பெண்ணுக்கோ இன்பமுண்டா?

41. புணர்ச்சி தன்னளவிற் புணர்பவருக்குக் கஷ்டமும் நஷ்டமுமே தருவதென்பது அதனால் தெரிந்திலதா?

42. அன்றியும் இதோ இப்புணர்ச்சியிற் கருத்தரிக்கிறதென்ற நிச்சயம் புணர்கிற ஆண் பெண்களுக் குண்டா?

43. சங்கமங்கள் பிரிந்துபோதலும் உளதாகையால் அவற்றின் ஆண் பெண்கள் புணர்ச்சிப்பொருட்டுத் தம்முட் சமீபிக்க வேண்டாமா?

44. அவற்றுக் கன்னியமான காற்றுமுதலிய பொருள்கள் அவற்றின் ஆண் பெண்பகுதிகளை யிணைத்துக் கருவை யுண்டாக்குமா?

45. அக் கஷ்ட நஷ்டங்கள் தீர்வதற்கும், கருத் தரிக்கும் வரைப் புணர்ச்சி நடைபெறுவதற்கும். ஆண்பெண்கள் சமீபிப்பதற்கும், அயற்பொருள்களின் சகாயம் வேண்டாமல் கருத்தரிப்பதற்குமே புணர்ச்சியில் இன்பம் வைக்கப்பட்டதென்பதைக் கண்டு கொள்ள முடியவில்லையா?

46. ஆகவே இனவிருத்தி உளதாதற்குச் சிரமமான புணர்ச்சியைச் செய்யும்போது அச்சிரமந் தோன்றுமல் உற்சாகமேதோன்றும் நிமித்தம் அப்புணர்ச்சியோடு வைக்கப்பட்டுள்ள இன்பமானது உடல் நலம் உளதாதற் பொருட்டுக் கசப்பு மருந்து சாப்பிட நேர்ந்தால் அக்கசப்புத் தோன்றுமலிருக்க அம்மருந்தோடு சேர்க்கப்படுஞ் சிறிது சர்க்கரை போன்ற தத்தனையெ யன்று?

47. அவ்வாண் பெண்களுக்கு இனவிருத்தியில் விருப்பமுண்டா?

48. இன்பமென வொன்றைக் காட்டி அவற்றைப் புணரும்படி தூண்டி இனவிருத்தி செய்துவருகிற இயற்கையின் சாமர்த்தியத்தை உம்மால் உணர முடிகிறதா?

49. அடுத்து மக்கள் இனவிருத்தியிற் பற்றுடையாரென்பது சர்வப் பிரசித்த மன்று?

50, ஆடவர் பெண்டிர்ப் பிரிவு அதன் பொருட்டுத்தானென அவர் எளிதிற் கண்டுகொள்ளாரா?

51. ஆகவே ஆண்பெண்பிரிவு புணர்ச்சிப்பொருட்டன்றென்பதைத் தாவரங்களிடமிருந்தும், இனவிருத்திப் பொருட்டுத்தா னுளதாயிற்றென்பதை நன்மக்களிடமிருந்தும், புணர்ச்சியில் இன்பம் இன்னதன் பொருட்டுத்தான் வைக்கப்பட்டதென்பதை விலங்கு பறவையாதிகளிடமிருந்தும் ஏன் தெரிந்து கோடல் கூடாது?

B. 52. இரண்டாவதன் பொருட்டேனின் உம் கர்ப்பத்தடைப் பிரசாரம் அதற்கு முரணன்ரு?

VII. 53, பாற்பிரிவு புணர்ச்சி யின்பத்துக்கே யாமென்று நீர் பிரசங்கிப்ப தில்லையா?

54. ஒரு பிள்ளை பிறந்தபிறகு அடுத்த பிள்ளை பிறப்ப தற்குமுன் பெண்டிர்க்குப் போதுமான அவகாசம் வேண்டுமென் கிற கொள்கையினர்க்கு அப்பிரசங்கம் இடையூருய் முடியாதா?

55. அவ் வவகாசத்தில் இருபாலாரும் புணர்ச்சியையே நிறு த்திவைக்க வேண்டாமா?

56. அப்படியானுல் எத்தனையோ வருடங்கள் புணர்ச்சியின் பம் அவர்க்கில்லாமற் போகாதா?

57. அவ் வவகாசத்தில் உறை போட்டுக்கொண்டு புணரலா மென்பீராயின் போதுமான அளவில் புணர்ச்சி யில்லாவிட்டால் இருபாலாரின் உடல்நலமுங் கெட்டுவிடுமென்று தேர்ந்த மருத்துவ ரெனப்படுவோர் சிலர் கூறுவது தெரியுமா?

58. புணர்ச்சியையே வெறுத்து வாழ்ந்துவருபவருட் சிலர் நோய்வாய்ப்படின் அம்மருத்துவரின் உபதேசத்தால் மனவலி குலைந்து புணர்ச்சியிற் பிரவேசித்துக் கெட்டலையவில்லையா?

59. புணர்ச்சியை யொருபோதுந் துய்த்தறியாமலிருந்தும் நோயின்மை உடல்வலி தீர்க்காயுள் முதலியவற்றையுடைய எத்த னையோ ஆடவப் பெரியோர்களையும், பெண்டிர்ப் பெரியோர்களை யும் அவரொழுகலாற்றிற் சம்சயிப்பதற்கு அம்மருத்துவரின் துர்த்தப் பிரசாரம் இடந்தராதா ?

60. புணர்ச்சி வேண்டாமலே நோய் நீக்கத்துக்கு மருந்து மருத்துவ நூலிற் கிடையாதா ?

61. மருத்துவர் கூறுவதை மெய்யெனக் கொண்டாலும் நோய்நீக்கத்துக்கு உறைப்புணர்ச்சி மாறன்ரு ?

62. ஊன் குடி உடை முதலியவற்றுட் புணர்ச்சிவெறியைத் தூண்டக்கூடியனவும், உடல்நலத்துக் கிடையூறின்றி அடக்கிவைப்பனவும் இலவா ?

63. பாற்பிரிவு புணர்ச்சி யின்பத்துக்கே யாமென்கிற துஷ்டப் பிரசாரம், புணர்ச்சியில்லாவிட்டால் உடல்நலங் கெட்டுவிடு மென்கிற தூர்த்த வைத்தியம், அநாசாரமும் ஆடம்பரமுமான உணவு முதலியன, இவையன்னபிற ஆகியவெல்லாம் மலிந்துவருவதாலேயே விலங்கனைய கூட்டத்தினர்க்குள் புணர்ச்சியே உத்தியோகமாகி அவரெண்ணிக்கை பெருகுவதற்கும், உலகவளம் போதாமைக்கும், உடல்நலங் கெடுவதற்கும் இடனுண்டாயிற் றென்பது தெரிந்திலதா ?

64. மக்களிடம் விலங்கியல்பை மிகுதிப்படுத்தக்கூடிய அவ்வக்கிரமங்கள் தொலைந்து பாற்பிரிவு இனவிருத்திப்பொருட்டே யாமென்கிற உண்மை, புணர்ச்சியின்றியே நோய்நீக்கத்துக்கான மருத்துவம், சாத்துவிகத்தைத் தரக்கூடிய உணவு முதலியவற்றையே வாழ்க்கையிற் கோடல், அவையன்னபிற ஆகியவனைத்தும் பரவினாலொழிய அவர்தொகை மட்டுப்படுதலும், அவர் நல்லராதலும் சிறிதுமில்லை யென்பதை யறிகிறீரா ?

VIII. 65. புணர்ச்சியின்பம் வேண்டும் இனவிருத்தி வேண்டாமென்பதற்கும், கட்குடி வேண்டும் வெறியும் அடி உதைகளும் வேண்டாமென்பதற்கும் வேறுபா டென்னை ?

IX. 66. உலகவின்பத்தை விரும்பிக்கிடப்பவர் தொண்டு செய்யத் தகுதிபுடைய ராவரா ?

67. அவரே விலங்கனைய ரல்லரா ?

68, தொண்டே தம் வாழ்க்கையெனக் கொண்டுள்ள தெள்ளறிஞர் உலகவின்பத்தை விரும்புவாரா ?

69. தொண்டர்தான் மனிதரென்பது மிகையா ?

70. அவர் உலக நலத்தைக் கருதிப் புணர்ச்சியைச் சுருக்கிக் கொள்ளாரா ?

71. புணர்ச்சியை அறவே வெறுத்தொழித்த ஆண்டகைகளும் பெண்டகைகளும் இலரா?

72. ஊணின்றி உயிர்ப்பின்றி உண்ணுநீரின்றி உயிர்வாழ முடியுமா?

73. அவை உரிய பொழுதிற் கிடையாவிடில் சாவு நிச்சயமென்பது வெளிப்படையன்றோ?

74. புணர்ச்சியின்றேல் வாழ முடியாதா?

75. அது கிடையாமையாற் செத்தவன் எவன்?

76. ஊண் முதலியனவே வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவன, புணர்ச்சி அங்ஙனமன்றென்பது அதனாற் சித்திக்கவில்லையா?

77. ஆகவே அத்தீரர்களை மதியாதார் காமவெறியர்தவிர வேறு யார்?

78. தொண்டரின் தொகை மிகுந்துவருமானால் மக்களின் தொகை அளவுக்குள் அடங்காதா?

79. அவர் உடல்வலி முதலிய நலன்களுடையராயுமிரா?

80. உலக வளமும் போதுமான அளவாயிராதா?

X. 81. மருந்து மூலம் பேற்றுத்தடையை நிரந்தரமாகச்செய்துகொண்ட நாடு போராலோ பஞ்சத்தாலோ பிறவற்றாலோ பெருந்தொகை மக்களை யிழந்து நின்றால் மீண்டும் அத்தொகையை ஈடுசெய்யக் குறைந்த அளவு ஒன்றிரண்டு தலைமுறைகளாவது செல்லுமாகலின் அவ்வளவில் ஒரு பெரிய நஷ்டத்தை யடைந்ததாக மாட்டாதா?

XI. 82. உலகம் இன்பமயமா? துன்பமயமா? அவ்விரண்டன் கலப்புமயமா?

A. 83. இன்பமயமெனின் மக்கள் துன்பமும் நுகர்வதேன்?

B. 84. துன்பமயமெனின் நீர் புணர்ச்சியை இன்பமெனக் கொள்வதேன்?

C. 85. அவ்விரண்டன் கலப்புமயமெனின் மக்கள் இன்பத்தையா துன்பத்தையா இரண்டையுமேயா நுகரப் பிறந்தனர்?

a. 86. இன்பத்தையெனின் தொண்டர் அதனை வெறுப்பதேன்?

b. 87. துன்பத்தை யெனின் எல்லார்க்கும் இன்பங் கிடைக்கவேண்டுமென்று தொண்டர் உழைப்பதேன்?

c. 88. இரண்டையுமே யெனின் துன்பத்தை அவர் ஏன் நுகரவேண்டும்?

89. தொண்ட ருழைப்பும் வீணாய் முடியாதா?

XII.90. துன்பங்கலந்த இன்பமுந் துன்பமே யாகலானும், தெள்ளறிவுத் தொண்ட ரனைவரும் அவ்வின்பத்தை வெறுத்தலானும், மக்க ளுள்ளத்தில் துன்பங் கலவாத இன்ப வேட்கையே யிருத்தலானும் மக்கள் அவ்வின்பத்தையே நுகரப் பிறந்தார்களென்று அதனால் விளங்கவில்லையா?

XIII.91. மக்கள் காரணமின்றியே (Accidentally) பிறக்கின்றன ரென்பது உம் கொள்கையன்றோ?

92. ஆயின் பூரணவின்பத்தை நுகரக்கூடிய சாமர்த்தியத்தோடு ஒருவனாவது பிறந்துவிடக்கூடாதா?

93. அப்படி யாரேனும் பிறந்திருக்கின்றனரா?

94. Accidental birth என்பது குறைவுடையதாகத்தானிருக்கவேண்டு மென்பது விதியா?

95. பூரண சுகாநுபாவன் ஒருவனும் பிறக்கவில்லையாகலின் பிறப்புத் தற்செயலன் றென்பதை உம்மால் ஊகிக்க முடியவில்லையா?

96. பிறக்கவேண்டு மென்ற நினைவோடு அதாவது புத்தி பூர்வமாகப் பிள்ளைகள் பிறக்கின்றனரா ?

97. பெற்றோரேனும் பிள்ளைகளைத் தெரிந்தெடுத்துப் பெறுகின்றனரா ?

98. ஆகவே பிள்ளைகள் பிறப்பதற்கு அப் பிள்ளைகளோ, பெற்றோரோ வினைமுதலாகா ரென்பது விளங்கவில்லையா ?

99. பிறப்பவருக்கோ பெறுபவருக்கோ புலப்படாம லிருந்து கொண்டு பிறப்பவரைப் பிறப்பிக்கும் வினைமுதலாவா னொருவன் உளனென்பதை ஊகிக்க மறுப்பது அறிவுடைமை யாகுமா ?

100. அங்ஙனம் பிறப்பிப்பதற்கு அவன்பால் ஏதேனும் ஒரு நோக்க மிருக்கவேண்டு மென்பதை அவனுடைய அருள் அறிவு ஆற்றல்களை யாராய்வார் காணமாட்டாரா ?

101. உயிர்களுக்குத் துன்பங் கலவாத இன்பத்தைக் கொடுத்தலே அந்நோக்க மென்பதை யறிவீரா ?

102. அதனைப் பெற்றபிறகு அவற்றிற்குப் பிறவியேன் ?

103. ஆகவே பிறந்தவராகிய ஆடவர் பெண்டிரனைவரும் தாம் இறக்குமுன்னரேயே வேண்டுமளவு உழைத்து அவ் வீட்டின்பத்தைப் பெறுமுகத்தால் மீளவும் பிறவாம லிருப்பதற்கே வழிதேடிக்கொள்ள வேண்டுமென்பது தெரியவில்லையா ?

104. அங்ஙனம் ஒவ்வொருவரும் பிறவாமையை வேண்டிப் பெற்றுவிட்டால் பிறப்பார்தொகை அருகி உலகில் மக்களின் தொகை மட்டுப்படுதலும், பிறநலங்கள் உளவாதலுஞ் சித்தியாவா ?

105. கர்ப்பத்தின் உற்பத்தி சத்தியை இயற்கை அதிகப்படுத்தி வருவதற்கு அதிக மக்கள் பிறப்பதற்கே தொழிலாகி யிறந்துவருவதே காரணமென்பது தெரிகிறதா ?

106. ஆடவரும் பெண்டிரும் பிறவாம லிருப்பதற் கான நெறியை விடுத்துப் பெறும லிருப்பதற்கான வழியைத் தேடிக் கொள்ள வேண்டுமென முனைப்பது கருதிய பயனைக் கனவிலேனுங் கொடுக்குமா ?

XIV. 107. சிலர் இறவா வரத்துக் காசைப்படுவதைப் படித்தோ கேட்டோ இருக்கிறீரா ?

108. இரவாமை சித்திப்பதற்கு விஞ்ஞானிகள் மருந்து கண்டுபிடிக்கின்றன ரென்று நீருஞ் சொல்கிலீரா ?

109. அது கைகூடிவிட்டால் சிரஞ்சீவிகள் பெருகி உம் கொள்கைக்குப் பேரிடையூறாய் முடியாரா ?

110. இருபாலார் சமத்துவம், பெண்டிர் சுதந்திரம், பேற்றுத்தடை, இந்நூலில் அநுவதிக்கப்பட்டுள்ள பலவகை மணங்கள் முதலியவை மக்கள் நலத்துக்கு இன்றியமையாதனவாமென்று ஒரு கொள்கையைப் படைத்திட்டுககொண்டு அதனைப் பிரசார முதலியவற்றால் ஆங்காங்குப் பரப்பிவரும் உம்மவர் தம் மாட்டுக் கிளர்ந்தெழுங் காமவெறியைச் சாந்தி செய்துகொள்வதற்கு ஏழைப்பெண்டிர் எல்லாவகைக் கட்டுக்களையும் உடைத்தெறிந்து கொழுத்த வுடலினராகிப் பிள்ளைப்பேற்றால் உளவாகும் இடையூறுகளில் நீங்கி வாய்ப்புடையராதல் வேண்டுமே, அது கைகூடுவதென்றோ என்ற ஏக்கமும் வஞ்சநெஞ்சமும் உடையராய் அப்பெண்டிரை நோக்கி வலைவீசுகின்றவராவரென்பதில் என்ன சந்தேகம் ?

111. உத்தமப் பெண்டிர் அதிலகப்படாமல் தம் மானத்தைக் காத்து அவரைத் தலைகுனிய வைப்பாரென்பதை யறிவீரா?

XV. 112. பேற்றுத் தடைமருந்தை யுண்பார் நோய்வாய்ப்படுவதில்லையா?

ஆக அநுவாதம் 9-க்கு ஆசங்கை 703.

10. மகளுக்குச் சொத்துரிமை.

அநுவாதம்.

அப்பன் சொத்தில் மகனுக்குப் போல மகளுக்கும் பிறப்புரிமைப்பங்கு கொடுக்கப்படவேண்டும்.

ஆசங்கை.

I. 1. பெற்றவரின்றிப் பிறந்தவருளரா?

2. பிறக்தவர்க் குரிமை வேண்டுமென்பது பெற்றவர் சொத்திற்ரு னன்ரு?

3. அதன்பொருட்டுப் பிறந்தவர் தம்மைப் பெற்றவர் இன்னு ரென்பதைக் கண்டு கொள்ள வேண்டாமா?

II. 4. பெற்றவர் தாயா? தந்தையா? இருவருமேயா!

5. தாயேனுந் தந்தையேனுந் தனித்துப் பெறமுடியுமா?

6. இருவருங் கூடியே பெறுவரெனின் பிறக்குஞ் சிசுவானது உயிரும் உடலுங் கூடியதன்ரு?

7. உயிரும் உடலும் பொருளால் வேறல்லவா?

8. உயிர் வேறெவ் வுபாதாநத்திலிருந்துங் காரியப்படாத தனிப்பொருளென்பது தெரியுமா?

9, ஆகலின் தாய் தந்தையர் பிறந்தவரின் உயிரைக் காரியப்படுத்த மாட்டாரென்பது விளங்குகிறதா?

10 புணர்ச்சிக் காலத்தில் தாய்தந்தையரிடமிருந்து சுரக்கும் சோணித சுக்கிலங்களின் கலப்பாகிய வுபாதாநத்திலிருந்து காரியப்படக்கூடியது கர்ப்பச் சிசுவின் உடலேயன்ரு?

11. உடம்பினும் பிரதான மன்ரு உயிர்?

12. பெற்ரோ ரிருவருடைய சம்பந்தத்தையும் பிறக்குஞ் சிசுவின் உடல் பெற்றிருப்பது போன்று உயிரும் பெற்றிருக்க வேண்டாமா?

13. காரியப் பொருளல்லாத வுயிர் அவ்விருவர் சம்பந்தத்தையும் அவரவர் வயிற்றில் தங்கிக் கிடப்ப தொன்ருலன்றி வேறெதனுற் பெறமுடியும்?

14. ஆயின் அஃதவ் விருவர் வயிறுகளிலும் ஏக காலத்தில் தங்கமுடியுமா?

15, முதலில் ஒருவர் வயிற்றிலும் அடுத்து இன்னொருவர் வயிற்றிலுமாகவே அது தங்குமென்பது தெரிகிறதா?

16. அது முதலில் தங்கியது தாய்வயிற்றிலா? தந்தை வயிற்றிலா?

A. 17. தாய்வயிற்றிலெனின் தந்தைக்கும் பிறந்தவருக்கும் சம்பந்த மிருக்குமா?

18. தந்தையென்னும் உறவினனே பிறந்தவருக் கில்லாமற் போய்விடானே?

19. தந்தையின் சொத்துக்குத் தாய்வயிற்றில் மாத்திரங் கிடந்து பிறந்தவர் எப்படி உரியராகலாம்?

20, உடல்பற்றி உரிய ராகலாமெனின் உடலா பிரதானம்?

B. 21. தந்தைவயிற்றிலெனின் புணர்ச்சிக் காலத்தில் அவ்வுயிர் தாய்வயிற்றிலும் இறங்கித் தங்குதல் கூடுமன்றே?

22. அங்ஙன மாயின் அவ்வுயிர் அவ்விருவர் சம்பந்தத்தையும் பெற்றதாகிவிடாதா?

23. புணர்ச்சிக் காலத்தில் ஆடவர்பாற் சுரக்கும் சுக்கிலத்திலுள்ள Spermatozoon என்ற பொருள் பெண்டிர்பாற் சுரக்கும் சோணிதத்திலுள்ள Ovum என்ற பொருளுக்குள் நுழைந்து கலத்தலாற் பெண்டிரின் கருப்பையிற் சிசுவுண்டாகி வளர்கின்றதென்பது மேல்நாட்டுக் கர்ப்போற்பத்திநூற் கொள்கையன்றே?

24. அந்த Spermatozoon என்பது வினைமுதற் பொருள் (Active or motile element) என்றும், அந்த Ovum என்பது செயப்படுபொருள் (Passive or non-motile element) என்றும் அந்நூல் கூறவில்லையா?

25. வினைமுதலாதற்றன்மை அறிவு(சித்து)ப் பொருளுக்கும், செயப்படுபொருளாதற்றன்மை அறிவில் (சடப்) பொருளுக்குந் தான் உள்ளனவென்பது தெரியுமா?

26. சித்துப் பொருளாவது உயிரொன்றே யன்றே?

27. ஏனைய வெல்லாஞ் சடங்களே யல்லவா?

28. ஆகலின் தந்தையிடமிருந்துவந்த Spermatozoon-என்னும் வினைமுதற் பொருளிலுள்ள அறிதற்றன்மைத்தாகிய உயிரே தாயின்கருவில் வளருஞ் சிசுவுக்கும் உயிரென்பதைச் சொல்லித் தெரியவேண்டுமா?

29. சுருங்கச் சொல்லின் அந்த Spermatozoonவ அச்சிசுவென்பது பெறப்படாதா?

30. ஆகவே பிறக்குஞ் சிசுவின் உயிர் முதலிற் சில நாட்களேனுந் தந்தை வயிற்றிலும், பிறகு புணர்ச்சியில் தாய் வயிற்றுக்கு வந்து அதிற் சில மாதங்களுந் தங்கிக் கிடந்ததென்பதைத் தெரிகிறீரா?

31. அவ்வுயிர் தந்தை வயிற்றில் தங்குவதற்குமுன் எங்குத் தங்கிக் கிடந்ததென்னும் ஆராய்ச்சி இங்கு அவசியமில்லையன்று?

32. ஆகவே பிறந்தவரைப் பெற்றவர் Spermatozoonக்குத் தோற்றுவாயான தந்தையே யென்பது விளங்கவில்லையா?

III. 33. பிறந்தவர் தம் பெயருக்குமுன் விலாசமாகத் தம் தந்தை, அவர் குடும்பம், ஊர், முதலியவற்றின் பெயரின் முதலெழுத்தை வைத்துக்கொள்வதும், தாய், அவர் குடும்பம், ஊர் முதலியவற்றின் பெயரின் முதலெழுத்தை வைத்துக்கொள்ளாமையும் ஆகிய வழக்க மிருந்துவருவதை யறிவீரா?

34. பிறந்தவரைப் பெற்றவர் தந்தைதான், தாயல்ல ரென்பதற்கு அது சான்று பகராதா?

35. உம் ராமசாமிநாயக்கரும், அண்ணாதுரையும் முறையே ஈ. வே. என்றும், ஸி. என். என்றும் வைத்துள்ள விலாசங்கள் குறிப்பன யாவை?

IV. 36. விபசாரி வயிற்றிற் பிறந்தவருக்குத் தம் தந்தையை யறிய முடியாதாகையால் அவர் தம் தாயின் விலாசத்தை வைத்துக்கொள்வது பிரசித்தமன்று?

37. அவ்விலாசம் பரிகசிக்கப்படுவதில்லையா?

38. இருவர் விலாசங்களுமே வேண்டா மென்பீராயின் அதனை யொத்துக் கொண்டாலும் தந்தையே பெற்றவரென்பது அது பற்றிப் பொய்த்துவிடுமா?

V. 39. மேல்நாடுகளில் புதல்வியர் தமக்கெனப் பெயர்களிருப் பினும் 'மிஸ்' என்பதோடு தம் தந்தையின் பெயரைச் சேர்த்து இட்டுக்கொள்வதும், அங்ஙனமே தாயின் பெயரைச் சேர்த்து இட்டுக்கொள்ளாமையுந் தெரியுமா?

VI- 40. தம் பெயர்க்கு முன் தந்தை பெயருங் காட்டப்படாத பத்திரங்கள் முதலாயின அரசில் அங்கீகாரம் பெறுமா?

41. விபசாரிகளின் புதல்வ ரல்லாதார் தம் தாய் பெயரை யும் அவற்றிற் காட்டவேண்டுமா?

VII. 42. விவிலிய நூல் பரம்பரைகளைக் கூறுமிடங்களில் இவன் பெற்றான் இவன் பெற்றான் என்று கூறுகின்றதன்றி இவள் பெற் றாள் இவள் பெற்றாள் என்று கூறுகிறதா?

43. கிறித்தவ இசுலாமிய மதங்கள் ஆதாமிடம் ஏவாள் தோன்றினாள், ஆதமிடம் ஹவ்வா தோன்றினாள் என்று தொட ங்கியே மக்களின் தோற்றத்தை விவரிக்கவில்லையா?

44. ஆகவே நெல் முதலியன விளையும் வயல் போன்று ஆட வரிடமிருந்து வரும் Spermatozoon என்னும் உயிர்ப்பொருள் சிசுவாகி விளையும் நிலமே பெண்டிர் வயிறென்பது சித்திக்கிலதா?

45. ஆணும் பெண்ணும் முறையே வித்தும் நிலமும் போல்வ ரெனனும் உண்மை உமக்குஞ் சம்மதந்தானென்பதை 21-9-1930 'குடியரசி'ற் கைவல்யசாமியின் கட்டுரையிற் கண்டிலீரா?

46. ஆடவரிடம் விதையென்றோ ருறுப்பிருப்பதையாவது அறிவீரா?

VIII, 47. விதையிலிருந்து மாசூல் வருதலும் மாசூலே விதையாத லும் நெல் முதலிய தானியங்கள் பரம்பரையாய் நிலையுதற்குக் காரண மல்லவா?

48. அப்படியே முருகன் கொற்றனையும், கொற்றன் சோமனையும் பெற்றாரெனின் முருகன் விதையும் கொற்றன் மாசூலும்' கொற்றன் விதையும் சோமன் மாசூலுமாய் ஒரு பரம்பரை (கால் வழி)யின ராகாரா?

49. ஆகவே முருகன் சொத்துப் பிறப்புரிமையில் இறங்க வேண்டுமேயானல் புத்ர பௌத்ர பரம்பரையில் கொற்றனுக்கும் சோமனுக்குந்தான் போகவேண்டுமென்பது தெரிகிறதா?

50. ஆனல் அம் முருகன் தன் மகளாகிய கொற்றிக்கும் தன் சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்தால், அவள் தன காலத்துக்குப் பிறகு அச் சொத்துக்கு எவனைப் பிறப்பால் உரியனுக்குவாள்?

51. அவள் தன் மகனாகிய காமனையே அதற்கு உரியனுக்காளா?

52. ஆனல் கொற்றி வயிற்றி லுதித்த காமன் அவளுக்கு மகனல்லன், அவள் கணவனாகிய வீமன் தன் Spermatozoonஐ அவள் வயிற்றிற் புகுத்தி விதைத்தெடுத்த மாசூலாகலின் அவனுக்கே மகனென்பது உண்மையன்றோ?

53. அவ்வீமன் அம்முருகனின் பரம்பரைக்கு முற்றிலும் வேறான பரம்பரையைச் சேர்ந்தவ னல்லனோ?

54. அவனுக்கு மகனாகிய காமனுக்குப் போகும்படி அம் முருகன் தன் சொத்தைக் கொற்றிக்கும் பங்கிட்டுக் கொடுத்தல் வேண்டுமென்பது என்ன நீதி?

55. தன் தாய்க்குக் கிடைத்த முருகன் சொத்துக்குக் காமன் அவள் வயிற்றிலிருந்து வந்தது கொண்டே பிறப்பால் உரியனாய் விடுவனோ?

56, வீமனுடைய Spermatozoon ஆகிய அவன் அவ்வீமன் சொத்துக்கே பிறப்பால் உரியனாவா னல்லனோ?

57. முருகன் சொத்துக்கும் அவன் தன் தாய் மூலம் பிறப்புரிமை கொள்ளலாமெனின் பிறப்புரிமை என்பதற்குப் பொருள் தா னென்னை?

58. தாய் வயிற்றிலிருந்து வெளிப்படுதலாகிய பிறப்பே பிரத்தியக்ஷமாகலின் அப்பிறப்பே கொற்றிக்கு முருகனிடமிருந்து கிடைத்த சொத்துக்குங் காமனை உரியனுக்குமெனின் பிரத்தியக்ஷமல்லாத பேற்றைச் செய்த வீமனைத் தன் தந்தையென்று அக்காமன் கூறித் திரிவானேன்?

59. அன்றியும் பிரத்தியக்ஷமல்லாத பேற்றைச் செய்கிறவனாகிய தந்தையின் சொத்துக்கு யாருமே பிறப்புப்பற்றி உரிமைகோடல் கூடாதன்றோ?

60 கொற்றியட்டில் எப்படிக் கோடலாம்?

61. எல்லாருமே தாயின் சொத்திலேயே பிறப்புரிமைகோடல் வேண்டுமென்பது சித்தித்துவிடாதா?

62. முருகன் சொத்துக்குக் காமன் பிறப்புரிமை கொண்டாடுவது கொற்றிக்கே மானக்கேட்டைத் தராதா?

63, அது வீமனுக்கும் மானக்கேடன்றோ?

64. ஒருவனுக்குப் பிறந்து பணத்தாசையால் இன்னொருவனுக்குப் பிறந்ததாகச் சொல்கிறான் இந்தக் காமனென்று கொற்றன் ஞாதியர் அக்காமனை மானங்கெடப் பேசாரா?

65. ஒருத்தி ஒரு தனவானை மணந்து ஒரு பிள்ளையையும், அத்தனவான் செத்த பிறகு ஒரு தரித்திரனை மணந்து ஒரு பிள்ளையையும் பெற்றெடுத்தாளாயின் அவள் வயிற்றிற் பிறந்ததே பற்றி அப்பிள்ளைகளிருவருக்குமே அத்தனவான் சொத்திற் பங்கு கிடைக்குமா?

66. கிடையாதாயின் ஏன்?

IX. 67, சகோதர னென்ற வார்த்தைக்கு ஒரு வயிற்றிற் பிறந்தவனென்பது பொருளன்றோ?

68. அவ்வயிறு தாயினதா? தந்தையினதா?

69. தாயினதெனின் அவன் தன்வானை மணந்து பெற்ற மகனும், பிறகு தரித்திரனை மணந்து பெற்ற மகனும் சகோதரராக வேண்டாமா?

70. சகோதரர்தானெனின் அத்தனவானுக்குப் பிறந்தமகன் இறந்துவிட்டால் அத்தனவான் சொத்தை அத்தரித்திரனுக்குப் பிறந்த மகன் அவள் வயிற்றுப் பிறப்பே பற்றி அடைதற்கு உரியனாகலாமா?

71. ஆகா தாயின் தாய்வயிறென்பது தவறன்றோ?

72 ஆனல் ஒருவன் இரண்டு பெண்டிரை மணந்து ஒவ்வொருத்தி வயிற்றிலும் ஒவ்வொரு மகனைப் பெற அவ்விரு மக்களுள் எவன் செத்தாலும் எஞ்சிய மகன் அப்பெற்றவன் சொத்தையடைதற்குப் பிறப்பால் உரியனுவா னல்லனே?

73. ஆகலின் தந்தை வயிறென்பதே உண்மையன்றோ?

74. தந்தை வயிறே பற்றி வரும் பரம்பரைச் சந்ததியினரே ஞாதிகள், தாயத்தார், பங்காளிகள் எனப்படுவாரென்பது தெரியுமா?

75. அரசன் மகனின்றி இறந்தால் அவனுக்கு ஞாதிகளாவாருள் ஒருவனையே மந்திரி முதலியோர் அரசனுக்கும் வழக்கம் எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் இருந்துவரவில்லையா?

X. 76. ஆடவரிடமிருந்து பெண்டிர் பிள்ளைகளை வாங்கித் தம் வயிற்றிற் பத்து மாதங்கள் வைத்து வளர்ப்பவர்களேயன்றிப் பிள்ளைகளுக்குத் தோற்றுவாயாக மாட்டார்களாகலின் பெண்டிர் ஈட்டும் பொருளுக்குப் பிறப்பால் உரியராவார் யார்?

77. ஒருவருமிலராகலின் பொருளை யீட்டவும் சேகரிக்கவும் பெண்டிரை ஏன் உய்த்தல்வேண்டும்?

78. ஒருவனையே மணந்துள்ள கற்பரசி அவனுக்கே உடைமையாகலின் அவள் பொருளீட்ட நேர்ந்தால் அப்பொருள் முதலில்

அக்கணவனுக்கே உரியதாகிப் பின் அவன் அவளிடம் பெறும் பிள்ளைக்கு உரித்தாதல் நெறியன்ரு?

79. ஒருவன் பின் ஒருவனுக மூன்ருடவரை ஓரரிவை மணந்து முதற் கணவனுல் மூன்று பிள்ளைகளையும், இரண்டாங் கணவனுல் இரண்டு பிள்ளைகளையும், மூன்ருங் கணவனுல் நான்கு பிள்ளைகளையும் பெற்றெடுத்தாளென வைத்துக்கொண்டால் அவள் தான் ஈட்டிய பொருளைத் தன் கணவன்மார் கணக்குப்படி மூன்று பங்கு வைத்து ஒரு பங்கை முதற் கணவன் பிள்ளைகளாகிய மூவருக்கும், இன்னெரு பங்கை இரண்டாங் கணவன் பிள்ளைகளாகிய இருவருக்கும், மற்ருெரு பங்கை மூன்ருங் கணவன் பிள்ளைகளாகிய நால்வருக்குங் கொடுப்பாளா? அல்லது தன் வயிற்றிற் பிறந்ததே காரணமாகப் பிள்ளைகளின் கணக்குப்படி ஒன்பது பங்கு வைத்து ஒவ்வொரு பங்கை ஒவ்வொரு பிள்ளைக்குக் கொடுப்பாளா?

A. 80. கணவன்மார் கணக்குப்படியெனின் தன்னை விட்டுப் போய் வேறு பெண்டிரை மணந்துகொண்ட முதவிரண்டு கணவரையும் அவள் ஏன் கருதவேண்டும்?

B. 81. பிள்ளைகளின் கணக்குப்படியெனின் அம்மூன்று பிள்ளைகளும், இரண்டு பிள்ளைகளும், நான்கு பிள்ளைகளும் தத்தம் தந்தைபற்றி மூன்று கட்சிகளாகப் பிரிந்து கொள்ளலாமல்லவா?

82. அப்படிப் பிரிந்து கொண்டால் அக்கட்சிகளுக்கு அவள் சொத்து ஏறியுங் குறைந்துமே கிடையாதா?

83. அக்கட்சிகள் அப்பங்கீட்டுக்குச் சம்மதிக்குமா?

XI. 84. வைப்பாட்டிகளெல்லாரும் அதமிகளல்லரா?

85. அவள் வயிற்றுப் பிள்ளை குறிப்பிட்ட ஒரு வைப்பாளனுக்குத்தான் பிறந்தானென்று நிச்சயிக்கமுடியுமா?

86. முடியாதாகலின் அப்பிள்ளை அவ்வைப்பாளனுடைய சொத்துக்குப் பிறப்புரிமை கோடல் யாங்ஙனம்?

87. மகளுக்குப் பிறப்புரிமைப் பங்களிக்குஞ் சமூகங்களி லும் மகன் அடைவது மிகுதியும் மகள் அடைவது குறைவும் ஆக இருப்பதேன்?

88. அப்பன் சொத்தில் மகளுக்குப் பிறப்புரிமைப் பங்கில்லை யென்பதையே அச்சமூகங்களும் அத்தாரதம்மியப் பங்கீட்டாற் சூசிப்பிக்கவில்லையா?

XIII. 89. ஒரு பிதாவும் அவன் புதல்வரிருவரும் வாழ்ந்துவருகை யில் ஒரு புதல்வன் பிரமசாரியாயிருந்து ஆயிரம் பொன் தேடி வைத்துவிட்டு இறந்தானுயின் பெற்றவனு(பிதாவு)க்குப் பேறு (புதல்வன்) உடைமையென்ற நியமம்பற்றி அத்தேட்டம் அவன் பிதாவுக்கே உரிமையாவதன்றிச் சகோதரனுக்கு உரிமையாவ தில்லை யென்பதை யறிகிறீரா?

ஆக அநுவாதம் 10-க்கு ஆசங்கை 792.

11. மனைவிக்குச் சொத்துரிமை.

அநுவாதம்.

ஒருவனுடைய சொத்துக்கு அவன் இறந்தபின் அவன்மகன் உரியனுதல்போல் மனைவியும் ஓரளவு பங்குக்காயினும் உரியளா தல் வேண்டும்.

ஆசங்கை.

I. 1. அப்பன் மகன் என்னும் உறவு தொடங்குவதற்கு முன் னர் அவ்விருவரும் உளரா?

2. கணவன் மனைவியென்னும் உறவு தொடங்குவதற்கு முன்னர் அங்ஙனமாவா ரிருவரும் இலரா?

II. 3. அப்பனின் சொத்தை யடையவேண்டுமென்னும் ஆசை கொண்டு மகன் வலியவந்து அவனுக்குப் பிறப்பானு?

4. கணவனின் சொத்தை ஆளவேண்டுமென்னும் ஆசை கொண்டு மனைவியாவாள் வலியவந்து அவனை மணக்கலாமன்றோ?

III. 5. பேற்றுக்கு முன்னர் அப்பனே மகன் வேண்டுமென்று ஆசைப்படுவா னல்லனோ?

6. மணத்துக்குமுன்னர் கணவனானமட்டிலா மனைவி வேண்டுமென்று ஆசைப்படுவான்?

IV. 7. அப்பன் மகனுக்குத் தெரியாமலே அவனைப் பெற்றுக் கொள்வா னல்லனோ?

8. கணவனானவன் மனைவிக்குத் தெரியாமலா அவளை மணந்து கொள்வான்?

V. 9. மன்னர் மன்னனுக்கும் பசி அம்மணம் முதலிய வறுமை களோடேயே மகன் பிறப்பதில்லையா?

10. கணவனுக்கு மனைவி அந்த நிலையிலா வந்து வாழ்க்கைப் படுகிறாள்?

VI. 11. அப்பன் வறிஞனென்று தெரிந்தபின்னரேனும் மகன் வேறொரு தனவானுக்கு மகனாதல் கூடுமா?

12. கணவன் வறிஞனென்று தெரிந்த பின்னர் மனைவி வேறொரு தனவானுக்கு மனைவியாதல் கூடுமன்றோ?

VII. 13. அத்தனவான் அம்மகனைத் தன் மகனாக்கிக் கொள்ள வல்லனோ?

14. அத்தனவான் அம்மனைவியைத் தன் மனைவி யாக்கிக் கொள்ள வல்ல னல்லனோ?

VIII. 15. அப்பன் இறந்த பின்னரேனும் மகன் வேறொருவனை அப்பனென அங்கீகரிப்பானோ?

16. கணவன் இறந்தபின்னரும் மனைவி வேறொருவனைக் கணவனென அங்கீகரிக்கலா மன்றோ?

17. இங்ஙனம் மகன் இடையில் தோன்றுகின்றமையாலும் பணத்தாசையால் வலிய வந்து பிறவாமையாலும், அப்பனே முதலில் அவனுக்கு ஆசைப்படுகின்றமையாலும், அவனுக்குத் தெரியாமலே பெற்றுக்கொள்கின்றமையாலும், அவன் வறிஞனாகவே பிறக்கின்றமையாலும், எக்காரணத்தாலும் அவன் வேறொருவனுக்கு மகனும் வேறெவனும் அவனுக்கு அப்பனும் ஆகமாட்டாமையாலும் பெற்ற அப்பன் தன் சொத்தைத் தன் மகனுக்குக் கொடுத்தல் அவனுக்குப் பேற்றுக்கடனாயிற்றென்பதை யறிகிறீரா?

18. மனைவியாவாள் மணத்துக்கு முன்னரும் இருக்கின்றமையாலும், பணத்தாசையாலும் கணவனுவானைக் காதலித்தும் மணத்தல் கூடுகின்றமையாலும், கணவனுவான் அவளுக்குத் தெரியாமல் அவளை மணக்கமாட்டாமையாலும், மணத்தில் அவள் வறிஞள் அல்லாமையாலும், அவள் மற்றொருவனையும் மணக்க வல்லளாகின்றமையாலும், அவனும் அவளைத் தன் மனைவியென ஏற்கச் சித்தனுகின்றமையாலும் கணவன் தன் சொத்தில் சிறிது பாகத்தையேனும் தன் மனைவிக்குக் கொடுக்க எந்த வகையிற் கடன்பட்டுள்ளான்?

19. ஒரு நாட்டு வளம் அந்நாட்டிற் பிறந்தானுக்கே உரியதன்று?

20. மகனுக்கு ஜன்மதேசம் அப்பனல்லனு?

21. ஆகவே அப்பன் சொத்து முழுவதையும் மகன் அடைதல் அவனுக்குப் பிறப்புரிமையன்று?

22. மனைவி அச்சொத்தில் ஒரு பாகத்தையேனும் அடைதல் அவளுக்கு என்ன உரிமை?

IX. 23. சுவிகார புத்திரனுவான் சுவீகாரம் புகுமுன் தன்னைச் சுவீகரிக்க விரும்புபவனிடமிருந்து அவன் சொத்து முழுவதையுமோ அல்லது அதிலொரு பாகத்தையோ தன் பேருக்கு உறுதி செய்து கொள்வானல்லனு?

24. அங்ஙனமே மனைவியாவாள் தனக்கு வேண்டுமாயின் தான் மனைவியாகுமுன் தன்னை மணக்க விரும்புபவனிட மிருந்து அவன் சொத்து முழுவதையுமோ அல்லது அதிலொரு பாகத்தை யோ தன் பேருக்கு உறுதி செய்துகொள்ள லாகாதா?

25. சுவிகாரம் புகுபவன் சிறியனாயின் அவனபிமானிகள் அவன்பொருட்டு அக்காரியங்களைச் செய்துகொள்ளாரா?

26. அங்ஙனமே மனைவியாவாள் சிறியளாயின் அவளபிமா னிகள் அவள்பொருட்டு அக்காரியங்களைச் செய்துகொள்ள லாகாதா?

27. அப்படி எழுதிவாங்கிக்கொண்டு மனைவியாகும் வழக் கம் இன்றும் இந்நாட்டி லில்லையா?

X· 28. மனைவிக்குச் சொத்துரிமை கொடுக்கப்பட்டால் அவள் ஒரு கணவனைக் கொல்லவும், இன்னொருவனை மணக்கவும் இட முண்டாகாதா?

29. ஆகவே மணம் அவளுக்கு வியாபாரமாக முடியாதா?

30. தம்பி பிறப்பதை அண்ணனால் தடுக்க முடியுமா?

31. அப்பன் சொத்திலிருந்து கிடைக்கும் பங்கு குறைவதாயி னும் சகோதரர் பெருகுவதில் அவர்க்கு மகிழ்ச்சியுமுண்டாகாதா?

32. பிள்ளை பிறப்பதை ஒருத்தி தடுத்துக்கொள்ள வல்ல ளல்லளா?

33. பலபேரை மணக்கக்கூடிய வொருத்தி அவர் சொத் துக்கு ஆசைப்பட்டு இரகசியமாய்ப் பேற்றுத்தடை செய்து கொள்ளலா மன்றோ?

XI, 34. அப்பன் சொத்தை ஆளப்பிறந்த மகன் தன் வாழ்நாள் முழுவதும் வேறொருவனுக்கு மகனாதல் கூடுமா?

35. அங்ஙனமே கணவன் சொத்தை ஆளப் பெண்டிருந்த வொருத்தி தன் வாழ்நாள் முழுவதும் வேறொருவனுக்கு மனைவி யாதல் கூடாதன்றோ?

XII. 36. ஒருவனுக்கு இரண்டு மனைவியரிருந்து மூத்தவள் இரண்டு பிள்ளைகளையும், இளையவள் மூன்று பிள்ளைகளையும் பெற்று விதவைகளாயினரெனின் அக்கணவனிடமிருந்து அவ்விரு மனைவியருக்கும் உரிமையெனக் கிடைக்கும் இரண்டு சரிபங்குகளையும் அவர் தத்தம் வயிற்றிற் பிறந்த பிள்ளைகளுக்கே கொடுப்பா ரல்லரா?

37. அங்ஙனமாயின் அவ்வப்பனுக்குப் பிள்ளைகளாகிய அவ்வைவருள் முதலிருவர் தனித்தனி அதிகத் தொகையையும் அடுத்த மூவர் தனித்தனி குறைந்த தொகையையுமே பெறுவார்களல்லரா?

38. அங்ஙனம் அப்பன் சொத்தில் ஒரு பகுதி மனைவியருக்கு வந்து பிறகு அவர்மூலம் அப்பிள்ளைகளுக்கு ஏற்றக் குறைச்சலாகப் பங்கிடப்பட்டுக் கிடைக்கலாமா?

XIII, 39. கணவன் சொத்தில் ஒரு பகுதி அவன் மனைவிக்குப் போனபிறகு அவ்விருசாராரும் தம்தம் வசமுள்ள பகுதிச் சொத்தைப் பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க நேர்ந்தால் அப்பிள்ளைகளுள் ஒருசிலர் தம் தாய்வழிப் பெறும் பங்கினுங் குறைவான பங்கை அப்பன்வழிப் பெறவுங் கூடுமன்று?

40. அங்ஙனம் பெறும் பிள்ளைகள் தம் தாயை மதிக்குமளவுக்காவது தந்தையையும் மதிப்பாரென்ற நிச்சய முண்டா?

ஆக அநுவாதம் 11-க்கு ஆசங்கை 832.

—(||||||)—

12. சுவீகாரம்.

அநுவாதம்.

குழந்தை யில்லாவிட்டால் கணவனே குழந்தையைச் சுவீகரிக்கவேண்டும், அவனும் தன் ஞாதிகளிலிருந்து ஆண் குழந்தை

யையே சுவீகரிக்கவேண்டும், மனைவிக்குச் சுவீகார உரிமை கிடையாது என்பன இந்நாட்டுப் பழங்காலச் சமூக முறைகள், அவையொழியவேண்டும். சுவீகார வுரிமை கணவனுக்குப்போன்று மனைவிக்கும் வேண்டும். அவள் விதவையானபிறகும் சுவீகரிக்க உரிமை கொடுக்கப்படவேண்டும். ஞாதிகளென்ற வரம்பின்றி எந்தவிடத்திலிருந்தும் ஆண்குழந்தைபோற் பெண்குழந்தையும் சுவீகரிக்கப்படலாமென்பதும் வேண்டும். சமூக முன்னேற்றத்துக்கு இம்மாற்றங்கள் இன்றியமையாதன வாகும்.

ஆசங்கை.

I. 1. கணவனே பிள்ளையைப் பெறுபவனென்பது தெரியுமா?

2. பிள்ளையில்லாத கணவன் சொத்துக்கு ஞாதிகளே பிறப்பால் உரியவ ரென்பதை யறிவீரா?

3. அவர்களில் ஒருவனைத்தான் அவன் சுவீகரிக்க வேண்டுமென்பதே பொருத்த மன்று?

4. அவன் சுவீகரியாமல் இறந்துவிடுவானேயானால் அக்கம்பக்கத்தாரின் தூண்டுதலால் அஞ்ஞாதியர் அச்சொத்துக்காகத் தம்முட் சண்டையிட்டுப் பல அல்லல்களுக்கு உள்ளாகலாமன்று?

5. அவற்றின் நிவிர்த்திப்பொருட்டேனும் அவனுக்குச் சுவீகாரம் வசதி யளியாதா?

6. அவன் மனைவியின் உறவினரும் அயலினரும் வேறு குடும்பத்தைச் சேர்ந்தவ ரல்லரா?

7. அவ்விடங்களிலிருந்து அவன் சுவீகரித்தால் அவனுக்கும் சுவீகரிக்கப்பட்டவனுக்கும் மானங் கெடாதா?

II. 8. அயலிடங்களிலிருந்து சுவீகாரம் புகுபவன் அவன் சொத்தைக் கைப்பற்றுவதொன்றிலேயே கருத்தா யிரானு?

9. அவனுக்கு முதுமை வந்த காலத்தில் அவனைப் போஷிக்க வேண்டுமேயென்ற கவலை அச் சுவீகார புத்திரனுக்கு வருமா?

10. அவ்விருவர்க்கு மிடையில் அதற்கேற்ற தொடர்பு என்ன இருக்கிறது?

11. மேலும் அச்சொத்துக்கென வந்த அப்புத்திரன் அவனைப் போஷித்துக் கொண்டிருந்தால் சொத்தைப் பெறுவதெப் போது என்று எண்ணுறு?

III. 12. ஒருத்திக்கு அப்பன் சொத்திலும் கணவன் சொத்தி லும் உரிமை யிருக்கமுடியாதென்பதை யறிவீரா?

13. வேண்டுமானுல் அவள் தானே ஈட்டி வைத்துள்ள பொருளுக்கு ஒருவனைச் சுவீகரிக்கலா மன்ரு?

14. கணவனிருக்கும்போது மனைவிக்குச் சுவீகார வுரிமை பிரத்தியேகமாக இருக்கலாமா?

15. ஆமெனின் அவன் சுவீகரிக்கும் பிள்ளையை அவளும், அவள் சுவீகரிக்கும் பிள்ளையை அவனும் அங்கீகரியாம லிருத்த லும் நேராதா?

16. அப்படி நேர்ந்தால் அவன் சுவிகரிக்கும் பிள்ளைக்கு அம்மையும், அவள் சுவீகரிக்கும் பிள்ளைக்கு அப்பனும் இல்லை யென்பதாய் முடியாதா?

17. அவ்விரு பிள்ளைகளுக்கும் உறவென்னை?

18. அவ்விருவருந் தம்முட் சம்பந்திக ளாகலாமா?

19. கணவனும் மனைவியும் ஒருவனையே சுவீகரிக்கவேண்டு மெனின் அவர்க்குள் அபிப்பிராயபேதம் உண்டாகா திருத்தற் பொருட்டு ஒருவரை யொருவர் அனுசரிக்க வேண்டாமா?

20. கணவனை மனைவி யனுசரிக்கவேண்டுமா? மனைவியைக் கணவன் அநுசரிக்கவேண்டுமா?

21. கணவனை மனைவி யநுசரிப்பது அவ்விருவருக்குமே கௌரவ மில்லையா?

22. மனைவி தன் பொருளைத் தன் கணவன்பால் ஒப்படைத்துத் தன் பெண்ணியல்பைக் காத்துக் கொண்டவளாகாளா?

23. மனைவியைக் கணவன் அநுசரிப்பானாயின் பெண்வழிச் செல்பனென அவன் பழிக்கப்படானா?

IV. 24, மனைவி யிறந்தபிறகு கணவன் சுவீகரிக்கலாமா?

25. சுவீகரித்தபின் அவன் மீண்டும் ஒருத்தியை மணந்து கொள்ளலாமா?

26 ஆமெனின் அவன் பிரமசாரியா யிருந்தபோதும் ஏன் சுவிகரிக்கலாகாது?

27, அப்போதும் சுவீகரிக்கலாமெனின் பிரமசாரியென்பதும் பிள்ளைபெற்றவனென்பதும் முரணாவா?

28. அவனைக் கிருஹஸ்தனெனின் மணஞ் செய்து கொள்ளாதவன் கிருஹஸ்தனாதல் எப்படி?

29. விதவை சுவீகரிப்பதும் அங்ஙனம் பழிப்புக்கிடமாகாதா?

30, அவள் கனவனின்றிப் பிள்ளை பெற்றவளென நிந்திக்கப் படாளா?

31. அவளும் மணத்துக்கு முன்னரேகூடச் சுவீகாரம் பண்ணிக்கொண்டா லென்னை?

32. அவள் சுவீகாரம் பண்ணுமுன் செத்துவிட்டால் அவள் சொத்துக்குப் பிறப்புரிமை கொண்டு போராட வருவார் யார்?

33. பெண்டிர்க்கும் ஞாதிகள் உளரா?

34. ஒரு விதவையின் சகோதரனுக்கு இரண்டு புதல்வரும் ஒரு புதல்வியும் இருந்து அவ்விதவை அப்புதல்வருள் ஒருவனைச் சுவீகரித்துக் கொண்டால் அவன் அச்சுவீகாரத்தின்பிறகு அவளுக்கே மகனாய்விடுகிறானல்லனா?

35. அப்போது அம்மகனும் அம்மகளும் முறையே அத்தை மகனும் அம்மான் மகளும் ஆய்விட மாட்டாரா?

36, அவன் அவளை மணந்துகொள்ள லாமா?

37. ஆகாதெனின் ஏன்?

38. கணவனும் மனைவியி னுறவினரிலிருந்து சுவீகரித்துக் கொண்டாலும் அக்கதியே சம்பவியாதா?

39. வமிசம் தொடர்ந்து வரவேண்டுமென விரும்புகிறவன் ஞாதிகளிலிருந்தேனும் பெண்ணைச் சுவிகரிக்கலாமா?

40. ஞாதிகளிலிருந்தன்றிப் பிறவிடங்களிலிருந்து சுவீகரிப் பதற்கும், விலை கொடுத்து வாங்குவதற்கும் என்ன வித்தியாசம்?

41. அப்பன் சொத்துக்கும், கணவன் சொத்துக்கும், சுவீ காரத்துக்கும் உரிமை கொடுக்கப்படாத அரிவை வித்வையான பின் நிராதாரை யாகின்றாளேயெனின் அவளை சம்ரக்ஷிக்கும் பொறுப்பு அவள் கணவனின் ஞாதியர்க்கு இல்லாமற் போய் விடுமா?

42, அவள் வாழ்க்கையின் கௌரவத்திலும் அகௌரவத் திலும் தமக்கும் பங்குண்டென்பதை அவர் அறிய மாட்டாரா?

43. அறியாமற் போவாராயின் அவர் வேறு கால்வழியி லிருந்து அஞ்ஞாதியர் கூட்டத்தில் வந்து வீழ்ந்த Spermatozoon களே யாவாரென்று ஊகித்து நிந்திக்கப்பட மாட்டாரா?

44. ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடும்பக்கலை யின்னதெனக் கண்டு செவ்வனே போதிக்கப்பட்டால் ஆடவர் பெண்டிர் வாழ்க்கை ஏன் கௌரவமுறாது?

ஆக அநுவாதம் 12-க்கு ஆசங்கை 876.

—(||||||)—

13 காதல் மணம்.

அநுவாதம்.

கணவன் மனைவியாவோர் தம்முள் நன்கு பழகிக் காதல் வயப்பட்டே மணந்துகோடல் வேண்டும். பெற்ருேர் முதலிய வுறவினர் அக்காதலைக் கடிதலும் அம்மணத்தைத் தடுத்தலுங் கூடா.

ஆசங்கை.

I. 1. குடும்பத்திலுள்ள உறவின ரனைவரும் குடும்பத்தின் உறுப்புக்க ளல்லரா?

2. இருவேறு குடும்பங்களை ஒன்ருக்க வல்லது நேசமா? உறவா?

A. 3. நேசமெனின் உம் ஈ. வே. ராவும், ஸி. என். ஏயும் நேசரே யல்லரா?

4. அவ்விருவரும் ஒரு குடும்பத்தினர் தாளு?

B. 5. உறவெனின் அது கலியாண மல்லது வேறென்?

6. ஆகலின் மணந்த தலைவனுந் தலைவியும் தம் இருவேறு குடும்பங்களையும் ஒன்ருக்கி அதன் உறுப்புக்களாய் விடாரா?

7. அங்ஙனமாகக் குடும்பங்களின் சம்மதமின்றி உறுப்புக்களின் கலியாண வுறவு நிகழலாமா?

8. பெற்ருேர் மணவாழ்க்கையின் அநுபவ ஞான முடைய ரல்லரா?

9. அவர்க்குத் தம் புத்திர புத்திரிமாரின் மணவாழ்க்கை யிற் சிரத்தை யிராதா?

10. அந்த மணவாழ்க்கையின் நலனை யறியப் பெருத ஒரு சில பெற்ருேரின் மடமையைக் காரணமாகக் காட்டித் தலைவனைத் தலைவியுந் தலைவியைத் தலைவனுமே மணத்தின் பொருட்டுத்

தெரிந் தெடுத்துக்கோடல் வேண்டுமென்றல் சாலுமா?

11. மணவாழ்க்கையின் அநுபவஞானஞ் சிறிதுமில்லாத தலைவன் தலைவியர் மாத்திரம் எப்படி அப்பொறுப்பைச் செவ்வனே நிர்வகிப்பர்?

12. தலைவனைத் தலைவியும் தலைவியைத் தலைவனுந் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பொறுப்பைப் பெற்றோரிடமிருந்து பிடுங்கி அத்தலைவன் தலைவியரிடங் கொடுப்பது தேளுக்கஞ்சிப் பாம்பின் வாய்க் கிலக்கான தாகாதா?

II. 13. எந்த வுறவும் அன்பு நேர்ந்தபிறகே உண்டாகுமா? எந்த அன்பும் உறவு நேர்ந்தபிறகே உண்டாகுமா?

A. 14. அன்பின் வழியே உறவெனின் பிதாபுத்ரன் என்பது உறவன்று?

15. புத்ரவாத்ஸல்யம் பித்ருபக்தியென்பன அன்பல்லவா?

16. அந்த வுறவு நேருமுன் அந்த அன்பு உண்டாகவல்லதா?

17. ஆகவே உறவு முன்னரும் அன்பு அதன் வழித்தாகப் பின்னருந்தான் உளவாக வல்லன வல்லவா?

18. அன்றியும் உம் ஈ. வே. ரா, ஸி. என். ஏ, தருமாம்பா, ராமாமிர்தம் முதலியோர் தம்முள் அன்பரே யல்லரா?

19. அவ்வன்பு அவர்க்குள் எவ்வுறவை யாக்கி யுள்ளது?

B. 20. உறவின்வழியே அன்பெனின் ஒருவனும் ஒருத்தியும் கணவன்மனைவியராகுமுன் கணவன்மனைவியென்கிற உறவில்லாதவரே யல்லரா?

21. அப்போது அவ்விருவருந் தம்முட் பகைவராகவோ, நட்பினராகவோ, நொதுமலாளராகவோதா னிருப்பா ரல்லரா?

22. அவர் தம்முள் பரஸ்பரங் காமக்கண் கொண்டு பார்க்கவாமா?

23. ஆயின் வேற்றுறவினராய தங்கைதமையன், தந்தைமகள், பாட்டன்பேர்த்தி முதலியோரும் பரஸ்பரம் அக்கண்கொண்டு ஏன் பார்த்தலாகாது?

24. தம்முள் அயலாராகிய ஒருவனும் ஒருத்தியும் 'நாம் புணர்ப்பொப்பந்தஞ் செய்துகொள்ளலாமா?' என்று தம்முள் வினவத் துணிவது அயோக்கியத்தன மாகாதா?

25. ஆகவே கணவன்மனைவி யன்புக்கு மூலமான கணவன் மனைவி யுறவைக் கணவன்மனைவியாவோரே யாக்கிக்கோடற்குரிய ரல்லரென்பதையும், பெற்றோர் முதலிய பிறர் அவ்வுறவை யாக்கி வைத்த பிறகே அவர் அவ்வுறவை யடைந்து அவ்வன்பின ராகற்பாலாரென்பதையும் உம்மால் அறிய முடிகிறதா?

III. 26. இறுதிவரை நின்று இன்பம் பயப்பது காதன் மணமா (Marriage after love)? மணக் காதலா (Love after marriage)?

A. 27. காதன்மணமெனின் பித்ருபக்தி புத்ரவாத்ஸல்யம், சகோதரவாஞ்சை முதலியன இறுதிவரை நின்று இன்பம் பயப்பதில்லையா?

28. மணக்காதலால் இன்பவாழ்வெய்துங் குடிகள் பல்கோடி இன்றும் இருப்பதில்லையா?

29. உம் ஈ வே. ரா, ஸி. என். ஏ. முதலியோருக்கு நடந்தது காதன்மணமா? மணக்காதலா?

30, காதலித்து மணந்தாருள் எக்காரணத்தையாவது முன்னிட்டு ஒருவரை யொருவர் விலக்குதல் (Divorce) முதலியன செய்து புதுப்புதுக் காதலரையும், புதுப்புதுக் காதலியரையும் அவ்வப்போது தேடிவைத்துக்கொள்ளும் போலிமக்கள் பலர் இன்றும் இலரா?

31. காதலன் காதலியைக் கைவிட்ட பாட்டொன்று கான் சாகிபு என்பவரால் எழுதப்பட்டுப் 'பகுத்தறிவு' III, 2இல் முன்னிடம் பெற்றிருப்பதை யறிவீரா?

B. 32. மணக்காதலெனின் காதன்மணத்துக்கு நீர் ஆசைப்படுவதேன்?

33. கணவன்மனைவி யுறவில் தளர்வு நேரில் மானங்கெடுமென்பதை யறிவீரா?

34. அவ்வுண்மை அழுத்தி உபதேசிக்கப்பட்டால் தம்பதிகளுக்குள் அன்பு குறையக் காரண மிருக்குமா?

IV. 35. காதல் உண்டாதற்கு அழகே முதல் வாயிலன்று?

36. அஃது இயற்கையின் பிரசாத மன்று?

37, அழகில்லாதான் தனக்கு அழகில்லா திருப்பதை யுணர்ந்து அழகில்லாதாளைக் காதலிக்க ஒருப்படுவானா?

37. அப்படியே அழகில்லாதாளும் அழகில்லாதானைக் காதலிக்க ஒருப்படுவாளா?

39. இருபாலாருள்ளும் அழகிலாதார் எத்தனையோபேரிலரா?

40. அவர் காதலிப்பதும் மணப்பதும் வாழ்வதும் எப்படி?

41. மணக்காதலில் தம்பதிகள் குரூபிகளாயினுந் தம்முட் காதலிக்குங் கடப்பா டுடைய ரல்லரா?

V. 42. உண்மைக் காதலென்பது ஆயுள் பரியந்தம் ஒருவன் ஒருத்தியையும், ஒருத்தி ஒருவனையுமே காதலிப்பதா? ஒருவன் பல பெண்டிரையும், ஒருத்தி பல ஆடவரையுங் காதலிப்பதா?

A. 43. முன்னையதெனின் விலக்குதல் 'Divorce) மறுமணம் முதலியவற்றை நீர் விரும்பலாமா?

B. 44. பின்னையதெனின் வேசிக்கும் அக்காதலிக்கும், விபசரிப்பவனுக்கும் அக்காதலனுக்கும் வேற்றுமை யென்னை?

VI. 45. கலியாணத்தின் பொருட்டு இன்னான் இன்னாளைத்தான் இன்னாள் இன்னானைத்தான் காதலித்தல் வேண்டுமென்ற வரம்பு உம்மவர்க்குள் உண்டா? இல்லையா?

A. 46. உண்டெனின் அவ்வரம்பாவது யாது?

47. காதற்குக் கண்ணில்லை (Love is blind) என்னும் உம் கொள்கை அதனால் அழியாதா?

48. அவ்வரம்புக்குப் பயன்தா னென்னை?

B. 49. இல்லையெனின் தமையனுந் தங்கையுந் தம்முட் காதலித்து மணந்து கொள்ளலாமா?

50. தமையனுந் தங்கையுஞ் சிறுவயதிலிருந்தே தம்முள் நன்கு பழகியவ ரல்லரா?

51. ஒருவரியல்பு மற்றவர்க்கு நன்கு தெரிதல் கூடு மன்று?

52. காதலுக்குமுன் காதலிப்பாரிருவரும் நன்கு பழகி ஒருவரியல்பை மற்றவர் அறிந்தவரா யிருக்கவேண்டு மென்கிற உமக்குத் தமையன் தங்கைமார் தம்முள் மணந்துகொள்ள நேர்ந்தாற் பரம திருப்தி யுண்டாகாதா?

53. அறுத்தவள் அயலாள் மூத்தவள் ஓடிப்போனவள் முதலியோர்மேற் செல்லும் உம் காதல் உம் தாய் தங்கை மகள் முதலியோர் மேலும் எப்படிச் செல்லாமலிருக்கும்?

54. தாய்மகன், தங்கைதமையன். மகள்தந்தை யென்ற வுறவுகளுக்குள்ள பிரத்தியேக கௌரவம் அக்காதலைத் தடுத்துநிற்குமென்பீராயின் அக்கௌரவத்தை நீர் அங்கீகரிக்கிறீரா?

55. Their (Self-Respectors') objection (to Kamba Ramayanam) is based on the fact that the theme of the

Ramayana is the glorifiication of primitive virtues like father worship, mother worship, brother worship etc., which migbt have been necessary to hold together the tribal society of thousands of years ago but are unsuited and indeed, anti-social under modern conditions' என்று முன் சென்னை மந்திரியா யிருந்தவரும், இப்போது சென்னைச் சுயமரி யாதை லீக் காரியதரிசியா யிருக்கின்றவருமாகிய எஸ். ராமநா தன் எம். ஏ., பி. எல்., எழுதியுள்ளது 7—4—1945 'ஹிந்து'வில் வந்திருப்பதைக் கண்டீரா?

56. அப் பிரத்தியேக கௌரவம் இனி வேண்டுவ தின்றென் பதே உம் கொள்கையாவதில் தடையென்னை?

57. ஆகலின் அண்ணன்மனைவி, தம்பிமனைவி, மகன்மனைவி முதலியோரைத் தாய், தங்கை, மகள் முதலியவராகக் கௌர விக்க வேண்டுமென்ற நியதி உமக்கு அநாவசிய மன்று?

58. அன்றியுஞ் சாதிபேதம் காதலைத் தடை செய்வதென் பது உமக்குக் கொள்கையன்று?

59. அப்படியே முறைபேதங்களும் அதனைத் தடை செய்ய வில்லையா?

60. சாதிபேதங்கள்போல் முறைவகைகளும் உமக்கு மக் கள் செய்த காரியங்களே யல்லவா?

61. ஆகலின் காதல் கரைகடந்து செல்லுதற் பொருட்டுச் சாதிகளைப்போல் முறைகளையும் நீர் தகர்த்தெறிய வேண்டாமா?

VII. 62. கணவன் மனைவியாவோர் காதலிப்பதற்கு முன் பரஸ் பரம் ஆராய்ந்து கோடல் வேண்டு மென்பதில் புணர்ச்சி பற்றிய ஆராய்ச்சியும் நிகழுமா?

63. நிகழாதாயின் ஏன்?

64. உறை போட்டுக் கொண்டாயினும் புணர்ந்து பார்த்துக் கொண்டா லென்னை?

65. மணவாழ்க்கை புணர்ச்சி யின்பத்துக்கேயா மென்கிற உமக்கு அஃதல்லாத பிறவெல்லாங் குறைவுடையனவே யல்லவா?

66. உள்ளடங்கின கொடுநோய்களை மறைத்து வைத்துக் கொண்டு காதலென்னும் வியாஜத்தால் ஏழைப் பெண்டிரை ஆடவரும், ஏழை யாடவரைப் பெண்டிரும் மணந்து வாழ்வைக் கெடுப்பது அதிக மன்று?

67. ஆராய்ச்சி யின்றி நிகழும் காதல் காதலா? வெறியா?

VIII. 68. பித்ருபக்தி புத்ரவாத்ஸல்யம் என்னும் அன்பு கெட்டால் புத்ரன் பிதாவென்னும் உறவு கெடுவதுண்டா?

69. காதலென்னுங் கணவன்மனைவியன்பு கெட்டால்மட்டில் கணவன் மனைவி யென்னும் உறவு கெடலாமா?

70. ஆகாதெனின் விலக்குமணம் விதவைமணம் முதலியவற்றை ஏன் ஆதரிக்கிறீர்?

IX. 71. மனைவியோ டிருக்கும் ஒருவனை இன்னொருத்தி காதலிக்கலாமா?

72. அப்படிக் காதலிக்கும் பெண்டிர் உளரென்பதை 'He (Gandhi) had known educated girls who thought nothing of marrying men having a living wife' என்று 13—4—1945 'ஹிந்து'வில் காந்தி சொல்லியதைக் கண்டிலீரா?

73. மணத்துக்கு வாய்ப்பிருந்தால் அக்காதலிற் குற்றமென்னை?

X. 74 புணர்ச்சிக்குத் தகுதியற்ற நபும்ஸகராதியோரைக் காதலிக்கலாமா?

75. ஆகாதெனின் புணர்ச்சியை யுத்தேசித்துத்தான் காதல் வேண்டப்படுவதாயிற் றென்பது சித்தியாதா?

76. அக்காதல் விலங்குவெறியினும் எப்படி மேம்பட்டதாகும்?

XI. 77. பழந்தமிழ் இலக்கியங்களில் காதலித்து மணந்தாரின் சரிதம் (நிகழ்ந்தது) ஒன்றையேனுங் காட்டுவீரா?

78. பரவையார் வள்ளிதேவியார் என்பாரின் திருமணங்கள் நீர் பழிக்கும் புராணங்களில் உளவாகலின் அவற்றை எடுத்துக் காட்டலாமா?

XII. 79. கற்பு (மணத்து)க்கு முன் உம் களவி(காதலி)ல் உமக்குட் புணர்ச்சி உண்டா? இல்லையா?

A. 80. உண்டெனின் இக்காலை உம்மவருள் அங்ஙனம் புணர்ந்தவர் உளரா?

81. உளரெனின் அப்புணர்ந்து மணந்தவருட் சிலரின் பெயரையாவது வெளியிடுவீரா?

82. 'தலைவனை யிறந்தபோதும்', 'வருதிநின் மரபுக் கெல்லாம்' என்ற திருவிளையாடற்புராண பாசுரங்களிலும், 'வாளரவு தீண்டவுந்தான் றீண்ட கில்லாள்' என்ற பெரிய புராண பாசுரத்திலுங் கண்ட பழந்தமிழரின் ஒழுகலாற்றை யென்னென்பீர்?

B. 83. இல்லையெனின் 'புணர்ச்சி மகிழ்தல்' என்னுந் துறைக்குக் கதி யாது?

XIII. 84. தமிழிலக்கணங்களில் களவொழுக்கக் காதலர்களின் இலக்கணங்கள் இவையென்று கூறப்பட்டிருப்பதைப் படித்திருப்பீரா?

85. உம்மவருள் அக்காதல் மணஞ் செய்துகொண்டாருள் அவ்விலக்கணங்க ளுடையார் யார்?

86. அவ்விலக்கணங்களை யாராய்வார் காதல்மணம் உலக வழக்கிற் கிசைந்ததென்று மறந்துங் கூறுவாரா?

87. செந்தமிழறிஞரும் களவொழுக்கம் (காதல்மணம்) 'இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்ட' தொன்றாகலின் 'உலக வழக்கத்தினோடு இயையா' தென்றறிக என்று அறுதியிட் டுரைத்தா ரல்லரா?

88. Poetical imagination அல்லது Conventional usage அல்லது புலனெறிவழக்கு எனப்படும் காதல் மணத்துக்கு அவாவுகிற நீர் கனவுலகில் வசிப்பீராவிரல்லீரா?

89. நீர் காதல் மணப் பிரசாரத்துக்குக் கற்பனைக் கதைகளையே கோடித்துப் பிரசுரித்து வருவதிலிருந்தும் உமக்கு அவ்வாசம் உண்டென்பது பெறப்படாதா?

ஆக அநுவாதம் 13க்கு ஆசங்கை 965.

—(≣)—

14 அறுதலி மணம்.*

அநுவாதம்.

ஆடவர் ஒரு மனைவி யிறந்திடின் மற்றொருத்தியை மணந்து கொள்ள அநுமதிக்கப்படுகின்றனர், ஆகலின் அறுதலிகளும் இன்னொருவனை மணந்துகொள்ள அநுமதிக்கப்படலாம். அவர் சோரம் போதலும் அதனால் ஒழியும்.

ஆசங்கை.

I. 1. ஆடவர்க்கு அந்த மணம் பொருந்துமா? பொருந்தாதா?

A. 2 பொருந்துமெனின் தமக்குப் பொருந்திய தொன்றைச் செய்துவருகிற அவர் அவ்வுரிமையைப் பெண்டிர்க்கு இலதாக்கித் தாமே சுவிகரித்துக் கொண்டாரென அவரைக் குறை கூறுவானேன்?

B. 3. பொருந்தாதெனின் அவ்வழக்கத்தை ஆடவர்க்கும் ஒழித்தலே நீதி யன்றோ?

---

* அறுதாலியென்பது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் விதவைக்குப் பெயராயிற்று. உலகில் அஃது அறுதலியென வழங்கும்.

4. அதனை விடுத்து ஆடவர் மாத்திரஞ் செய்கின்றாரே யென நீர் சொல்லும் அப்பிழையைப் பெண்டிரும் ஏன் செய்ய லாகாதெனக் கேட்டல் முறையா?

II. 5. ஒருத்தி பலரைப் பலகாலும், மற்றொருத்தி சிலரைச் சிலகாலும், பின்னொருத்தி ஒருவனையே மிகச்சிலகாலும் புணர்ந்து மகிழ்வதில்லையா?

6. அம்மூவருள் முதலாமவளினும் இரண்டாமவளும், இரண்டாமவளினும் மூன்றாமவளும் விலங்குவெறி குறைந்தவ ரென மதிக்கப்படாரா?

7. அங்ஙனமாக விலங்குவெறியை விடுத்து அன்பனை நினைந்து வைதவ்வியங் காக்கும் வீரப்பெண்டிரின் மனத்திட்பத்தை மறுமண வெறிகொண்ட அறுதலிகளுக்குப் பல்லாற்றா னுணர்த்தி அவ்வறுதலிகளையும் மக்கட்டன்மையில் நிறுத்தி வைத்தலே அவர்பாற் கௌரவத்தைக் காட்டியதாய் முடியாதா?

8. வேண்டுமாயின் அப்பெண்ணரசிகளின் கற்பொழுக்கத்தை ஆடவர்க் குணர்த்தி அவர்களையும் வெள்கச் செய்தல் நல மன்றா?

III. 9. விபசாரத்துக்கும் விதவைமணத்துக்கும் வேறுபா டென்னை?

10. அவ்விரண்டனுள் மானமுடையது இதுவென்பதை நிச்சயிக்க விபசாரியையும், மறுமணஞ் செய்துகொண்ட அறுதலியை யுர் வாதசபையில் விட்டுப் பார்க்கலாமா?

IV. 11. கொற்றி சாத்தனை மணந்து முருகனைப் பெற்றுக் கொண்ட பிறகு சாத்தன் இறக்க அறுதலியான அக்கொற்றி இராமனை மறுமணஞ் செய்துகொண்டால் அவ்விராமன் அம்முருகனையும் ஊணுடை கொடுத்துக் காப்பாற்ற வேண்டாமா?

12. அப்போது அம்முருகன் அவ்விராமனுடைய சொத்துக் குப் பாத்தியப்படுவானா? மாட்டானா?

A. 13. படுவானெனின் அப்பாத்தியதைக்குப் பெயரென்ன?

14. அவ்விராமன் அம்முருகனுக்குப் பட்டுள்ள கடனுக்குப் பெயரென்ன?

B. 15. மாட்டானெனின் அவ்விராமனிடமிருந்து ஊணுடைகளைப் பெறுதற்குமட்டில் அம்முருகன் எவ்வாறு பாத்தியப்பட்டான்?

16. அவ்விராமனும் அம்முருகனுக்கு அவற்றைக் கொடுத்துக் காப்பாற்ற எங்ஙனங் கடப்பட்டான்?

17. அம்மூருகன் அவ்விராமனை எம்முறை வைத்து அழைப்பான்?

18. பிள்ளைக்குத் தன்னைப் பெற்றவனே அப்பனல்லனு?

19, அம்மையைப் புணர்ந்தவரெல்லாருமே அப்பன்மாராய்விடுவரா?

20. அம்முருகனைப் பெற்ற தாயாகிய கொற்றிக்கு அவ்விராமன் கணவனுனதுகொண்டே அம்முருகனுக்கு அவ்விராமன் பெற்றப்பனுதல் யாங்ஙனம்?

21. அவனு அம்முருகனைப் பெற்ருன்?

22. பெற்ற தாய்க்குக் கணவனு யிருப்பவன் சிற்றப்பனே பெரியப்பனே ஆதல்தான் யாங்ஙனம்?

23. ஆகலின் அம்முருகனுக்கு அவ்விராமன் சிற்றப்பனே பெரியப்பனே ஆவனு?

24. அவ்விராமனிட மிருந்தும் அவ்வறுதலிக் கொற்றி சோமனைப் பெற்றுக்கொண்டால் அம்முருகனுக்கும் அச்சோமனுக்கும் முறை யென்ன?

25. நெல்லை எத்தனை நிலங்களில் விதைத்தாலும் நெற்பரம்பரையே உண்டாகு மன்ரு?

26. அப்படியே சாத்தன் எத்தனை மனைவியரிடம் தன் Spermatozoonகளைத் தூவினாலும் சகோதரராவார் அப்புதல்வரே யல்லரா?

27. நெல்லை விதைத்த நிலத்திற் கொள்ளை விதைத்தால் நிலம் ஒன்றானதுபற்றி நெல்லுங் கொள்ளுமே ஓரினமாய்விடுமா?

28. அப்படியே ஒரே கொற்றி வயிற்றில் சாத்தன் விதைத்தெடுத்த அம்முருகனும், இராமன் விதைத்தெடுத்த அச்சோமனும் அவ்வயிறு ஒன்றானதேபற்றிச் சகோதரராதல் யாங்ஙனம்?

29. கிட்டனை மணந்து நாணனைப் பெற்றதும் அக்கிட்டன் இறந்ததால் விதவையான குப்பியும் அவ்விராமனை மறுமணஞ் செய்துகொண்டால் அந்நாணனுக்கும் அம்முருகனுக்கும் முறையென்ன?

30, அவ்விருவர்க்கும் அப்பன்மாராகிய சாத்தனும் கிட்டனும் வேறாயினாற்போல் அம்மைமாராகிய கொற்றியுங் குப்பியும் வேறாயினா ரல்லரா?

31. அக்குப்பி அவ்விராமனிடமிருந்து கம்பனைப் பெற்றுக் கொண்டால் அவ் விராமன்வயிறேபற்றிக் கொற்றிவயிற்றுச் சோமனுங் குப்பி வயிற்றுக் கம்பனும் சகோதர ராகாரா?

32. கொற்றியாகிய தாய்வயிறேபற்றி அம்முருகனும் சோமனும் சகோதர ராகலாமா?

33, குப்பியாகிய தாய்வயிறேபற்றி அக்கம்பனும் நாணனும் சகோதர ராகலாமா?

34. ஆகலாமெனின் அம்முருகன் சோமன் கம்பன் நாணன் என்னும் நால்வருமே ஏன் சகோதர ராகார்?

35. ஆவரெனின் சகோதர ரென்னுஞ் சொல்லின் பொருளே விபசரிப்பதை யறிகிறீரா?

36. அச்சாத்தன் உயிரோடிருந்தபோது அக்கொற்றியோடு மாரியையும் மணந்திருந்தானென வைத்துக்கொண்டால் அக் கொற்றிக்கு அம்மாரி சக்களத்தியல்லளா?

37. அப்படியே அவ்விராமனிடத்தில் அக்கொற்றியுங் குப்பியும் சக்களத்திகளல்லரா?

38. அப்போது அம்மாரிக்குங் குப்பிக்கும் முறையென்ன?

39. அவ்விருவரும் ஒரே கணவனுக்கு மனைவிக ளல்லராகலின் சக்களத்திகளாதல் யாங்ஙனம்?

40. அம்மாரி கொற்றிக்கும், அக்கொற்றி குப்பிக்கும் சக்களத்திமா ராகலின் அம்மாரி கொற்றி குப்பி மூவரும் சக்களத்திமா ராகாரென்றலும் யாங்ஙனம்?

V. 41. கணவனை யிழந்த மறுகணத்தில் மறுமணஞ் செய்துகொண்ட அறுதலி ஒன்பதாம் பத்தாம் மாதத்திற் பிள்ளை பெற்றால் அப்பிள்ளையின் அப்பன் இன்னானென நிச்சயிப்பதெப்படி?

42. அத்தகைய வழக்குகள் நடந்துவருஞ் சாதிகள் இன்றும் இலவா?

43. விபசாரிகள் கூட்டத்திற்றானும் அவ்வழக்குகள் உளவா?

44. ஆகவே அறுதலிகள் மறுமணத்துக்குமுன் இரண்டு மூன்று மாதமாவது வைதவ்வியங் காத்தல் அவசிய மன்றோ?

VI. 45. பிள்ளை பெறவா இன்பம் நுகரவா அறுதலிகள் மணந்துகொள்ளவேண்டும்?

46. மணஞ் செய்துகொள்ளாமலே விலங்காதியவும் விபசாரிகளும் குட்டிகளைப் பிள்ளைகளை ஈனவில்லையா?

47. புணர்ச்சியின்பம் நுகரவில்லையா?

48. அவ்விரண்டன் பொருட்டும் அறுதலிக்கு மட்டில் மணமேன்?

49. மேலும் ஒருவன் தன் மனைவி வயிற்றிற் பிள்ளை பெறுவது அவனுக்கு ஆநந்தமாக விராதா?

50. அவன் எத்தனை மனைவியரை மருவினும் தனக்குப் பிள்ளை வேண்டாமென வெறுத்து மருத்துவஞ் செய்துகொள்ள ஒருப்படுவானா?

51. ஒருத்தி தன் வயிற்றிலிருந்து ஒரு குழந்தையை வெளிப்படுத்து முன்னும் படுத்திய பின்னும் பெரும்பாடு படாளா?

52. எத்தனை ஆடவரை மருவினும் தம் வயிற்றிற் பிள்ளையுதியாதபடி மருத்துவஞ் செய்துகொண்டலேயும் பெண்டிர் பலர் இன்றும் உளராவதற்கு அப்பாடே காரணமன்றோ?

53, இன்னுப் தான் ஒருத்தி வயிற்றிற் பெற்ற சிசுவைத் தன்ன தன்றென்று நிராகரிக்க அப்பனுக்கு முடியாதா?

54. ஒருவனிடமிருந்து தன் வயிற்றில் வாங்கிப் பெற்ற சிசுவைத் தன்ன தன்றென்று நிராகரிக்க அம்மைக்கு முடியுமா?

55. ஆகவே பிள்ளைப்பேற்றை விரும்பவோ வெறுக்கவோ ஆடவர்க்கே முடியு மென்பதை யறிகிறீரா?

56. பெண்டிர் பிள்ளைப்பேற்றை வெறுக்கலாமேயன்றி விரும்புதல் யாங்ஙனம்?

VII. 57. அறியாப் பருவத் தறுதலிக (Minor widows)ளாயினும் மறுமணஞ் செய்துகொள்ள அநுமதி கிடையாதா வென்பீராயின் அவரை மறுமணஞ் செய்துகொடுக்கும் உரிமை அவர் புகுந்த வீட்டாருக் குண்டா? பிறந்த வீட்டாருக் குண்டா?

A. 58, புகுந்த வீட்டாருக்கெனின் கணவன் சொத்தில் மனைவிக்கும் பங்கு வேண்டுமென்னுங் கொள்கையையுடைய நீவிர் அவ்வறுதலிகளை முதற்கணவன் சொத்தில் அவர்க்குரிய பங்கோடு சேர்த்தே இரண்டாங் கணவனுக்குக் கொடுத்தல் வேண்டாமா?

59. முதற்கணவன் சொத்துக்கு இரண்டாங் கணவன் என்ன உரிமை உடையான்?

60. முதற்கணவன் சொத்து இரண்டாங் கணவனுக்கும், அவ்விருவர் சொத்தும் மூன்ருங் கணவனுக்கும் செல்லுமாறு புத்தியுள்ள புகுந்த வீட்டார் அம்மணத்தை நடத்தி வைப்பாரா?

61. எந்தக் கலியாணமுங் கொண்டான் கொடுத்தான் சம்பந்தத்தையே உண்டாக்கவல்ல தென்பது தெரியுமா?

62. அடுத்தடுத்து அறுதலியான வொருத்தியின் முதற் கணவன் வீட்டாருக்கும் மூன்ருங் கணவன் வீட்டாருக்கும் என்ன சம்பந்தம்?

63. அவளை மூன்ருங் கணவனுக்குக் கொடுத்தவர் அவளின் இரண்டாங் கணவன் வீட்டாரே யல்லரா?

64. முதற் கணவன் வீட்டாருக்கும் மூன்ருங்கணவனுக்கும் ஒரு சம்பந்தமு மில்லையெனின் முதற்கணவன் சொத்துக்கு மட்டில் மூன்ருங் கணவன் உரியவ ஞகலாமா?

65. இரு வீட்டாருமே அவனுக்குக் கொடுத்தவரெனின் பத்துத்தடவை கட்டி யறுத்த ஒரு அறுதலியின் பதினேராங் கணவனுக்கு அப்பத்து வீட்டாருமே கொடுத்தவ ராவரா?

66. ஆயின் அப்பத்து வீட்டாருள்ளும் அவனுக்கு மாமன் மாராவார் யார்? மைத்துனன்மா ராவார் யார்?

B. 67. பிறந்த வீட்டாருக்கெனின் புகுந்த வீட்டுக்கு உடைமையாய்ப் போன அவ்வறுதலிகளை அப்புகுந்த வீட்டார் மானமுடையராயின் பிறந்தவீட்டுக்கு மீண்டும் உடைமையாம்படி அனுப்பிவிடுவாரா?

68. மாட்டாராகலின் புகுந்த வீட்டாருடைமையாகிய அவ்வறுதலிகளைப் பிறந்தவீட்டார் மறுமணஞ் செய்துகொடுக்க எங்ஙனம் உரியராவார்?

69. அறியாப் பருவத் தறுதலிகளை மீண்டும் அறியாப் பருவத்திலேயே கட்டிக் கொடுப்பதாயின் அஃ திளமணமாகி நீர் அவ்வப்போது வெளியிடும் ஆசங்கைகளுக் கிடஞ் செய்யாதா?

70. அறிந்த (Majorஆன) பிறகு கட்டிக் கொடுப்பதாயின் அது முதுமணமாகி அவ்வநுவாதத்தின்கீழ் யாம் வெளியிட்டுள்ள ஆசங்கைகளுக் கிடஞ் செய்யாதா?

VIII. 71. பிள்ளைகளைப் பெற்றபிறகு அறுதலிகளானவருக்கு மறுமணம் வேண்டா மென்பீராயின் எத்தனை பிள்ளைகளைப் பெற்றபிறகு அறுதலிகளானவருக்கு அம்மணம் வேண்டா மென்கிறீர்?

72. ஒன்றிரண்டு பிள்ளைகளைப் பெற்று அறுதலிகளானவருக்குக் காமவெறி நீங்கிவிடுமா?

73. அது நீங்கப்பெறுத அவர் மறுமணத்துக்கு ஆசைப்பட்டு அப்பிள்ளைகளைத் தொலைக்க வழிதேடினுந் தேடலாமன்று?

74. புணர்ச்சி யின்பமே யின்பமென்னும் உம் பிரசாரம் வலுக்குமாயின் பல பிள்ளைகளைப் பெற்று அறுதலிகளானவர்கூட அப்பிரசாரத்தால் காமவசப்பட்டுத் தம் பிள்ளைகளை விட்டு எவன் பின்னுவது ஏன் ஓடமாட்டார்?

75. காமவெறியே கதியென்றிருக்கும் உம் கூட்டத்துப் பல பெண்டிர் பிள்ளைப்பேற்றைத்தான் விரும்புவாரா?

76. அவர் ஏன் கர்ப்பத்தடை செய்துகொள்ள மாட்டார்?

IX. 77, கன்னிகளா யுள்ளார் பூப்படைந்து சில வாண்டுகள் கழிந்த பிறகுதான் மணந்து கொள்ளவேண்டு மென்பதே உம் கொள்கை யன்று?

78. அப்பூப்படைந்தவரும் அறுதலிகள் போன்று கணவனில்லாதவரே யல்லரா?

79. வெறி அப்பூப்படைந்தார்க்கு மட்டில் உண்டாகாதா?

80. ஆகலின் அவரும் ஏன் சோரம் போகார்?

81. அறுதலிகள் மறுமணஞ் செய்துகொள்வதால் அவர் சோரம் போதல் ஒழியுமென்கிற நீவிர் அப்பூப்படைந்தாரை மட்

டில் சோரம் போதற்கு இடனுண்டாமாறு பல்லாண்டுகள் மண மின்றியிருக்க விட்டுவைக்கலாமா?

82. மறுமணமே அறுதலிகளின் சோரத்தைத் தடுக்குமென் பீராயின் இளமணமே பூப்படைந்து கணவனை யடையும்வரைத் தனித்திருப்பாரின் சோரத்தைத் தடுக்கவல்லதென்பதையும் அறி கிறீரா?

83. அறுதலிகள் சோரம் போவதே அதிகம், பூப்படைந்து கணவனைப் பெறுதார் சோரம் போவது குறைவே யென்பீராயின் அறுதலிகளுட் சோரம் போனவர்க்கும் அவர் பெற்ற திருட்டுக் குழந்தைகட்கும், பூப்படைந்து கணவனைப் பெறுதாருட் சோரம் போனவர்க்கும் அவர் பெற்ற திருட்டுக் குழந்தைகட்கும் கணக் குக் கூறுவீரா?

84. கட்டுக்கழுத்தி (கணவன்மாரோ டிருக்கும் பெண்டிர்) களுட் சோரம்போவா ரிலரா?

85. அவரையும், சோரத்தால் அவர் பெற்ற குழந்தைகளை யும் உம்மாற் கணக்கெடுத்துக் கூறமுடியுமா?

86. சோரபுத்தியுடைய தூர்த்தைக்குக் கணவனிருந்தால் அவள் தான் பெறுந் திருட்டுக் குழந்தைகளை யெல்லாம் அவனே பெற்றுனென உலகிற் கறிவித்துக்கொண்டு சோர மார்க்கத்தில் தாராளமாய்ச் சரிக்க மாட்டாளா?

87. பூப்படைந்து கணவனைப் பெறுதவளுக்கும் அறுதலிக் கும் அவ்வசதி யில்லாமையால் அவர் சோரபுத்தி யுடையராயி னும் மானம் போய்விடுமேயென் றஞ்சி அப்புத்தியை யடக்கி நேர் வழியில் திருப்பி ஜாக்கிரதையாக வாழமாட்டாரா?

88 ஆகவே கணவனில்லாமையாற்ருன் அறுதலிகள் சோரம் போகின்றனரெனல் எங்ஙனம் பொருந்தும்?

X. 89. அப்பன் சொத்திலுங் கணவன் சொத்திலும் பங்கு பெற்ற இடமின்றிப் பொருளாதாரக் குறைவு நேர்வதாற்ருன் அறு தலிகள் சோரம் போகின்றனரென்பீராயின் பெரிய உத்தியோ

கஸ்தர், பெருந்தனவந்தர் வீட்டுப் பெண்டிருள்ளும், பெரிய வுத்தியோகம் பெறும் பணம் உடைய பெண்டிருள்ளும் அறுதலிகளாயிருப்பார் சோரம் போதல் இல்லையா?

90. அதனை மறைப்பதற்குப் பொருளாதாரக் குறைவைப் புகலாகக் காட்டி வறியகுடும்பத் தறுதலிகளிடத்தில் மாத்திரம் அப்பழியைச் சுமத்துவது வறிய குடும்பங்களையே பழிப்பதாகாதா?

91. பெண்டிரை அவரியல்பிற்கேற்ற கல்வியிற் பயிற்றாமலும், குடித்தனத்துக்குப் பாங்கல்லாத துன்மார்க்கக் கலைகளிற் பயிற்றியும் வருவதே அவர் துஷ்ட புத்திக்குக் காரணமென்பதை உம்மால் ஏன் உணர முடியவில்லை?

XI. 92. உம்மவருள் விதவைகளை மணந்துகொண்டாருளரா?

93. உளராயின் அநேகமாய் அவ்வறுதலிகளெல்லாரும் முதலில் மணஞ் செய்துகொண்ட கணவன்மாரைப் புணர்ந்தவரல்லரா?

94. அவ்வறுதலிகளின் இரண்டாங் கணவன்மாராகிய அவ்வும்மவர் தம் சாவுக்குப்பின் மீண்டும் அறுதலிகளான அப்பெண்டிர் மூன்றாமுறையாக வேறு கணவன்மாரைப் புணரவும் அநுமதிப்பவரல்லரா?

95. அங்ஙனம் தமக்கு மனைவியராய் வந்தவர் முன் பலரைப் புணர்ந்ததாலும் பின் பலரை வேண்டுமாயிற் புணர்வதாலும் மானங் கெடப்பெறாத அவ்வும்மவர் தாமிருக்கும்போதும் தம் விதவை மனைவியர் வேறொருவரையும் புணர விடுவதால் எப்படி மானங்கெடப்பெற்றவராவர்?

96. உம்மவருட் பெண்டிராயுள்ளார் தங் கணவன்மாருக்கு அடியரல்லராகலின் அவருடைய அச்செயல்கள் அக்கணவன்மாரின் மானத்தைப்போக்காதென்பீராயின் சுதந்திரராயிருந்து மேற்கண்ட ஒழுகலாற்றையுடைய விதவை மனைவியர்க்குக் கணவராயுள்ளார் சிலரையாவது காட்டுவீரா?

97. அவ்வொழுகலாறு அம்மனைவியரின் மானத்தையாவது கெடாதா?

98. கெடுக்குமெனின் எப்படி?

99. எவனொருவன் விதவை மணத்தை அங்கீகரிக்கவேண்டுமெனப் பிரசாரஞ் செய்கிறானோ அவன் தன் மனைவியையும் அயலானுக்கு விடச் சம்மதிக்கிறானென்பது பெறப்படாதா?

XII. 100. விதவையை மணந்த நீர் புணரும்போது உம் திறத்தை அவள் மெச்சவேண்டாமா?

101. அவள் தன் முதற் கணவன் திறத்தையே அதிகமெனக் கண்டால் உம்மை மனமார மெச்ச முடியுமா?

102. அவன் திறத்தை அவள் உம்மிடம் மெச்சிப் பேசிவிட்டால் உம் மானங் கெடாதா?

103. அவளை வைத்துக்கொண்டுதான் நீர் வாழ்வீரா?

104. திறங்கெட்ட வும்மை அவள் தன் வாழ்வு கருதிப் பொய் சொல்லித்தான் புகழவேண்டுமன்று?

105. இனி உம் சாவுக்குப் பிறகு அவள் இன்னொருவனை மணக்க அவன் புணர்ச்சித் திறனும் அதிகமா யிருப்பதை அவள் கண்டால் அவன்முன் உம்மை உள்ளும் புறமும் ஒக்க இகழமாட்டாளா?

106. அதை நீர் உம் சீவிய தசையிலேயே யெண்ணிப் பார்க்கின் உமக்கு லஜ்ஜை உண்டாகவில்லையா?

XIII. 107. கணவன் இறந்து எஞ்சிநின்ற மனைவி அறுதலி யெனப்படுவதுபோல் கணவனாலேயோ தானேயோ விலக்கு (Divorce) ஆன மனைவியும் ஏன் அறுதலி யெனப்படாள்?

108. அவ்வறுதலி மணத்துக்கான ஆசங்கைகளுட் பெரும்பாலன இவ்வறுதலி மணத்துக்குமா மென்பதை யறிகிறீரா?

109. கணவன் குடிகாரனு யிருந்தால் மனைவி அவனை விட்டு விலகி வேறொருவனை ஏன் மணந்துகொள்ளக்கூடாதென்பீராயின் நாகரிக மென்னும் பேரால் கணவனும் மனைவியுமே சேர்ந்து மேல் நாட்டுக் குடி வகைகளை வேண்டுமட்டிற் குடித்து நாறிக்கிடக்குந் தம்பதிகள் பல்லாயிரவர் இன்றும் இலரா ?

110. அவர் தம்முள் விலக்குச் செய்துகொள்வ தெப்படி ?

111. அவர் அப்படியே வாழ்ந்து வரலாமா ?

112. நோயாளனின் மனைவி அவனை விட்டு விலகி வேறொருவனை மணஞ்செய்துகொண்டா லென்னை யென்பீராயின் அவள் நோய்வாய்ப்பட்டிருந்தால் அவளை அவன் விலக்கி விடலாமா ?

113. ஆமெனின் அவளுக்கு அவன் ஜீவனும்சம் கொடுக்க வேண்டு மென்னீரா ?

114. அப்படியே அவனை அவள் விலக்குவதா யிருந்தால் அவளும் அவனுக்கு ஜீவனும்சங் கொடுக்க வேண்டாமா ?

115. அவனை வைத்து அவளா ஆதரிக்கிறுளென்பீராயின் அப்படி யொருத்தி யிருப்பாளேயானுல் அவள் விஷயத்தில் அவ வாசங்கை யுண்டாகாதா ?

116. ஒருவனுக்கு மனைவி நோய்வாய்ப்பட்டிருந்தால் அவன் அவளையுந் தன்னோ டிருத்திக்கொண்டு வேறொருத்தியை மணந்து கொள்வதில்லையா ?

117. அவன் ஸ்தானத்தில் அவளிருந்தால் அவள் நோய்வாய்ப் பட்ட அவனையுந் தன்னோ டிருத்திக்கொண்டு வேறொருவனை மணந்து வாழமாட்டுவாளா ?

118. கணவன் மனைவியரா யுள்ளவர் தம்முள் ஒருவர்க் கொருவர் அடியரல்லர் ; இருவருந் தனித்தனி சம்பாத்திய முடையவர் ; ஆகலின் ஒருவர்க்கொருவர் ஜீவனும்சங் கொடுக்க வேண்டா மென்பீராயின் அவ்விருவருங் கணவன் மனைவியரா யிருக்கும்போதே அவன் வேறு சில அரிவையரைப் புணர்வதால்

அவளுக்கும், அவள் வேறு சில ஆடவரைப் புணர்வதால் அவனுக்கும் வரும் நட்ட மென்னே ?

XIV. *119*. கணவனிடமிருந்து விலக்குப் பெற்றுக்கொண்டவொருத்தி வேறொருவனை மணக்கும்போது அம் மணவழைப்பு அம் முதற் கணவனுக்கும் வரலாமன்று ?

120. அம்முதற் கணவன் தன் மனைவியின் அவ்விரண்டா மணத்துக்குப்போய் அதனைச் சம்பிரமமாக நடத்தித் தன் பிரசங்கத்தால் அத்தம்பதிகளை உவப்பித்துத் தாம்பூலம் உண்டி முதலியவற்றைப் பெற்று மகிழ்வானு ? மாட்டானு ?

A. *121*. மகிழ்வானெனின் அத்தகைய பெரியார் உம் குழுவில் உளரா ?

122. ஆயின் சிலருடைய முழு விலாசங்களைத்தெரிவிப்பீரா?

B. *123*. மாட்டானெனின் ஏன் ?

XV. *124*. கணவனிடமிருந்து மனைவி விலக்குப் பெற்றுக் கொள்ளவும், வேறொருவனை மணந்துகொள்ளவுஞ் செய்யலாமென்பது உம் கொள்கை யன்று ?

125. அவள் அவ்விரண்டாங் கணவனைப்புணர்ந்து மகிழ்ந்து கொணடிருப்பதைக் கண்டால் அம் முதற் கணவன் லஜ்ஜைப்படுதல் கூடாதன்று ?

126. அப்படியிருக்க அத்தகைய உம்மவருக்குத் தலைவராயுள்ளவருள் ஒருவராய சி. என். ஏ. என்பவர் தாம் எழுதிய 'நல்ல தீர்ப்பு' என்னுஞ் சுவடியில் எவனோ வொருவனை நிந்திக்கு முகத்தால் "இது அன்னியனுடன் கொஞ்சிக் குலாவும் அழகிய அணங்கைக் கண்டு அருகில் இருப்பவரிடம் 'இவள் யாரோ என்று எண்ணுதேயும்; இவள் நம்முடைய மனைவியாக இருந்தவள் தான். இம்போது இவளை அவன் ஏமாற்றி அழைத்துச் சென்றுவிட்டான். ஆனாலும் என்ன ? எனனிடம் இருந்தவள் தானே ! இதனால் எனக்கு எவ்வளவு பெருமை ? என்று

கூறுவதற்குச் சமமாகும் என்பது திண்ணம்" என்று கூறிய தேன்?

127. ஒருவனுடைய மனைவியை ஏமாற்றி அவனிடமிருந்து சட்டமூலம் விலகும்படி செய்து அழைத்துப்போய் வேறொருவன் மணந்துகொள்வது கஷ்டமான காரியமா?

128. ஆகவே உம் கொள்கைப்படி தன் மனைவியை வேறொருவனுக்குக் கொடுத்தவனை மானங்கெட்டவனென அத்துரை அவ்வாக்கியங்களில் எடுத்துக் காட்டலாமா?

XVI. 129. உலகில் மக்களின் தொகை மட்டுப்பட வேண்டுமெனக் கருதிக் கர்ப்பத் தடையை விரும்புகிற நீர் விதவை மணத்தை யெப்படி ஆதரிக்கலாம்?

XVII. 130. கணவனையுடைய வொருத்தி இன்னொருவனைச் சோரத்தாற் கூடி ஒருபிள்ளையைப் பெற, அதனை அண்டையயலார் கண்டிருந்தும் அவளையும் அவள் கணவனையும் அவள் வயிற்றுப் பிள்ளையையும் தம் சமூகத்தில் வைத்து மகிப்புறுவது கண்கூடாயிருப்ப, மறுமணஞ் செய்துகொண்ட அறுதலியையும் அவள் கணவனையும் அவள் வயிற்றுப்பிள்ளையையு மட்டில் நிராகரிப்பானேன் என்பீராயின் அவர் அச் சோரத்தைத் தள்ளாமைக்குக் காரணம் அவர் அதனை அங்கீகரிக்கின்றார் என்பதா? அதனை நிராகரிக்கும் ஆற்றலை இழந்துநிற்கின்றார் என்பதா?

A. 131. முதலதெனின் அதனைக் கண்டிக்கவேண்டுவது உமக்குங் கடனன்று?

B. 132. அடுத்ததெனின் அவருக்கு அவ்வாற்றலை நீரும் உண்டாக்க வேண்டாமா?

133. அதனை மறந்து அச் சோரத்தைப் புகலாகக் காட்டி அறுதலி மணத்தையுந் தூய சமூகங்களிற் புகுத்த முனைப்பது அறிவுடைமையாமா?

134. அறுதலிமணத்தை யங்கீகரிக்கிற சமூகங்களிலாவது முதன்மணப் பெண்டிர் பெற்றுவருங் கௌரவத்தை நிகர்த்த

கௌரவத்தை மறுமணஞ் செய்துகொண்ட அறுதலிப் பெண்டிரும் பெற்றுவருகின்றனரென்று உம்மாற் சொல்ல முடியுமா?

XVIII. 135. இரண்டு பெண்டிர் தம்முட் கலாய்க்கின்றுழி ஒருத்தி மற்றவளைப் பார்த்து, 'ஏடீ, என் கணவனைக் கலந்தவளே' என்று ஏசி இறுமாப்பதையும், இரண்டாடவர் தம்முட் கலாய்க்கின்றுழி ஒருவன் மற்றவனைப் பார்த்து 'ஏட, என் மனைவியைக் கலந்தவனே' என்று ஏசாமலிருப்பதையுங் கண்டிலீரா?

136. அவ்விரண்டிலும் புதைந்து கிடக்கும் அவர் மனநிலையை யித்தகைத்தெனக் காண்கிறீரா?

ஆக அநுவாதம் 14-க்கு—ஆசங்கை 1101.

—(||||||)—

15. பல மணம்.

அநுவாதம்

ஆடவர்க்குப் பல பெண்டிரை மணந்துகொள்ளுஞ் சாமர்த்தியம் இருப்பதுபோன்று பெண்டிர்க்கும் பல ஆடவரை மணந்துகொள்ளுஞ் சாமர்த்தியம் உண்டு. ஆயினும் ஓராடவன் ஒருத்தியை மணந்துகொண்டால் அவளாயுளுள்ளவரை அல்லது அவள் அவனோ டிருக்கும் வரை வேறொருத்தியை மணந்துகோடல் கூடாது. ஓரரிவைக்கும் அதுவே விதியாதல் வேண்டும்.

ஆசங்கை

I. 1. ஆடவர் மாதத்தில் முப்பது நாளும் புணர யோக்கியரல்லரா?

2. பெண்டிர் மாதத்தில் ரஜஸ்வாலைக் காலமாகிய நாலைந்து நாள் புணர யோக்கியரா?

II. 3, ஓராடவன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருத்தியைப் புணர்ந்து அவள்பாற் கர்ப்பத்தை ஏற்ற யோக்கியனல்லனு?

4. ஓ ரரிவைக்கு நாள்தோறுங் கர்ப்பத்தை ஏற்க முடியுமா?

5. அவள் ஒருவனைப் புணர்ந்து ஒரு கர்ப்பத்தை யேற்றுக் கொண்டாற் பத்துமாசம்வரை மறு கர்ப்பத்தை யெப்படி யேற்பள்?

6. அவள் அக்காலத்திற் பிறரைப் புணர்ந்து என் பயன்?

III. 7. ஆடவர் தம் வயிற்றிற் கர்ப்ப மிருக்கும்போது புணர்ச்சியிற் சிறிதேனுந் துன்புறுவாரா?

8. பெண்டிர் தம் வயிற்றிற் கர்ப்ப மிருக்கும்போதுபுணர்ச்சியிற் பெரிதுந் துன்புறுரா?

9. ஆகலின் ஆடவர்க்கு ஒவ்வொருநாட் புணர்ச்சியும் இன்பத்தோடும் பேற்றோடுங் கூடியதன்று?

10. பெண்டிர்க்குப் பத்து மாதத்தில் கர்ப்பம் உண்டாய ஒரு நாட் புணர்ச்சி தவிர மற்றை எல்லா நாட் புணர்ச்சிகளும் இன்பத்தோடும் பேற்றோடுங் கூடியவாமா?

IV. 11. பெண்டிர்க்குச் சோணிதம் வெளிப்பட்ட பின்னரும் அவரிடம் ஆடவர் இன்பம் அனுபவிப்பா ரல்லரா?

12. ஆடவர்க்குச் சுக்கிலம் வெளிப்பட்ட பின்னர் அவரிடம் பெண்டிர் இன்பம் அனுபவிப்பாரா?

V. 13. ஆடவர்க்குப் புணருஞ் சத்தி எழுபது வயதுவரையிலாவது இராதா?

14. பெண்டிர்க்கு அநேகமாய் நாற்பத்தைந்து வயதிலேயே திண்டல் நின்று புணர்ச்சிப்பயன் கெடுவதில்லையா?

15. ஆடவரின் ஐம்பது வருடப் புணர்ச்சிப்பயனும் பெண்டிரின் முப்பது வருடப் புணர்ச்சிப்பயனும் சமமாதல் யாங்ஙனம்?

VI. 16. ஓ ராடவன் பல அரிவையரைத் தனக்கு மனைவியராகக் கோடல் (Polygamy) கூடாதென்பதற்குக் காரண மென்னை?

17. ஒருவனுக்கு இரண்டுமனைவிய ரிருந்தாராயின் அவர்க் குட் சக்களத்திப்போர் நிகழக்கூடுமெனின் பிள்ளைக்குத் தோற்று வாய் பெண்டி ரல்ல ரென்பது தெரிகிறதா?

18. அச் சக்களத்திகளுள் எவள் பெறும் பிள்ளையும் அவர்க் குக் கணவனு யுள்ளவன் பெற்ற பிள்ளையே யன்ரு?

19. அவர் கற்பரசிகளா யிருந்தாற் கணவனை வெறுப்பாரா?

20. அப்பிள்ளை அவனுடைய Spermatozoon ஆகலின் அதனைத் தன் வயிற்றில் வாங்கமாட்டாத வொருத்தி அதுவே காரணமாக மனம் வெந்து அப்பிள்ளையை வெறுப்பாளா?

21. அவளும் அக் கணவனுக்கே மனைவி யல்லளா?

22. அப்பிள்ளையைத் தன் வயிற்றில் வாங்கியவள் அதுவே காரணமாகப் பொங்கி வழிந்து அவ் வாங்காதவளை வெறுப்பாளா?

23. அப்பிள்ளையும் தன்னை வயிற்றில் வாங்கியவளைமட்டில் தாயென மதித்து வாங்காதவளை வெறுக்கலாமா?

24 அக்கணவனும் தன் Spermatozoon ஐ வயிற்றில் வாங்காதமனைவியைக் கண்டு அவ்வாங்காமைக்கு அவள் காரண மல்ல ளென்பதை உணரவல்ல யோக்கியனுயின் வாங்கிய மனைவி பக்கஞ் சார்ந்துகொண்டு வாங்காதவளை வெறுக்கலாமா?

25. ஆகவே தம் அன்புக்குக் கணவனையே லக்ஷியமாகக் கொண்ட கற்பரசிகள் சக்களத்திகளாய் வாழ நேர்ந்தால் அவனையே பொருளாகக்கொண்டு தம்முள் மனமொத்த நேசரா யிருக்கவேண்டுமென்பதும், அவருள் எவள் வயிற்றிலிருந்து பிள்ளை வெளிப்பட்டாலும் அது அக் கணவனுக்கே பிள்ளை யாக லின் தத்தம் வயிற்றுப் பிள்ளையேயென நிச்சயித்து அவ்விரு வருமே அதனைப் பரிபாலிக்க வேண்டுமென்பதும், அப்பிள்ளையுந் தன் அப்பனே தனக்குத் தோற்றுவாயெனக் கொண்டு தன்னைப் பெற்ற தாயோடு அவ்வப்பனுக்கு மனைவியராய் வாய்த்த பிறரை யுந் தன் தாயரே யென வந்தித் தொழுக வேண்டுமென்பதும், அக்

கணவனும் வந்தியாய்ப்போன தன் மனைவி அதிர்ஷ்ட மில்லாதவளாய் விட்டாளென அவள்பாற் பரிவும் அவளைக் கைவிட்டால் தன் மானங் கெட்டாலுங் கெடலாமென அச்சமுங்கொண்டு அவளையும் பிள்ளை பெற்ற மனைவியைப் போன்று ஆதரித்துவர வேண்டுமென்பதுமாகிய குடும்பக் கலைகள் சமூகத்துக்குச் செவ்வனே உணர்த்தப்பட்டுவந்தால் ஓ ராடவன் பல பெண்டிரை மணந்தாலும் அவன் குடும்பத்திற் சக்களத்திப்போர் முதலிய தொல்லைகள் உளவாமா?

26, தன் வயிற்றிற் பிள்ளை பிறவாமை கண்டு தன் கணவன் வமிசம் எங்கு முட்டிவிடுகிறதோவெனக் கவன்று இன்னொரு பெண்ணைத் தேடி அவனுக்கு மணமுடித்து வைத்து அவள் பிள்ளை பெற்றதைக் கண்டு தன் கணவனுக்கு ஆக்கம் வந்துவிட்டதென மகிழுங் கற்பரசிக் கூட்டம் மிகுந்துளது இந் நாடென்பதை யறிவீரா?

27. கலியாணத்துக்குப் புணர்ச்சி யின்பம் நோக்க மன்றென் பதை யுணரவல்ல ஆடவன் அவ்வின்பத்தின் பொருட்டு ஒருத்தியைத்தானும் மணந்து கொள்வானா?

28. சக்களத்திகள் தானும் அதனை விருப்பிச் சண்டையிட்டுக் கொள்வரா?

29. பிள்ளை வறியனாயின் இரண்டு மூன்று தாய்மாரை வைத்து ஆதரிப்பது அவனுக்குக் கஷ்டமாயிராதா வென்பீராயின் அவரை ஆதரிப்பது தள்ளப்படாமையால் நேர்ந்ததாகலின் அவன் தன் வறுமையைப் போக்கிக்கொள்ள வழி தேடவேண்டுமேயன்றிப் பெற்ற தாயை மாத்திரம் ஆதரித்துக்கொண்டு மற்றைத் தாயரை உதறித்தள்ளிவிட எண்ணினால் கன்னெஞ்சன் அவனன்றி வேறார்?

30. மேலும் அப் பலமணம் இந்நாட்டில் என்றுமே மிகவும் அருகி நிகழ்வ தில்லையா?

31. அதனைக் கண்டஞ்சி அதிகப்படுத்திப் பேசுவானேன்?

VII. 32. அவ்வப்போது பெரும்போர்கள் நிகழ்வதும், அவற்றால் பல மக்கள் மடிவதும், அவற்றின் முடிவில் பல நாடுகளில் மக்களின் தொகை குறைந்துவிடுவதும் உலகில் நடப்பன வல்லவா?

33. அந்நாடுகளில் மக்களின் தொகையை அதிகமாக்குவதன்பொருட்டு ஒவ்வோராடவனுக்கும் பல பெண்டிரை மணஞ்செய்து வைத்தல் அவசியமென்று கருதப்படுவதில்லையா?

34. ஒருத்தியைப் பல ஆடவருக்கு மணமுடித்துவைப்பதால் ஆங்கு மக்கட்டொகையின் குறைவை நிவர்த்திசெய்ய முடியுமா?

35. கன்றுகள் பல்கவேண்டுமாயின் ஒரு எருதுக்குப் பல பசுக்களை விடவேண்டுமா? ஒரு பசுவுக்குப் பல எருதுகளை விடவேண்டுமா?

36. மேலும் அப்போர்களில் ஆடவரே அதிகம் மடிவாராதலால் பெண்டிர் தொகை அதிகப்பட்டுக்கிடத்தல் கூடுமன்றோ?

37. அதனாலும் ஆடவர்க்கே பலமணம் வேண்டப்படுமென்பது விளங்கவில்லையா?

38. சில நாடுகளிற் பெண்டிர்க்கும் பலமணம் (Polyandry) வேண்டப்படும் சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டால் என் செய்வதென்பீராயின் இரண்டு மூன்று ஆடவரை மணந்துகொள்ள வேண்டுமென்ற அவசியம் ஓரரிவைக்கு எப்படி நேரும்?

39. அவள் ஒரு கணவனிடமிருந்தே புணர்ச்சியின்பத்தை நுகர முடியாதா?

40. பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதா?

41. பல ஆடவர் மனைவியரில்லாமல் தவிக்கின்றனரே யென்ற இரக்கவுள்ளம் பெண்டிர்க்கு வேண்டாமாவென்பீராயின் அவ்வாடவர் தவிப்பது புணர்ச்சியின்பத்துக்கு வழி கிடையாமையாலா? பிள்ளை பெற்றுக்கொள்ள வழி கிடையாமையாலா?

A. 42. முன்னையதற்கெனின் அவர் தம் சிந்தையைச் சன்மார்க்கத்திற் பயிற்றிக் காமவெறியை யடக்கிக் கொள்வதையே தமக்கு யோக்கியமெனக் கொண்டாலென்னை?

43. அதனை விடுத்து ஐந்தாறு ஆடவர் ஒருத்தியையே மண மென்னும் வியாஜத்தால் அகப்படுத்திப் புணர்ந்து வருவாராயின் அதனை அவளால் சகிக்க முடியுமா?

44. புணர்ச்சிக்கலையைக் கற்று அம்முறையில் ஒருவன் தன் மனைவியைப் புணர்ந்து சுகிப்பானாயின் அவனுடம்பிலுள்ள பல வகை அசுத்தப் பொருள்கள் அவளுடம்பிற் புகுத்தப்படுவ தில்லையா?

45 அங்ஙனமாயின் அவ் வைந்தாறு ஆடவரின் சரீரங்களி லுள்ள அசுத்தங்களும் புணர்ச்சிக் காலத்தில் அவளுடலிற் புகு மாயின் அவள் பல நோய்களின் கொள்கல மாகாளா?

46. அந் நோய்கள் அவ்வாடவ ரனைவருக்கும் பரவாவா?

B. 47. பின்னையதற்கெனின் ஐந்தாறு ஆடவர் புணர்ந்துவரும் ஓரரிவை பிள்ளையைப் பெற்றால் அப்பிள்ளைக்கு அப்பனுவான் யாவன்?

48. அதுபற்றி அவர்க்குட் சண்டை நேராதா?

49. ஒவ்வொரு கணவனும் ஓராண்டோ ஈராண்டோ அவ ளோடிருந்து வாழவேண்டுமென அவர் தமக்குள் ஒழுங்குமுறை வைத்துக்கொண்டாலும் முதற்கணவன் தனக்குரிய இரண்டா மாண்டுக் கடைசி மாதத்தில் அவளிடங் கருப்பத்தை யுண்டாக்கி விட்டானுயின் மேலும் பத்து மாதங்கள் அவள் அவனோடிருந்து தொலைக்க வேண்டாமா?

50. அன்றியும் ஒரு கணவன் தன் முறை ஒன்று கழிந்து அடுத்தமுறை வரும் வரை ஐந்தாறு ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டாமா?

51. பெண்டிர்க்கு இரக்க வுள்ளம் வேண்டாமாவெனக் கவல்கிற நீர் ஒரு கணவனையே புணர்ந்துவருகிற கற்புநெறிப் பெண்டிரனைவரையும் இரக்க வுள்ளத்தின ரல்லாதவ ரென்கி றீரா?

IX. 52. ஒருவன் இரண்டு பெண்டிரை மணந்து அவ்விருவர் வயிற்றிலும் மூன்று பிள்ளைகளைப் பெற்றால் அப் பிள்ளைகளுக்கு அப்பனுவானிவனென்பதிற் சந்தேகம் உளதாமா?

53. அவன் சொத்தில் அம் மூவருமே சமபங்கு அடையாரா?

54. ஒருத்தி இரண்டாடவரை மணந்து அவ் விருவராலும் மூன்று பிள்ளைகளைப் பெற்றால் அப் பிள்ளைகளுக்கு அப்பனுவானிவனென்பதிற் சந்தேகம் உதியாதா?

55. அவ்விருவர் சொத்திலும் அம் மூவருமே சமபங்கு அடைவாரா ?

X. 56. ஓரரிவை பல ஆடவரை மணந்துகொள்ள வேண்டுமெனின் அவ்வாசை அவ்வரிவைக் கிருக்குமா? அவ்வாடவர்க் கிருக்குமா?

57. ஏககாலத்தில் ஓரரிவையும் இரண்டாடவரும் பலரறிய வாழ்க்கை யொப்பந்தஞ்செய்து சில நாட்களுக்குள் அவளும் அவ்வாடவரி லொருவனுஞ் சேர்ந்துகொண்டு மற்றவனை ஹிம்சித்து இல்லையாகச்செய்த உண்மைச் சம்பவமொன்று சென்னையிலேயே சமீபத்தில் நடந்ததைக் கேட்டாவதிலீரா?

58. ஓராடவன் பல பெண்டிரை மணந்துகொள்ள வேண்டுமெனின் அவ்வாசை அவ் வாடவனுக கிருக்குமா? அப் பெண்டிர்க் கிருக்குமா?

59. பல ஆடவரோடு வாழ்க்கை யொப்பந்தஞ் செய்துகொண்டு புணரும் ஓரரிவை நோய்களின் கொள்கல மாவாளா? பலபெண்டிரை மணந்துகொண்டு புணரும் ஓராடவன் நோய்களின் கொள்கல மாவானு?

XI. 60. ஒருத்தி தனக்குக் கணவனுக ஒருவனையே தேடிக்கொள்வதே சுயம்வர மன்று?

61. பெண்டிர் பொருட்டு உளதாகிய அதுபோல் ஒருவன் தனக்கு மனைவியாக ஒருத்தியையே தேடிக்கொள்வதாகிய சுயம்வரமும் ஆடவர்பொருட்டு ஏன் உளதாயிற்றில்லை?

ஆக அநுவாதம் 15க்கு ஆசங்கை 1162.

16. கலப்பு மணம்

அநுவாதம்.

கலப்பு மணம் சாதிபேதங்களை யொழிக்கும்; மக்களை ஒற்றுமைப் படுத்தும்; வளமான சந்ததிகளைப் பெறுவிக்கும். ஆகவின் எல்லாச் சாதிகளிலுமுள்ள மக்கள் தம்முட் கலப்பு மணம் செய்துகோடல் ஆவசியகமாம்.

ஆசங்கை

I. 1. கலப்பு மணத்தால் முடிவிற் சாதிகளெல்லாம் அழியுமா? அழியாவா?

A. 2. அழியுமெனின் அப்புறம் கலப்பு மணத்துக்கு இடமிருக்குமா?

3. இராதாகலின் வளமான சந்ததி யெப்படிப் பிறக்கும்?

4. பிறவாதாகலின் மக்களினமே நாசமாய் விடாதா?

B. 5. அழியாவெனின் கலப்பு மணத்ாற் சாதிபேதங்கள் அழிந்துவிடுமென்பது வெறும்பேச் சன்று?

II. 6. வளமான சந்ததி விருத்திக்குக் கலப்பு மணம் அவசியமென்பீ,ராயின் கலப்பு மணம் நிகழ்வதற்குச் சாதிபேதங்கள் என்றுமே உளவாதல் வேண்டாமா?

7. வேண்டுமெனின் மக்கள் ஒற்றுமை'ப்படுதல் கூடுமா?

8. மக்க ளொன்றுபாட்டிற்குங் கலப்பு மணமே வேண்டுமன்று?

9. அவர் ஒன்றுபட்டபின் அம் மணத்துக்கு வழி யேது?

10. அஃதில்லாமையால் வளமான சந்ததி விருத்தியுந்தானேது?

11. ஆகவே வளமான சந்ததிவிருத்தியும் மக்களி னென்று பாடும் கலப்புமணத்தின் சுந்தோபசுந்த நியாய விளைவுக ளல்லவா?

12. அவை உளவாமா?

III. 13. கறுப்பனுக்குச் சிவப்பியையும், சிவப்பனுக்குக் கறுப்பி யையும், அழகனுக்கு அழகிலாளையும் அழகிலானுக்கு அழகியை யும், மடவோனுக்கு அறிவுடையாளையும், அறிஞனுக்கு மடத்தி யையும், மகனுக்குத் தாயையும், தந்தைக்கு மகளையும், தெலுங்க னுக்குத் தமிழச்சியையும், தமிழனுக்குத் தெலுங்கச்சியையும், இந்தியனுக்கு அங்கிலேயச்சியையும், அங்கிலேயனுக்கு இந்தியளை யும், கிறிஸ்தவனுக்கு இசுலாமியளையும், இசுலாமியனுக்குக் கிறிஸ்தவச்சியையும், குட்டநோயனுக்குக் குன்மநோயளையும், குன்மநோயனுக்குக் குட்டநோயளையும், கிழவனுக்குக் குமரியை யும், குமரனுக்குக் கிழவியையும். எஜமானனுக்கு வேலைக்காரியை யும், வேலைக்காரனுக்கு எஜமானியையும், ஹிந்துஸ்தான்கார னுக்குத் திராவிடஸ்தான்காரியையும், திராவிடஸ்தான்கார னுக்கு ஹிந்துஸ்தான்காரியையுங் கலப்பு மணஞ் செய்து வைப் பீரா? மாட்டீரா?

A. 14. வைப்பே மென்பீராயின் உம் காதல் மணம் காலைவா ரிக் கொள்ளாதா?

B. 15. மாட்டே மென்பீராயின் அதுவும் ஏன் கலப்பு மண மெனப்படாது?

16. அவ் விரட்டையர் தம்முள் தம்பதிக ளாகாராயின் உயர்வு தாழ்வு கொண்டு சண்டை யிடாரா?

17. அவ்வேறுபாடு மக்களின் ஒற்றுமைப் பாட்டிற்கு ஊறு செய்யாதா?

18. அக்கலப்பு மணத்தால் அவர்களுக்குள்ள உயர்வுதாழ்வு நீங்குவதோடு வளமான சந்ததி உண்டாதலும் கூடாதா?

IV. 19. கணவன் மனைவிகளைத்தானும் ஒற்றுமைப் படுத்தும் வன்மை கலப்பு மணத்துக்கென விசேடமா யுண்டா?

20. இல்லையென்பதற்கு உம் விலக்கமே (Divorce) சான்காதா?

V. 21. தமையன் தங்கைமார் ஒற்றுமைப்பட்டிருப்பது கலப்பு மணத்தாலா?

22. மக்களின் ஒன்றுபாட்டிற்குச் சகோதரபாவமே வேண்டுமென்கிற நீவிர் அப்பொருட்டு இப்போது ஏன் கலப்பு மணம் வேண்டுமென்கிறீர்?

23. மணத்தால் நேர்வது சகோதரத்துவமா?

VI. 24. பிறப்பிலேயே பல வேறு சாதிகளாகிய மாமரங்கள் ஒட்டினுற்றான் ஒட்டுமாவென்னும் வளமானமரம் உண்டாகுமென்பதில்லையா?

25. அப்படியே கலப்பு மணத்தால் வளமான சந்ததியுண்டாதற்குப் பிறப்பிலேயே மக்கள் பல சாதியினரா யிருத்தல் வேண்டுமென்பது பெறப்படாதா?

26. ஆனால் மக்களுக்குட் பிறப்பாற் சாதி வித்தியாசங்களில்லையென ஏன் சொல்கிறீர்?

VII.27. கலப்புச் சந்ததிகளாகிய ஆங்கிலோ இந்தியர் கலப்பற்ற அங்கிலேயரினும் இந்தியரினும் பார்க்க எப்படி வளமானவராவர்?

28. ஆங்கிலேயர் இந்தியர் என்ற வேறுபாடாவது அச் சந்ததிகளால் ஒழிதலுண்டா?

VIII.29. மக்களிற் சில ஆண்கள் விலங்குகளிற் சில பெண்களையும் நிரந்தரமாகப் புணர்ந்து வருவதில்லையா?

30. அப்படியே மக்களிற் சில பெண்கள் விலங்குகளிற் சில ஆண்களையும் புணர்ந்து வருவதில்லையா?

31. பொம்மைகளைப் புணரும் மக்களும் இலரா?

32. மக்களிற் சிலபெண்களைக் கண்டால் ஒருவகைக் குரங்குகள் ஓடிப்பிடித்துப் பலவந்தப் புணர்ச்சி செய்துவிடுவதைக் கண்டிலீரா?

33. கேட்டாவ தில்லீரா?

34. அம் மக்களனைவரும் உம் பார்வையில் யோக்கியரா? அல்லரா?

35. யோக்கியரெனின் உம் கூட்டத்தில் அத்தகையா ரிருந் தாராயிற் சிலரைத் தெரிவிப்பீரா?

36 அல்லரெனின் இன்பத்தின் பொருட்டு அவர் அவ்வாறு செய்வது பிறருக்கு நஷ்டமில்லை யாகலின் ஏன் அல்லர்?

37. ஆறறிவுள்ள வுயிர், மற்றைக் குறைந்த அறிவுள்ள வுயிர், அறிவே யில்லாத சடம் ஆகிய இவையெல்லாங் கலந்து ஒற் றுமைப்பட அவர்கள் புணர்ச்சி ஏதுவாகாதா?

38. அவர்கள் நிகழ்த்துவதும் ஏன் கலப்புமண மாகாது?

IX. 39. மக்களையும் அவர்போன்ற தொருவகைக் குரங்குகளையு மாவது விஞ்ஞான முறையிற் புணரச் செய்தோ அல்லது உம் ஈ. வே. ராச் சொல்வதுபோற் கொழுத்த பொலிகுரங்கின் வீரி யத்தை யெடுத்து மக்களுட் பெண்டிரின் கருப்பையிலும், கொழு த்த பொலிமக்களின் வீரியத்தை யெடுத்து அக் குரங்குகளுட் பெட்டைகளின் கருப்பையிலும் ஊசி (Injection) மூலம் ஏற் றியோ கலப்புராசியை உண்டாக்கிக் கொள்ளுமுறை உம் விஞ் ஞானத்தி லிருக்கிறதா?

40. அவ்விராசி தோன்றுமாயின் அதனைக் குரங்குகளென ஒதுக்கிவிடுவீரா? மக்களென அணைத்துக் கொள்வீரா?

ஆக அநுவாதம் 16-க்கு—ஆசங்கை 1202.

—(||||||)—

17. ஒரு குலமணம்

அநுவாதம்

தாய் மகன், தங்கைதமையன். மகள் தந்தை முதலிய முறை யார் ஒரே யிரத்தமாகலின் தாயை மகனும், தங்கையைத் தமைய

ம்னுமகளைத் தந்தையும் மணந்துகோடல் போன்ற முறைகெட்ட மணங்கள் புணர்ச்சியின்ப நுகர்ச்சிக்குத் தடையாகாவாயினும் வளமான சந்ததி விருத்திக்குத் தடையாகும். ஆகலின் அம் மணங்கள் கூடா.

ஆசங்கை

I. 1. இவ்வநுவாதம் பின்வரும் 'மணமுறை' யென்னும் அநுவாதத்தோடு முரணாதா?

II. 2. விலங்கு பறவை முதலியன தம்மைப் பெற்றவைகளையும் தம் வயிற்றிற் பிறந்தவைகளையும் புணர்வதில்லையா?

3. அவை குட்டி குஞ்சுகளை மிகுதியாக ஈனுவதில்லையா?

4 பல்லாயிர மாண்டுகட்கு முன்னருள்ள உம் பூர்வீகரனைவருங் குரங்குகளா யிருந்தவரலரா?

5. அவையும் அப்போது அப்படியே புணர்ந்துவந்திருக்குமல்லவா?

6. அப்படியிருந்தும் அவை நாளுக்குநாள் விருத்தியாகி இப்போது உம்மவராகப் பரிணமித்து நிலைக்கவில்லையா?

7. முறையின்றி மணந்து புணர்வதற்குச் சட்ட நிபுணர்களும் விஞ்ஞானிகளுங் கூட அங்கிகாரங் கொடுத்திருப்பதை யறிவீரா?

8. 'வம்சோற்பத்தி ரீதியில் பார்த்தாலும் ரத்த சம்பந்தமுள்ளவர்களுக்குள் விவாக சம்பந்தம் கெடுதல் என்று ருஜுவாகவில்லை. ரத்த சம்பந்தமுள்ள தாய்—தந்தைக்குப் பிறந்தவர் டார்வின், இந்தக் காலத்தில் பிடோயின் அராபியர்களும் சரி, ஆதிகாலத்தில் எகிப்திய ராஜ வம்சத்தினரும் சரி நெருங்கின உறவுக்குள்ளேயே விவாஹ சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார்கள். இதனால் அவர்கள் வமிசம் க்ஷீணித்துப்போகவில்லை. ஆயினும் அந்த அளவுக்கு இந்த மசோதா போகவில்லை' யென்று டாக்டர் ஜி. வி. தேஷ்முக் டில்லிச் சட்டசபையிற் சொல்லியுள்ளதை 11—11—1944 'தினமணி'யிற் படித்திருக்கிறீரா?

9. 'The five hundred scientists attending the Indian Science Congress at Nagpur have arrived at the decision

that Sogotra marriages among Hindus are not harmful biologically' "A discussion arose on a paper read by Mr. K. C. Mukerji of Dacca on the subject 'Is Sagotra marriage biologically harmful ?' in the Section on Anthropology. The scientists were unanimously in fovour of Sagotra marriage" என்ற செய்தியை 5—1—1945 'ஹிந்'துவிற் படித்திருக்கிறீரா?

10. அங்ஙனமாக முறைகெட்ட வகையில் தன் குடும்பத்திலேயே மணஞ்செய்துகொள்பவன் வளமான சந்ததியைப் பெருனென்று எப்படிச் சொன்னீர்?

11. இன்னும் 'அந்த அளவுக்கு இந்த (சகோத்ர மண) மசோதா போகவில்லை' என்று அந்த தேஷ்முக் சொன்னதில் 'அந்த அளவுக்கு' என்பதாற் பெறப்படும் 'அளவு' மகன் தாயையும், தந்தை மகளையும், தமையன் தங்கையையும் மணந்துகோடல் முதலிய மிக நெருங்கிய மணங்களைத்தான் குறிக்கின்றதென்பதை உம்மால் அறிய முடிகிறதா?

12. அந்த மசோதாவில் அந்த மணங்களையும் ஏன் அகப்படுத்தலாகாதென யாரேனும் வாதிப்பாராயின் அவ்வாதத்தை அந்த தேஷ்முக்காலாவது மற்றை விஞ்ஞானியராலாவது மறுத்துரைக்க முடியுமென நினைக்கிறீரா?

13. மகளைத் தந்தை மணந்துகோடல் தவறென்பதற்கு விஞ்ஞானமுறையிற் காரணமென்னை?

14. கணவனும் மனைவியும் அவர் வயிற்றுப் பிள்ளைகளுமே ஒரு குடும்பத்துக்கு உறுப்புக்களாகற் பாலார், வேண்டுமாயின் அக்கணவனின் கிழப் பெற்றோர்களுஞ் சேர்த்துக்கொள்ளப்படலாம் என்னுங் கருத்துப்பட 'Family as a biological unit, should be stristly limited to the couple and their children, aged parents might be included' என்று உம் எஸ். ராமநாதன், எம்.ஏ., பி. எல். கூறியுள்ளதை 9—3—1945 'ஹிந்து'விற் கண்டீரா?

15. அப்படியானல் ஒரு குடும்பத் தலைவனாகிய சாத்தன் தன் சிற்றப்பன் பெரியப்பன்மார், தமையன் தம்பிமார் முதலியோரனைவரையுந் தன் குடும்பத்துக்குப் புறத்தாராகவே கோடல் வேண்டுமன்ரு?

16. அதனல் அவன் தன் சிற்றப்பன் பெரியப்பன்மாரின் புதல்வியரையோ, தமையன் தம்பியரின் புதல்வியரையோ மணந்து கொள்ளலாமென்பது பெறப்படாதா?

17. அவன் தன் சிற்றப்பன் பெரியப்பன்மாரின் புதல்வியரை மணந்துவரும்போது தன் உடன்பிறந்தாளையே மணந்துகொண்டாலென்னே? தன் தமையன் தம்பியரின் புதல்வியரை மணந்து வரும்போது தன் வயிற்றிற் பிறந்தாளையே மணந்துகொண்டாலென்னே? என்று இன்னஞ் சிலகாலஞ் சென்றபிறகு மற்றொரு தேஷ்முக் முளைத்தெழுந்து விவகரிக்கலா மன்ரு?

18. அப்போது வரும் விஞ்ஞானியரும் அம்மணத்தை யநுமதித்து அவருக்குத் துணைபோகலா மன்ரு?

19. அவர்களைத் துணைசேர்த்துக் கொண்டு அப்போது வரும் உம் கால்வழிகளும் சாமானிய மக்களைத் தம் பிரசாரங்களால் ஆடுமாடுக ளாக்கிவைத்து மகிழலாமன்ரு?

20. உம் உள்ளத்தி னடியிற் கிடக்கின்ற அக்கொள்கையை இப்போது நீர் மறைத்துவைத்துளீ ரல்லீரா?

III. 21. பல நாடுகளிற் பல சமூகங்களில் முறைகெட்ட மணங்கள் உள வென்கிலீரா?

22. அம்மக்கள் சந்ததி விருத்தியின்றி யழிந்தனரா?

23. அம்மணங்கள் தவருனவையென்று உமக்கு உண்மையிற்பட்டிருக்குமாளுல் அந்நாட்டினரையும், சமூகத்தினரையும் திருத்த நீர் முற்படவேண்டாமா?

24. அக்கடனை இன்றுவரை ஓரளவிலாவது ஆற்றினீரா?

IV. 25. ஒருகுல மணத்தால் வளமான சந்ததி யிராதென்பதை உண்மையெனக் கொண்டாலும்சந்ததி வேண்டாமையை நீர் விரும்பவில்லையா?

26. பெண்டிர் பிள்ளை பெறுவதைத் தொலைத்து விடவேண்டுமென்று உம் ஈ. வே. ரா. பிரசாரஞ் செய்து வருகிலரா?

27. பேற்றுத்தடை உமக்கு உடன்பாடன்ரு?

28. ஒருகுல மணஞ் செய்துகொண்டால் காலஞ் செல்லச் செல்ல மருந்தின்றியே பேற்றுத்தடை சம்பவித்து விடாதா?

ஆக அநுவாதம் 17-க்கு—ஆசங்கை 1230.

18. முது மணம்

அநுவாதம்

பெற்ருேர் தம் புத்திரிக்கு அவள் பூப்படைந்த பின்னரே மணஞ் செய்துவைக்க வேண்டும். மனைவியா யிருந்து வாழு முறையை யறியவல்ல அறிவு அவளுக்கு அப்போது தான் உண் டாகின்றது.

ஆசங்கை

I. 1. பூப்படைதலாவது புத்தியறித லன்ருே?

2 ஒருத்தி பெரியவள் (Major)ஆதல் அது முதற்ருே னென் பது உண்மையா?

3, அதுவரை அவள் சிறியவள் (Minor) அல்லளா?

4. அவ்விரண்டும் அரசாலும் அங்கீகரிக்கப்பட்டன வல் லவா?

5. தன்னிஷ்டப்படி நடக்கும் உரிமை பெரியளாய் விட்டா ளுக்குத்தான் உண்டென்பது மெய்தானு?

6. சிறியளா யிருப்பாளுக்கும் அஃதுளதா?

7. பெரியளாயினுள் தன் பெற்ருே ரதிகாரத்தி லிருந்தா லும் தன் சம்மதத்தோ டிருந்து வருகிருளென்பதே தாற்பரிய மன்ருே?

8. சிறியளா யிருப்பவள் அப்படியா?

9. பெரியளாயினுளுக்குச் சம்மதமில்லையாயின் அவளைத் தம் மதிகாரத்தில் வைத்துக்கொள்ள அவள் பெற்ருேர்க்கு உரிமை உண்டா?

10. சிறியளா யிருப்பவளுக்குச் சம்மத மில்லையானுலும் அவளைத் தம் மதிகாரத்தில் வைத்துக்கொள்ள அவள் பெற் ருேர்க்கு உரிமை யில்லையா?

11. வழக்கு வந்தால் அரசும் பெரியளானவள் பக்கத்திலும் சிறியளா யிருப்பவளின் பெற்ருேர் பக்கத்திலுமே சாராதா?

12. ஆகவே பெற்ருே ரதிகாரம் பெரியளாயினுள் விஷயத்தில் அவள் சம்மதத்துக் குட்பட்டதென்பது தெரிகிறதா?

13. சிறியளா யிருப்பவள் விஷயத்தில் அவ்வதிகாரத்துக்கு அத்தகைய கட்டில்லை யென்பதை யறிகிறீரா?

14. அங்ஙனமாகப் பெரியளாயினுளை (Post-puberty) மணஞ் செய்து கொடுக்கும் அதிகாரம் பெற்ருேர்க்கு இருக்க முடியுமா?

15. சிறியளா யிருப்பவளை (Pre-puberty) மணஞ் செய்து கொடுக்கும் அதிகாரந்தான் அவர்க்கிருக்க முடியுமென்பது விளங்குகிறதா?

II. 16. தமையன் ஒன்றிரண்டு வயசி லிருக்கும்போதே தம்பி பிறப்ப தில்லையா?

17. அப்போது அவ்விருவருமே சிறியவர் (Minors)அல்லரா?

18 அவ்விருவருக்குமே சகோதர சம்பந்தமும் வாத்ஸல்யமுந் தெரியவருமா?

19. தாய் பெரியவள் (Major) ஆன பின்னர்த்தான் அவளுக்குப் பிள்ளை பிறக்கின்றதென்பது தெரியுமா?

20. அவளொருத்திக்குத்தான் அம்மைமகனுறவும் புத்ர வாத்ஸல்யமுந் தெரியவருமென்பது பொய்யா?

21. அப்பிள்ளைக்கும் அக்குழவிப் பருவத்தில் அவ்வுறவும் மாத்ருபக்தியுந் தெரியவருமா?

22. அச் சகோதரரும் அப்பிள்ளையும் பெரியவர் (Majors) ஆனபின்னர் தத்தம் உறவுகளையும் வாத்ஸல்யங்களையும் அறிந்து நுகர்ந்து மகிழ்வதில்லையா?

23. ஆகவே உறவு, அதன் வழித்தாகிய அன்பு என்னும் இரண்டுக்கு முரியா ரிருவருள் அவ்விருவருமே அல்லது ஒருவரா யினும் சிறியவரா (Minor) யிருக்குஞ் சமயந்தான் அவை தொடங்குதற் கேற்ற சமயமென்பதை இயற்கையே விளக்கி வைக்கவில்லையா?

24. கலியாண வுறவு தொடங்குவதற்கு வயசில் ஆடவன் சிறியவனும் அரிவை மூத்தவளுமா யிருந்தாலென்னை யென்பீரா யின் அரிவை அநேகமாய் நாற்பத்தைந்து வயசிற்குமேற் பிள்ளை பெறமாட்டா ளென்பதை யறிவீரா?

25. அவள் நாற்பத்தைந்து வயதினளா யிருக்கும்போது அவள் கணவன் நாற்பது வயதினனென வைத்துக்கொண்டால் அவன் தன் எஞ்சிய காலங்களில் எப்படிப் பிள்ளைகளைப் பெறக் கூடும்?

26. மூத்தவளை இளையவன் மணந்து கொள்வதை 'நன்னெறிக் கடங்காக் கயவர்கள்... .... தம்மைவிட மூத்த பெண்களையும் பெண்டாளவுங் கூடும்' என்று 11—7—1930 'திராவிட'னில் எழுதிக் கண்டித்த ஜே. எஸ். கண்ணப்பர் உம்மவருள் ஒரு சிரேட்ட ரல்லரா?

27. மேலும் மூத்தவளை யிளையவன் மணந்துகொள்வதாற் கிடைக்கும் விசேட நலம் என்னை?

28. நாற்பத்தைந்து வயதினளுக்கு முப்பது வயதுப்பிள்ளை யிருத்தல் கூடுமன்றோ?

29. அவள் விதவையாகியோ விலக்குப் பெற்றோ வேறோ ரிருபத்தைந்து வயதினனை மணக்கலா மன்றோ?

30. ஆமெனின் அவனுக்கு அம்முப்பது வயதினன் என்ன முறையாவான்?

31. மகன்முறை யாவனெனின் வயதில் அப்பனுக்கு மூத்தவனாக மகன் இருக்க முடியுமா?

32. அம்மைக்கு மூத்தவனாக மகனிருப்ப தில்லையா வென்பீராயின் அவனைப் பெற்றவன் அப்பனே யென்பதை யறிவீரா?

ஆக அநுவாதம் 18க்கு ஆசங்கை 1262.

—(||||||)—

19. இள மணம்

அநுவாதம்.

இடைக்காலத்தில் இந்நாட்டிற் சில இசுலாமிய மன்னர் மணமாகாப் பக்குவ குமரிகளைச் சிறையெடுக்கத் தலைப்பட்டன

ராகலின் அரசற்கஞ்சிச் சில சமூகங்கள் தம் குமரிகளுக்குச் சபையு முன்னரே மணம் முடித்து வைத்தன. பிற் காலத்தில் அஃதோ ராசாரமாகிப் பெண்டிரின் உடல் நலத்துக்கும் சந்ததி விருத்திக் குங் கேடு பயந்து சிற்றறுதலிகள் (Minor widows) பலர் தோன் றக் காரணமு மாயிற்று. இனி அக் கொடுங்கோன்மை யில்லை. ஆகலின் அவ்விளமணம் ஒழியவேண்டும்.

ஆசங்கை.

I. 1. ஆயின் இக்காலைக் காணப்படும் இளமணைச் (Pre-puberty marriage) சமூகங்களும் அம்மன்னர் காலத்துக்கு முன்னர் முது மணமே (Post-puberty marriage) செய்திருந்தன வென்பதே உம் கருத்தாதல் வேண்டாமா?

2. அவைமட்டில் அச்சிறையெடுப்பி லிருந்து தப்ப வழி தேடிக் கொண்டனவா?

3. ஆயின் மற்றைப் பெரும் பகுதிச் சமூகங்கள் அவ்விள மணத்தை அவ்வரசர் காலத்திலும் அங்கீகரியா திருந்ததைக் கொண்டு அவையனைத்தும் அச்சிறையெடுப்புக் கிணங்கித் தம் குமரிகளைப் பறி கொடுத்து வந்தனவென்பது போதர வில்லையா?

4. அவ்விளமணச் சமூகங்கள் மற்றைச் சமூகங்களை வேசிக்கூட்டமென் றுரைப்பதில் உமக்கு வெட்க மேன்?

5. சில சமூகங்கள் முக்காட்டு (பர்தா) முறையாலும், இன்னுஞ் சில சமூகங்கள் காதைத் துளைத்து வளர்த்து, முகத்திற் பச்சைகுத்தி உடலழகைக் கெடுத்து வைத்தலாலும் தம் பெண் டிரை அச் சிறையெடுப்பிலிருந்து காத்துவர வில்லையா?

6. இளமணம் பெண்டிர்க்கு உடலைத்தான் மறைக்குமா? அழகைத்தான் குறைக்குமா?

7. அது சிறையெடுப்பைத் தடுப்ப தெப்படி?

8. ஒருக்கால் இளமணப்பிள்ளை சூரனு யிருப்பானு?

9. இளமணமான பெண்டிர் புணர்ச்சியிற் கசந்து விடு வரா?

II. 10. இளமணச் சமூகப் பெண்டிர்க்கு உடலுரம் கட்டழகு நோயின்மை அறிவுத்திறன் முதலிய நலன்கள் அறிஞர் வியக்கும் விதத்தில் இலவா?

11. அவற்றைப் பொய் யென்பீராயின் ஜஸ்டிஸ், சுயமரி யாதை முதலிய வியக்கங்களுக்கு அவசியம் என்னை?

12. மொத்தத்தில் இளமணச் சமூகங்கள்பா லுள்ள செழி ப்பு மற்றைச் சமூகங்கள்பா லுள்ள செழிப்பினுங் குறையாம லிருப்பது கண்கூடாயிருப்ப அப் பெண்டிருள்ளும் அச் சந்ததி களுள்ளும் காணப்படுஞ் சில நோய்களுக்கு இளமணமே காரண மெனக் காரண காரிய சம்பந்தம் அறியவல்ல மருத்துவர் கூறு வரா?

13, மொத்தத்திற் சுகத்தைச் செய்யும் இளமணம் அச்சில ரிட மட்டில் துக்கத்தைச் செய்யுமாவென அவர் ஆராயாரா?

14. எல்லார் கண்ணிலும் படுஞ் சூரியனொளி குருடன் கண் ணிற் படாமைக்கு அவன் கண்ணிலுள்ள குருடே காரணமாதல் போல மொத்தத்தின்சுகம் அச்சிலரின் அநுபவத்தில் வாராமைக்கு அச்சிலர் பாலுள்ள ஏதேனுமொரு தடைதான் காரணமாகுமென அவர் யூகியாரா?

15. அத்தடையை நீக்கிவிட்டால் அவ் விளமண நலனை அவ ரும் நுகராரா?

16. அதனை விடுத்து இளமணத்தைப் பழிப்பது சூரியனொளி யைப் பழிப்பது போலு மன்று?

III. 17. எத்தனையோ புதல்வர்கள் அறியாப் பருவத்திற் பெற் றோரை யிழந்து அவரை யறியவும் அவரன்பை நுகரவும் வழியின் றிச் சாகும்வரை காலந் தள்ளவில்லையா?

18, அப்படியே இளமணமான மனைவியருட் கணவனை யிழந்து அவனை யறியவும் அவனன்பை நுகரவும் வழியின்றிச் சிற் றறுதலிகளான சில்லோர் தாமுஞ் சாகும்வரை காலந் தள்ளினு லென்னை?

19. பதிபக்தியிலும் பித்ரு மாத்ரு பக்திகள் தாழ்வுடைய னவா?

20. அவ்விரு சிறத்தினரின் கவலைகளுக்குர் ஐயோவென இரங்கி யமைவதைத் தவிர்த்து யாவர்தான் என்செய மாட்டுவார்?

21. சிற்றறுதலிகளுக்கு மறு கணவரைக் கூட்டி வைக்க வேண்டுமென்பீராயின் அப்புதல்வர்களுக்கும் மறுபெற்றோரைக் கூட்டி வைப்பீரா?

22. மறு பெற்றோர் பெற்றோராகமாட்டா ரென்பீராயின் மறு கணவர் கணவராய் விடுவரா?

23. ஆனால் மறுபிள்ளைகளைப் பெற்று அவரை யறியவும் அவரன்பை நுகரவும் பெற்றோர்க்கு முடியாதா?

24. அப்படியே மறு மனைவியரை மணந்து அவரை யறியவும் அவரன்பை நுகரவுங் கணவர்க்கு முடியுமென்பதிற் சந்தேகமென்னை?

25. ஆகவே மூத்த முறையார் செத்தால் அவரை மீளவும் பெறவே முடியாது. இளைய முறையார் செத்தால் அவரை மீளவும் பெற்றுக்கொள்ளலா மென்னும் இயற்கை யுண்மையைக் குடும்ப கௌரவத்தினர் தெரியாமற் போவரா?

26. உலகிற் பெற்றோரை யிழந்த சிறியர் (Minor orphans) இருத்தல் கூடாதென்பதற்குப் பெற்றோர் சிறியரை (Minorsஐ)ப் பெற்றுக்கோடல் கூடாதென விதிக்க முடியுமா?

27. சிற்றறுதலிகள் (Minor widows) இருத்தல் கூடாதென்பதற்குமட்டில் இளமணங் கூடாதென எப்படி விதிக்கமுடியும்?

IV. 28. ஆடவரும் பெண்டிரும் ஆயுட்கால முழுவதுமே புணர்ச்சியை விரும்பாமல் இருக்க முடியுமா? முடியாதா?

A. 29 முடியுமெனின் அதற்கு வழிகள் எவை?

30. சிற்றறுதலிகளையும் அவ்வழிகளில் திருப்பிப் புணர்ச்சியில் விருப்பற்றிருக்கும்படி ஏன் செய்யலாகாது?

B. 31. முடியாதெனின் தொடர்ந்து இத்துணைக் காலமாவது ஒருவனோ ஒருத்தியோ அவ்விருப்பற் றிருக்கலாமென்ற அளவு கூடக் கிடையாதா?

32. அஃதுண்டென்பீராயின் அக்கால வெல்லைக்கு மேலுமவரோ அவளோ அவ்விருப்பமற் றிருந்துவிட்டால் அதனை நீர் நம்பமாட்டீ ரல்லீரா?

33. எத்தனையோ பெண்டிர் முப்பது வயதிற்கு மேலும் மணஞ் செய்து கொள்ளாமலே கலாசாலைகளிற் படித்து வருவதை யறிவீரா?

34. பதினான்கு வயதில் அவர் பூப்படைகின்றாரென வைத்துக் கொண்டால் அப்பால் பதினாறு வருட காலத்துக்கு மேலும் அவர் படித்துவரும்போது புணர்ச்சியை விரும்பாரென்றுஞ் செய்யாரென்றுஞ் சொல்ல நீர் சித்தமாயிருக்கிறீரா?

35. ஆமெனின் முப்பது வயது வரையிலும் புணர்ச்சியை விரும்பாமலும் செய்யாமலும் இருக்கவல்லவோ ரரிவை மேலுள்ள காலங்களிலும் அப்படியே யிருக்கமாட்டாளென்று சொல்ல உமக்கு என்ன காரண மிருக்கிறது?

36. சோறும் நீரும் இன்றியமையாது வேண்டப்படுமென்பதை அவ்வப்போது பசியுந் தாகமும் பிரத்தியக்ஷமாக வந்து உமக்கு உணர்த்த வில்லையா?

37, அந்நேரத்தில் அவை கிடைக்கப் பெறீராயின் உம் கதி யாதாகும்?

38. புணர்ச்சியும் இன்றியமையாத தென்பதை யுணர்த்துதற்கு அப்பசி தாகம் போன்றதோர் பிரத்தியக்ஷ வாயில் எது?

39. ஒரு நாளாயினும் புணர்ச்சியை விரும்பாமலும் செய்யாமலும் இருக்கமுடியா தென்பீராயின் உம்மவர் தம் மனைவியரை வீட்டில் வைத்துவிட்டுச் சிலநாட்களோ மாதங்களோ வேற்றூர்களுக்குச் சென்றிருக்கவே மாட்டாரா?

40. அக்காலங்களில் அவர் மனைவிமார் எப்படி யிருந்திருப்பாரென நம்புகிறீர்?

ஆக அநுவாதம் 19க்கு ஆசங்கை 1302.

20. சுய மரியாதை யியக்க மணம்.

அநுவாதம்

ஆடவரும் பெண்டிரும் சுருங்கிய செலவில் குறைந்த காலத்தில் சடங்குகளை யெல்லாம் நீக்கி இயற்கை யின்ப நுகர்ச்சிப் பொருட்டுத் தமக்குட் செய்துகொள்ளும் வாழ்க்கை யொப்பந்தமே சுயமரியாதை யியக்க மணமாகும். அம்மணமே திருந்திய மணமென்க.

ஆசங்கை

I. 1. 'ஆண் பெண் என்பது இயற்கை இன்பநுகர்ச்சிக்கே ஒழிய புருஷன் பெண் ஜாதியாய் குடும்பம் நடத்த பிள்ளைகள் பெற்று சொத்துக்கள் சம்பாதித்து பிள்ளைகளுக்கு வைத்துவிட்டு போவதற்கு அல்ல என்பதை உணர்ந்தவர்களே உண்மை இன்பம் நுகருகின்றவர்களாவார்கள்' என்று 24—11—1929 'குடியர'சிற் பத்திரிகாசிரியர் கூறியிருப்பதை யறிவீரா?

2. விலங்கு பறவைகள் நுகர்வதும் இயற்கை யின்பமே யன்றே?

3. அதற்கென அவை மணஞ் செய்துகொள்கின்றனவா?

4. உமக்குமட்டில் அந்நுகர்ச்சிப்பொருட்டு வாழ்க்கை யொப்பந்த மேன்?

II 5. நீர் மணத்துக்குப் பெயரென வைத்துள்ள 'வாழ்க்கை யொப்பந்தம்' என்னும் தொடரிற்கண்ட வாழ்க்கை யென்னுஞ் சொல் இடக்கரடக்கலாய் நின்று புணர்ச்சியென்னும் பொருளைத் தருவதா? வேறு பொருளைத் தருவதா?

A. 6. புணர்ச்சி யென்னும் பொருளையே தருவதெனின் ஒருவன் மனைவி அயலானையும் புணர்ந்தால் அவளுக்கு வரக்கூடிய நஷ்டமென்னை?

7. அவள் கணவனுக்குத்தான் வரக்கூடிய நஷ்டம் யாது?

8. மாறுதலே மக்களுக்கு மகிழ்ச்சி தருமென்னும் பொருளையுடைய 'Variety is the spice of human beings' என்ற ஆங்கிலப் பழமொழியை யறிவீரா?

9. ஒருத்தியையே ஒருவனும், ஒருவனையே ஒருத்தியும் தம் ஆயுள் கால முழுவதும் புணர்ந்துவந்தால் அதனாற் கிடைக்குமின்பம் அப்பழமொழிப்படி விரும்பப்படுவ தாமா?

10. ஒருவன் வேறு வேறு அரிவையரையும், ஒருத்தி வேறு வேறு ஆடவரையுங் கூடிச் சுகிப்பதே பரமசுக மென்பதை அப்பழமொழி கொண்டு நிரூபிப்பவரை உம் கொள்கைக்கு மாறில்லாத வகையில் எங்ஙனம் மறுப்பீர்?

11. உம் வாழ்க்கை யொப்பந்தம் இருபாலார்க்கும் அப்பரம சுகத்தைத் தடுக்கவில்லையா?

12. ஆகவே புணர்ச்சி யின்பத்துக்கு உம் ஒப்பந்தப்புணர்ச்சி முட்டுக்கட்டை யென்பதை இப்போதாயினும் உணர்கிறீரா?

B. 13. வேறு பொருளைத் தருவதெனின் அஃதெது?

14. அதன் பொருட்டு ஆடவர் ஆடவரோரும், பெண்டிர் பெண்டிரோடும் வாழ்க்கை யொப்பந்தஞ் செய்து கொண்டாலென்னை?

III. 15. உமக்குக் குடும்பத்தில் விருப்பமில்லை யென்பதும் அக்குடியரசு வானத்தில் வெளியன்றா?

16. குடும்பத்தை வெறுப்பது உறவின் முறையாரையே வெறுப்ப தாகாதா?

17. உறவின்முறைக ளில்லாமை காணப்படுவது விலங்கு பறவையாதிகளிடமே யன்றா?

18. அவைகளிடம் விபசார மிருப்பதற்கு அஃதொரு முக்கிய காரண மாகாதா?

19. மக்களுள்ளும் குடும்ப முறைகளில்லாவிட்டால் அவரும் விலங்குகளாகி விபசார நிலயங்களாக மாட்டாரா?

20. அவ் விபசாரத்தை உம் வாழ்க்கை யொப்பந்தம் தடுப்ப தெப்படி?

IV. 21. குடும்பங்களை உருப்படுத்தாமலே விபசாரத்தைத் தடுக்க மணத்துக்கு வலியுண்டா?

V. 22. மேலும் 'ஆண் பெண் என்பது இயற்கை இன்ப நுகர்ச்சிக்கே ஒழிய——அல்ல' என்கிற உமக்கு விபசாரத்தைக் காட்டிலும் வாழ்க்கையொப்பந்தம் அநுகூலமாவதெப்படி?

23. நோய் முதலியவற்றைப் பரப்புமே விபசாரமென்பீராயின் செத்தவனைப் பிழைப்பிக்கவல்ல மருத்துவர்கூட இப்போது மேல்நாட்டில் தோன்றியிருக்கின்றாரென நீவிர் நினைத்துத்துள்ளி விழவில்லையா?

24. உம் சகாக்களாகிய பேற்றுத்தடை (Birth Control) இயக்கத்தார் புணர்ச்சிக் காலத்திற் குறிகளுக்கு உறைகள் போட்டுக்கொள்ளச் சொல்லவில்லையா?

25. ஆகலின் விபசாரம் நோய்களைப் பரப்பி இயற்கையின்ப நுகர்ச்சிக்குத் தடை செய்யுமென நீவிர் அஞ்சுவதேன்?

26. அம் மருத்துவரும் உறைகள் முதலிய காப்புக்களும் இன்னும் உலகில் அதிகப்படவில்லையே யென்பீராயின் அவை அதிகப்பட்டுவிட்டால் உம்மவர்க்குள் வாழ்க்கை யொப்பந்தங்கள் வேண்டாமல்லவா?

27. தன் சாமர்த்தியத்தால் நோய்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவல்ல ஒருவனோ ஒருத்தியோ விபசரிப்பதுபற்றி உம்மாற் குறை கூற முடியுமா?

28. முடியாதாகலின் விபசாரமே உம் இயக்கத்துக்கு நோக்கமென்பதிற் சந்தேகமென்னை?

29. விபசரிப்போரை நன்மக்கள் அலர் தூற்றுவரே யென்பீராயின் உம்மவரே பல்கி, அதிகாரத்தையும் பெற்று விஞ்ஞானம் வளர்ந்த இக்காலத்தில் இதுவே பரமசுகந் தருவதென விபசாரத்தைச் சட்ட மூலம் அங்கீகரித்துப் பழக்கத்திலுங் கொண்டு வந்துவிடுவாராகில் அவரினும் நன்மக்களென வேறுயாரிருப்பார்?

30. இராராகலின் அலருக் கிடமேது?

31. இக்காலை நன்மக்களாற் பழிக்கப்படுகிற அறுதலிமண முதலியவற்றை நீர் மதிப்பதோடு அந் நன்மக்களையும் இகழவில்லையா?

VI. 32. சுருங்கிய செலவு, குறைந்த காலம் என்னும் இவற்றுக்கும் உம் வாழ்க்கை யொப்பந்தத்துக்கு மெனத் தனிப்பட்ட இயை பென்னை?

33. சுருங்கிய செலவு, குறைந்த காலம் என்பவற்றோடு பொருந்த வேறு மணங்களைச் செய்ய முடியாதா?

34. அச்செலவும் அக்காலமுங்கூட இல்லாமலே உம் வாழ்க்கை யொப்பந்தங்களை நீர் ஏன் செய்துகொள்ளக் கூடாது?

35. வாழ்க்கை யொப்பந்த வோலைபோக்கல், பந்தரமைத்தல், கூட்டங்கூட்டல், உம்மவரில் ஒருவன் தலைவனாகவோ நடத்தி வைப்பவனாகவோ இருந்து புரோகிதனாதல், மோதிரம் மாலையாதியனமாற்றல், வாழ்த்துரை வழங்கல், சொற்பொழி வாற்றல், விருந்து செய்தல் முதலியன உம் வாழ்க்கை யொப்பந்தங்களில் நடைபெறுதலில்லையா?

36. அவை சடங்குக ளாகாவா?

37. அவற்றையும் நீக்கி விட்டாலென்னை?

38. ஒருவனும் ஒருத்தியும் எழுத்துமூலமோ சாட்சிகள்முன்பிலோ தம்முள் ஒப்பந்தஞ் செய்து கொள்வது போதாதா?

39. போதுமென்பீராயின் அவ்வொப்பந்தமும் அவன் மனமாவது அவள் மனமாவது வேறுபடும் வரையிற்றான் செல்லுபடியாகுமென்பது மெய்தானா?

40. மனத்தை வேறுபடாமல் இருத்திவைக்க அதற்கு வலியுண்டா?

41. சாட்சிகளுக்குத்தான் அவ்வலியுண்டா?

42. இல்லையாகலின் 'நீ சாகும்வரை, உயிரோடிருக்க இதோ மருந்து தருகிறேன்' என்று கூறி ஒருவன் கொடுக்கும் மருந்துக்கும் 'ஒப்பந்தக்கார ஒப்பந்தக்காரிகளின் மனம் வேறுபடும் வரையுமே இவ்வொப்பந்தம் இருப்பதாகுக' என்று கூறி நீர் செய்து வைக்கும் வாழ்க்கை யொப்பந்தங்களுக்கும் வித்தியாசமென்னை?

43. அவ்வொப்பந்தங்களுக்கு எழுத்தோ சாட்சிகளோ ஏன்?

44. அவ்வொப்பந்தங்களேதான் ஏன்?

VII. 45. புணர்ச்சி யின்பத்தை யுத்தேசித்ததே வாழ்க்கையொப் பந்தம் என்கிற உம் கூட்டத்திலுள்ள ஆடவனுக்குப் பிள்ளை பிறந்துவிடின் அப்பிள்ளை அவனுக்கு வீண்சுமை யாகாதா?

46 அதனை அவன் தந்தையா யிருந்து பராமரிப்பானா? மாட்டானா?

A. 47 பராமரிப்பா னெனின் வீண்சுமையைத் தாங்குகிற அவன் மூடனல்லனா?

B. 48. மாட்டானெனின் புத்ரவாத்ஸல்ய மில்லாத அவன் மூர்க்க னல்லனா?

49. பிறந்துவிட்ட பிள்ளையைத்தான் என் செய்வது?

VIII 50. வாழ்க்கை யொப்பந்தஞ் செய்துகொண்டு அதனை நடத்திவருங் காலத்தில் அவ்வொப்பந்தக்காரனோ ஒப்பந்தக்காரியோ நோய் முதலிய சில பல காரணங்களாற் புணருஞ் சக்தி குறைந்து சிலகாலம் புணராம லிருக்கும்படி நேரக்கூடுமன்றோ?

51. அஃது அவ்வொப்பந்தக்காரனுக்கு நேர்ந்தால் அவ்வொப் பந்தக்காரியும், அவ்வொப்பந்தக்காரிக்கு நேர்ந்தால் அவ்வொப் பந்தக்காரனும் அது நீங்கும்வரைப் பொறுத்திருக்கவேண்டுமா?

52. அஃதில்லாதவரால் அக்காலங்களில் புணர்ச்சி விருப் பத்தை யெப்படிப் பொறுத்துக்கொண்டிருக்கமுடியும்?

53. பொறுத்துகொண்டுதா னிருக்கவேண்டு மென்பீராயின் விதவை மணத்தைக்கண்டிப்பவர் விதவைகளை அப்படியே யிருந்து தான் காலந் தள்ளவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது போன்றதோர் நிர்ப்பந்தமாகாதா அது?

54. அக்காலங்களிலாவது நோய் முதலிய அத்தடை யில்லா தவர் தமக் கிஷ்டமான வேறிடங்களிற் போய்வரலாமென அவ் வொப்பந்தத்தில் ஒரு வரி கண்டிருந்தாற் கேடென்னை?

IX 55. அப்பன் மகளையும், அண்ணன் தங்கையையும் மணந்து கோடல்போன்ற முறைகெட்டமணத்தை நீர் ஆதரிக்கிறீரா? இல்லையா?

A 56. ஆதரிக்கிறேமெனின் உம் கூட்டத்தில் அவ்வாழ்க்கை யொப்பந்தஞ் செய்துகொண்டோர் பல ரிருத்தல் கூடுமென்பது சித்தியாதா?

B 57. இல்லையெனின் முன் காட்டப்பட்ட 'உறவு முறை' யென்ற கட்டுரையை உம் ஈ-வே-ரா எழுதியதன்நோக்கமென்னை?

ஆக அநுவாதம் 20-க்கு ஆசங்கை. 1359

—(||||||)—

21 மணமுறை

ஆசங்கை

இன்ன முறையுடையாரைத்தான் மணந்துகொள்ளவேண்டு மென்னும் நியமம் தேசந்தோறும் சமூகந்தோறும் வேறுபடுகின் றது, எல்லாத் தேசத்தாரும் எல்லாச் சமூகத்தாரும் மக்களே யாகலின் அம்மணங்களனைத்தும் சம்மதிக்கத் தக்கனவேயாம்.

ஆசங்கை

I. 1. இவ்வநுவாதம் முன்வந்த 'ஒரு குல மணம்' என்னும் அநுவாதத்தோடு முரணுதா?

II. 2. அப்பன் மகளைப் பெண்டாளலாமென்பதை நீர் சம்மதிப்ப தாய் முடியாதா?

3, அவ்விருவருங் கூடிப் பெற்ற பிள்ளைக்கு அவன் அப்ப னும் அவள் அம்மையும் அல்லரா?

4. அப் பிள்ளைக்கு அவ்வப்பனின் மகளாகிய தன் னம்மை சகோதரியு மாகமாட்டாளா?

5. அவ் வம்மையின் அப்பனாகிய தன் னப்பன் பாட்டனு மாக மாட்டானா?

6. அப் பிள்ளையும் அவ் வப்பனுக்கு மகள் வயிற்றுப் பேர னும் அவ் வம்மைக்குச் சகோதரனுமாகமாட்டானா?

7. ஆகவே அப்பன் அம்மை பிள்ளை யென்ற முறை பாட்டன் சகோதரி பேரன் சகோதரன் என்றமுறையாகவும் மாறவில்லையா?

III 8. சகோதரன் சகோதரியைப் பெண்டாளலா மென்பதை நீர் சம்மதிப்பதாய் முடியாதா?

9. அவ்விருவருங் கூடிப் பெற்ற பிள்ளைக்கு அவன் அப்பனும் அவள் அம்மையும் அல்லரா?

10 அப்பிள்ளைக்கு அவ்வப்பனின் சகோதரியாகிய தன்னம்மை அத்தையு மாகமாட்டாளா?

11 அவ் வம்மையின் சகோதரனாகிய தன் னப்பன் அம்மானு மாக மாட்டானா?

12 அப் பிள்ளை அவ் வப்பனுக்கும் அம்மைக்கும் மருமகனு மாக மாட்டானா?

13, ஆகவே அப்பன் அம்மை பிள்ளை யென்ற முறை அம்மான் அத்தை மருமகன் என்ற முறையாகவும் மாறவில்லையா?

IV. 14. அம்மான் மருமகளைப் பெண்டாளலாமென்பதை நீர் சம்மதிப்பதாய் முடியாதா?

15. அவ்விருவருங் கூடிப் பெற்ற பிள்ளைக்கு அவன் அப்பனும் அவள் அம்மையும் அல்லரா?

16. அப்பிள்ளைக்கு அவ்வப்பனின் மருமகளாகிய தன் னம்மை மைத்துனியு மாக மாட்டாளா?

17. அவ் வம்மையின் அம்மானாகிய தன் னப்பன் பாட்டனு மாகமாட்டானா?

18. அப்பிள்ளை அவ் வப்பனுக்குப் பேரனும் அம்மைக்கு மைத்துன னு மாகமாட்டானா?

19 ஆகவே அப்பன் அம்மை பிள்ளையென்ற முறை பாட்டன் மைத்துனி பேரன் மைத்துனன் என்ற முறையாகவும் மாறவில்லையா?

20. இப்படியே எல்லா முறைமாற்ற மணங்களையும் விவகரிக்க முடியுமென்பதை யறிவீரா?

21. அம்மணங்களால் கணவன் மனைவியென்ற முறை யுட்படத் தாய் மகன், பாட்டி பேரன், அண்ணி மைத்துனன், மாமி

மருகன் என்பனவாதிய எல்லா முறைகளுமே நாசமாய்ப் போகாவா?

V. 22. ஒருவனுக்கு மனைவியான ஒருத்தி தன் பதினேழாவது வயதில் ஒரு மகனையும், இருபதாவது வயதில் ஒரு மகளையும் பெற்றெடுத்ததும் சின்னாட்களுக்குள் விதவையானாள் ஒரு நாள் அவள் முன் அநுவாதத் தாசங்கையிற் கண்ட குடியரசு வாசகத்தைப் படிக்க நேர்ந்தது. உடனே சு. ம. இயக்கத்தாரின் பகுத்தறிவு அவளுக்கு உதயமாயிற்று. அவள் தன் சின்னஞ் சிறு குழந்தைகளைத் தனியே விட்டுவிட்டுத் தூரதேசத்திலுள்ள ஆநந்த லீலா நிலயம் போய்ச் சேர்ந்தாள். அந்நிலயம் மறுவாழ்க்கை யொப்பந்தங்களை விரும்பிய அறுதலிகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள ஒரு கட்டடம். அதற்கு அதிகாரியென வொருவன் உளன். அவனே அவ்வறுதலிகளுக்கு மறுவாழ்க்கை யொப்பந்தங்களை நடத்தி வைப்பான், பிரஸ்தாப விதவை அங்கு வந்ததும் ஒருவனுக்கு வாழ்க்கை யொப்பந்தஞ் செய்து வைக்கப்பட்டாள். சில வருஷங்கள் கழிந்தன. அவள் மீண்டும் விதவையாகி அந்நிலயத்துக்கே வந்து சேர்ந்தாள், முன் அவள் விட்டுப்போன மகன் அவ்வூரிலேயே ஒருவனால் வளர்க்கப்பட்டான். மகளைக் கைக்குழந்தையா யிருந்தபோதே வேற்றாரா னொருவன் வாங்கிக் கொண்டு போய் வளர்த்து வந்தான். மகனுக்குக் காளைப்பருவம் வந்தது. அவனும் சு. ம. இயக்கக்காரனாகிப் பிரசாரத்தின் பொருட்டுப் பலவூர்களிலுந் திரிந்து அந்நிலய மிருந்த வூருக்கு வந்தான். அவனால் பிரஸ்தாப விதவையாகிய தன் தாயையும் அவளால் அம் மகனையும் அறிந்துகொள்ள முடியவில்லை. அந்நிலயத்தில் அவன் பிரசங்கமொன்று நடந்தது. கூட்டத்திலிருந்த அத் தாய்விதவையை அவன் கண்டு மோகங் கொண்டு அதனைத் தன் பார்வை வழியாகவே அவளுங்கண்டு குதுகலிக்கும்படி அவள்பாற் செலுத்திக் 'கைம்மை நீக்கம்' என்னும் பாரதிதாசன் பாட்டை வெறி தலைக்கொள்ளும்படி பாடினான். அவளும் அவனுக்கு வசமானாள், அந்நிலயத் ததிகாரி அவ்விருவருக்கும் வாழ்க்கை யொப்பந்தத்தை முடித்து வைத்தான். விதவை வாழ்க்கை யொப்பந்தத்திற் காதலென்னும் வெறியுங் கலந்துவிட்டமையால் அவனைக் காட்டிலும் அவள் முதியளென்பது கருதப்படவில்லை. அவ்விருவரும் ஒரு குழந்தையையும் பெற்றனர். ஆனாற் பெற்ற இரண்டு மூன்று தினங்களில் அத்தாய் இறந்தாள். அவன் அக்குழந்தையை ஒருவன் பொறுப்பில் வைத்துவிட்டுப் பிரசார யாத்திரை செய்து கொண்டு தன் தங்கை வளரும் ஊருக்கு வந்தான். குழவிப் பருவத்திலேயே பிரிந்துவிட்டமையால் அவ்விருவரும் அயலாராகவே போய்விட்டனர். அவன் பிரசங்கமொன்று அவ்வூரிலும் நடந்தது அப்பெண்ணை வளர்த்தவன் அப்பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்து அவளை அவனுக்கே மணஞ்செய்து கொடுத்தான். அவள் அக்

கணவனோடு சல்லாபித்துக் கொண்டிருக்கையில் முன் ஒப்பந்தக் கார விதவை மூலம் அவன் பெற்ற குழந்தை பொன்றிருப்பது அவளுக்குத் தெரியவந்தது. அதனை யெடுத்துவரச் சொல்லி அவள் வாங்கிக்கொண்டாள். சில நாட்களுக்குள் அக்குழந்தை யைப் பெற்ற விதவை, அக்கணவன் தான் ஆகிய மூவரின உண் மையுறவு எப்படியோ அவள் செவிக்கெட்டியது. அதனை அக் கணவனுக்குங் குறிப்பாலுணர்த்தும் பொருட்டு ஒருநாள் அவள் அக்குழந்தையைத் தொட்டிலி லிட்டு அக்கணவன் காதில் விழும் படி 'மைத்துனு என்றம்பீ மாமா மருமகனே—சிற்றப்பா என் மகனே சீராளா கண்வளராய்'* என்று பாடித் தாலாட்டினுள் என்ற விருத்தாந்தத்தைக் கேட்டிருக்கிறீரா?

23, அவள் அத்தாலாட்டுப் பாட்டைப் பாடி உம் கொள் கொள்கையை யிகழ்ந்தாளாயினும் அப்பாட்டின் உண்மையைக் கண்ட உம்மவருள் ஒருவனுகிய அவள் கணவன் தன் வாழ்க்கை யின் விநோதத்தாற் பெருமித மடைந்திருப்பானு? வெள்கித் தலை குனிந்திருப்பானு?

A. 24: பெருமித மடைந்திருப்பா னெனின் முறைகெட்டுப் புணர்பவரைச் சில சமயங்களில் நீர் பரிகசிக்கவு மில்லையா?

25. இல்லையே யென்பீராயின் 'திருடாதவன், பொய் சொல் லாதவன்............ முறை தவறிக் கலவி செய்யாதவன்.......... ஒருவனைக்கூடக் காணமுடிவதில்லை..... ..... அன்றியும் திருடு, வஞ்சகம். பொய், முறை தவறிக் கலத்தல் முதலாகிய காரியங் கள் எவையென்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமா யிருக் கின்றது' என்று 'பகுத்தறிவு' III-6இல் உம் ஈ, வே ரா, சொல்லி யிருப்பதை யறிவீரா?

26, ஏனைத் தீய செயல்களோடு முறை தவறிக் கலத்தல் என்பதையும் ஒன்ருக அவர் ஏன் சேர்த்தார்?

B, 27· வெள்கித் தலை குனிந்திருப்பானெனின் 'ஒருவனைக்கூடக் காணமுடிவதில்லை' யென்றும், 'முறை தவறிக் கலத்தல் முதலா கிய காரியங்கள் எவையென்று தீர்மானிப்பதே கஷ்டமான காரிய மாயிருக்கின்றது' என்றும் அவர் சொன்னதால் அவரிடமும் அத் தீச்செயல் இருந்துவருகிறதென்றும் அவர் அதை மறைக்கப்பார்க் கிருரென்றும் ஏன் கொள்ளக்கூடாது?

---

*இந்த முறைகளை யூகித்துக் கண்டுகொள்க. இங்கு விளக் கிற் பெருகும்.

28. இன்னும் 'உலகத்தில் விவாகம் செய்து கொள்ளுவதில் ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு விதமான முறைகள் பார்த்து விவாகம் செய்து கொள்ளுவது வழக்கமாய் இருந்துவருகின்றதே ஒழிய எல்லா நாட்டிலும் எல்லா மதத்திலும் ஒரே விதமான சொந்தங்களை கையாளுவதில்லை ..... சையாம் தேசத்தில் தன்னுடன் கூடப் பிறந்த சொந்த தங்கையை விவாகம் செய்து கொள்ளும் வழக்கம் உண்டு ..... (அவர்களை) இந்துக்கள் பார்த்து பரிகாசம் செய்வதும் கிணத்துத்தவளைக் குணமேயொழிய வேறில்லை' என்று 27—4—1930 'குடியர'சில் பத்திரிகாசிரியர் கூறவில்லையா?

29. அவரனைவரின் ஒழுகலாறுகளையும் நீர் ஏன் அணைத்துப் பேசுகிறீர்?

VI. 30. முறைகளெல்லாங் காக்கப்படவேண்டும், அவற்றால் மக்களுக்கு நற்பயன்கள் பலவுள என்பதை உம்மால் உணர்ந்து கொள்ள முடியவில்லையா?

31. மக்களிடை நிகழ்வதென்னு மொன்றனையே காரணமாக வைத்து முறைகேடான மணங்களை யெப்படி அங்கீகரிக்கலாம்?

32. தீயொழுக்கங்களே மக்களிடை யில்லையா?

33. அவற்று ளொன்றாகிய முறைகேடான மணத்தையும் நேரிய வகையிற் கண்டித்து மக்களை நெறியில் நிறுத்த வேண்டுமென்பது பகுத்தறிவாகாதா?

VII. 34. தாயுடன் பிறந்த அம்மான் புதல்வனும் தந்தையுடன் பிறந்த அத்தை புதல்வனும் ஒருத்திக்கு முறைமாப்பிள்ளைகளென்றும், அவ்வம்மான் அத்தைமாரின் புதல்வியர் ஒருவனுக்கு முறைப் பெண்களென்றுஞ் சொல்லப்படுவதில்லையா?

35. அம்முறை மாப்பிள்ளைகளுக்கு அம் முறைப் பெண்களை மணஞ் செய்து வைத்தால் மற்றை முறைகள் சிறிதேனும் மாறுதலடையுமா?

36. அக் கௌரவ முறைமணத்துக்கு இடமில்லையானால் எல்லா முறைகளுக்கும் புறம்பானதும, கேடு தராததும், நன்கு ஆராயப்பட்டதுமான அயலிடத்திலிருந்து கணவராவாரையும் மனைவியாவாரையுங் கோடலே நீதியன்று?

ஆக அநுவாதம் 21க்கு ஆசங்கை 1395

22. கற்பு

அநுவாதம்.

கற்பொழுக்கம் பெண்டிரை ஆடவர்க் கடிமைப் படுத்து கின்றது. ஆகலின் அதனைப் பெண்டிர் வெறுத்து உதறித் தள்ள வேண்டும். அல்லது ஆடவர்க்கும் அவ்வொழுக்கம் ஏனிருத்தல் கூடாதென வாதிட வேண்டும். ஆடவர் கெடவில்லையாயிற் பெண் டிருங் கெடவே மாட்டார்

ஆசங்கை.

I. 1. விலங்கு பறவை முதலியவற்றுள்ளுங் குட்டி குஞ்சுக ளுக்குத் தந்தை யுண்டன்றோ?

2. ஆனாற் குட்டி குஞ்சுகள் இதுதான் தம் தந்தையெனக் கண்டு கொள்ள வல்லவா?

3. அத் தந்தையுந் தன் குட்டி குஞ்சுகள் இவைதா மெனக் கண்டுகொள்ள வல்லதா?

4. தாயேனும் அத் தந்தையை அதன் குட்டி குஞ்சுகளுக் கும். அக்குட்டி குஞ்சுகளை அவற்றின் தந்தைக்குங் காட்டிக் கொடுக்க வல்லதா?

5. இவ் வேலாமைக் கெல்லாங் காரணம் தனக்குக் குட்டி குஞ்சுகள் வேண்டுமென்று அத்தந்தை விரும்பாமையும், அத்தாய் பலவற்றைப் புணர்வது மாகிய இவையன்றி வேறென்?

6. ஆகவே தந்தை தனக்குப் பிறந்த குட்டி குஞ்சுகளையும் குட்டி குஞ்சுகள் தம்மைப் பெற்ற தந்தையையுங் கண்டுகொள்ள வும், தாய் காட்டிக் கொடுக்கவும் மாட்டாத கூட்டமே விலங்கு பறவை முதலியன வென்பதைத் தெரிகிறீரா?

7. மக்களுள் வேசிக்கூட்டமும் அத்தகையதன்றோ?

II. 8. ஆனால் தந்தையைப் பிள்ளையும். பிள்ளையைத் தந்தை யும் கண்டு கொள்ள ஆசைப்படாத கூட்டமா மக்கட் சமூகம்?

III. 9. பிள்ளையைத் தந்தை பெறுவது தாய் வயிற்றிலும், தாய் பெறுவது உலகிலு மல்லவா?

10. தாய் எத்தனை பேரைப் புணர்ந்தாலும் பெறும் பிள்ளை தன் பிள்ளையே யென்பதிற் சம்சயப்படுவாளா?

11. நேரிற் பார்த்த ஊரார் சான்று பகர்வதால் பிள்ளையுந் தன் தாயைக் கண்டு கொள்ளலாமன்ற?

IV. 12. ஆனல் தந்தை பிள்ளையைப் பெறுவது தந்தைக்குத்தான் தெரியுமா?

13. தாய்க்குத்தான் தெரியுமா?

14. பிள்ளைக்குத்தான் தெரியுமா?

V. 15. ஆனல் தந்தைக்குத் தன் பிள்ளையை நிச்சயித்துக் கண்டு கொள்ளவும், அதனேடு கொஞ்சவும் வேண்டுமென்ற புத்ர வாத்ஸல்யம் இராதா?

16. பிள்ளைக்குத் தன் தந்தையை நிச்சயித்துக் கண்டு கொள்ளவும் அவனுக்குப் பணியாற்றவும் வேண்டுமென்ற பித்ரு பக்தி யிராதா?

17. தாய்க்குத் தன் வயிற்றில் தனக்கும் பிள்ளையாமாறு விதைபோட்ட தன் கணவனின் நன்றியையும், அவனிடமிருந்து தன் வயிற்றில் பிள்ளையை வாங்கிக்கொண்ட கடனையும் மறவாமை வேண்டாமா?

18. அவள் தன் கணவனுக்கு அவன் பெற்ற பிள்ளையையும் பிள்ளைக்கு அவனைப் பெற்ற அப்பனையுங் காட்டுதற்கு வாய்ப்பு வேண்டாமா?

19. அத்தனையுங் கைகூடுதற்கு வாயில் ஒருத்தி தன வாழ்நாள் முழுவதும் தன் கணவனையே புணர்ந்து வாழ்தல் வேண்டுமென்ற பொருள் பயக்குங் கற்பு என்னுந் திண்ணிய வொழுக்கம் தாயின் மாட்டுளதாத லொன்றே யன்ற?

20. அவள் மட்டில் இருவரைப் புணர்ந்து விடுவாளேயானல் அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளையைத் தந்தையானவன் தன் பிள்ளை தானென நிச்சயித்துக் கொள்ள மாட்டுவானே?

21. அவனுக்குப் புத்ர வாத்ஸல்யம் அரும்புமா?

22. பிள்ளைக்குத்தான் தன்னைப்பெற்ற தந்தை யிவன்ரு னென நிச்சயிக்க முடியுமா?

23. அதற்குப் பித்ரு பக்தி அரும்புமா?

24. தாய்க்காவது தன் கணவன்ருன் அப் பிள்ளைப் பேற்றை யுபகரித்தானென நிச்சயிக்க முடியுமா?

25. அப்பிள்ளையைத் தன் வயிற்றில் வாங்கிக்கொண்ட கடனை அவள் அவனுக்குத் தீர்ப்ப தெப்படி?

26. ஆகவே பிதா புத்ர சம்பந்த வுணர்ச்சி, அதன்வழித்தா கிய அன்பு என்னும் மக்களியல்பு மக்களுலகில் எடுபடாது என் றும் நிலையுதற் பொருட்டு மனுஷனுகிய கணவன் மனுஷியாகிய மனைவியை அக் கற்பொழுக்கத்தில் நிறுத்தி வைத்தலும, அவளும் அங்ஙனமே நிற்றலுந்தான் மானுஷீக மரியாதை யென்பதை யறி கிறீரா?

27. அம்மக்களியலைத் தானுங் கொள்ளாமல் தன் மனைவிக் குங் கொளுத்தாமல் திரியு மொருவன் இருப்பானுயின் அவனே நாய் பன்றி கழுதை யல்லனு?

28. அப்படியே ஈடுசெய்ய முடியாத நன்றியைப் புரிந்த தன் கணவனுக்கு ஆட்படுதல் தன் மரியாதைக் கிழுக்கெனக் கருதி யலையு மொருத்தி யிருப்பாளாயின் அவளே பாம்பு புலி பேய் அல்லளா?

29. ஈடுசெய்ய முடியாத நன்றிக்குக் கைம்மாருகத் தக்கது விரும்பி யாட்படுதலென்னு மொன்றுதவிர வேறென்னையுளது?

30. அதனை மனைவி தன் கணவனிடம் உதாசினஞ் செய்ய முனைவாளாயின் அவளை வரைநிறுத்தும் பொறுப்பு அந்நன்றி யைப் புரிந்த கணவனுக்குத்தானு மில்லையா?

VI 31. புதல்வியருந் தம் தந்தையை நிச்சயித்துக் கண்டு கொள்ள ஆசைப்படாரா?

32. ஆகலின் பெண்டிர் தம் பொருட்டுந் தம் கற்பொழுக் கத்தைக் காத்துக்கோடல் அவசியமன்ரு?

VII 33. மக்களுலகம் தந்தையை யறியவேண்டா மென்பீராயின் மகளை அப்பன் மணந்து கொள்ளவும் நேரிடாதா?

34. பாரத தேசம் திராவிட நாடு முதலியவற்றை நீர் அபிமானிப்ப தில்லையா?

35. அவ்வபிமானமே காரணமாகப் பாரதமாதா திராவிடத் தாய் என்று கூறி நீர் அவற்றை மதிப்பதில்லையா?

36. உம்மைப் புத்ரஸ்தானத்திலும் அவற்றை மாத்ருஸ்தானத்திலும் வைப்பதற்கு நீர் அவற்றிற் பிறந்ததொன்றே காரண மன்று?

37. அம்மாதாக்கள் உம்மிடம் புத்ர வாத்ஸல்யங் காட்டுகின்றனவா?

38. அவை உம்மை விரும்பிப் பெற்றனவா?

39. அவை யெல்லாஞ் சடங்க ளென்பதை யறிவீரா?

40. தேசாபிமானத்துக்குத் தேசத்திற் பிறத்த லொன்றே காரணமல்லாது வேறு காரணங்களில்லை யாகலின் வேறு காரணங்களை யவாவுதல் மடமையன்று?

41. சடதேசத்திற் பிறப்பதற்கு முன் உம்மைப்பெற்ற அறிவுள்ள தேசங்களில்லையா?

42. உம் தந்தை வயிற்றிலிருந்து உம் தாய் வயிற்றில் நீர் பிறந்திலீரா?

43. இன்னதேசமென்று தெரியாத மூலத்திலிருந்து உம் தந்தை வயிற்றுக்கு நீர் வந்திலீரா?

44. அத் தாய் தந்தையரும் உமக்குச் சென்ம தேசங்களல்லரா?

45. அவர் அறிவுள்ள தேசங்களென்பதையும் அறிவீரா?

46. உமக்கு அறிவிருந்தால் நீர் அச் சடதேசங்களைக் காட்டிலும் உம் மாதாபிதாக்களாகிய அறிவுள்ள தேசங்களையே பெரிதும் அபிமானிக்க வேண்டுமென்பதை யுணர மாட்டீரா?

47. தன் ஜென்ம தேசங்களுட் பிரதம தேசமாகிய தந்தையைக் கண்டு அபிமானித்துவந்திசுக வொருப்படாதவன் தனக்கு அவாந்தரத்தில் வந்தவையும் சடவியல்புடையனவு மாகிய பாரத தேசம் திராவிட நாடு முதலிய ஜென்ம தேசங்களை அபிமானிப்பவனெனத் தன்னைச் சொல்லிக்கொள்வது பொருளுடையதாகுமா?

48. சுதேசாபிமானமே மக்களுக்கு அதிசிரேட்ட கௌரவமாகலின் தந்தை தானே பிள்ளைக்குப் பிரதம சுதேசமென்பதைக் காட்டி அக் கௌரவத்தை ஆக்கிக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கமும் அவன் பிள்ளைப் பேற்றை விரும்பக் காரண மென்றுற் குற்ற மென்னை?

49. கற்பரசிகளின் புதல்வர்க்கே தம் பிரதம ஜன்ம தேசமாகிய தந்தையை யபிமானிக்க முடியுமென்பது தெரிகிறதா?

50. விபசாரிகளின் புதல்வர்க்கு அப்பிரதம தேசந் தெரிய வாராதாகலின் அவர்தந் தாயரே பிரதம தேசமாகி அவரால் அபிமானித்து வரப்படுவரென்பது பொய்யா?

51. வீசி யெறியப்பட்டு அரசாங்கத்தின் ஆதரவில் வளர்ந்த மகனுக்கோ தன் தாயாகிய ஜன்ம தேசமுந் தெரியாதன்று?

52. அவனுக்கே சடதேசங்கள் பிரதம ஜென்ம தேசமாயிருந்து அபிமானிக்கப்படத் தக்கனவா மென்பதை யறிகிறீரா?

53. ஆகவே மானமுள்ள மகன் தன்னை அரசாங்கமே வளர்க்கவும் சடதேசாபிமான மாத்திரமே யுண்டாமாறு இடமாக்கவும இசைவானு?

54. வீசியெறியப்பட்ட குழந்தைக்கு அரசாங்கத்தால் ஊட்டப்படுந் தேசாபிமானமே எல்லார்க்குந் தேசாபிமானமாயிருத்தல் வேண்டுமென்பீராயின் திராவிட ஸ்தானத்திலிருந்து வீசியெறியப்பட்ட குழந்தை ஆரிய ஸ்தானத்திற் போய் விழுந்து வளர்ந்தால் அஃதங்கு ஆரிய மயமாகவே வளராதா?

55. வளர்ந்து அறிவு பெற்றபிறகு அவனுக்கிருப்பது ஆரிய தேசாபிமானமேயன்று?

56 தேசாபிமானம் பிறப்புப் பற்றியதா? வளர்ப்புப் பற்றியதா?

57. இவைப் பிரதமாதா, திராவிடத்தாய் முதலியன் பேசாது விலங்கு பறவைத் தாய் அறிவுள்ள தாகலின் தன்பாற் குட்டி குஞ்சுகள் பிறந்த பிறகாயினும் அவற்றினிடம் சிலகாலமாயினும் வாத்ஸல்யத்துட னிருக்கவில்லையா?

58. விலங்கு பறவை யாதியவற்றினும் மக்கள் விசேட அறிவுடைய ராகலின் அவருட் குலத் தந்தை தன்னை யநுசரிக்குந் தாயையுந் துணைக் கொண்டு தன் புதல்வரைத் தன் ஆயுளுள்ள வரை நேசிப்பதைத் தெரிகிலீரா?

59. அத்தந்தைக்குப் புதல்வர் பிறந்த பிறகு உளதாகும் வாத்ஸல்யம்போல் பிறப்பதற்கு முன்னரும் புதல்வர் வேண்டுமென்ற ஆசையுமிருப்பதற்கு அவ் வாத்ஸல்யத்திலுள்ள இன்பத்தை அவ் விசேட அறிவு கொண்டு அவர் முன்னமேயே உணர்வதுதான் காரணமாகுமென்பது விளங்க வில்லையா?

60. ஒருவனுடைய தேசாபிமானத்துக்கு அவன் அத்தேசத்திற் பிறந்ததே காரணமா யிருப்பதுபோல் ஒருவனுடைய புத்ர வாத்ஸல்யத்துக்கு அவன் அப்புத்திரனை விரும்பிப் பெற்றதே காரணமா யிருக்கிறதென்றாற் குற்ற மென்னை?

61. ஆகவே கற்பரசிகளின் பிள்ளைகளே உண்மைத் தேசாபிமானிக ளென்பதை யிப்போதாயினுந் தெரிகிறீரா?

62. தன் தேசத்துக்குக் கேடு நேராத அளவில் உலகமனைத்தையும், தன் மாகாணத்துக்குக் கேடு நேராத அளவில் தன் தேசத்தையும், தன் ஜில்லாவுக்குக் கேடு நேராத அளவில் தன் மாகாணத்தையும் இப்படியே கீழ்க் கீழ்ச் சென்று அபிமானிப்பதே ஒருவனுக்கு வேண்டப்படு மென்பது அரசியலறிஞர் துணிபன்றோ?

63. அப்படியே ஒடுங்கிக்கொண்டு போகுந் தேசாபிமானத்துக்கு முடிவிடம் ஒவ்வொருவனுக்கும் அவன் தந்தையே யென்பதில் ஐயமென்னை?

64. பாரததேசம் திராவிடநாடு முதலியவற்றை மாதாக்களென்று நீர் எத்துணை யுயர்த்திக் கூறினும் உமக்கு உண்டி உறையுள் முதலியன கொடுத்து உம்மை வாழவைக்க வேண்டுமென்ற பரிவுணர்ச்சி அவற்றிற் குண்டாதல் கூடுமா?

65. அவ்வுணர்ச்சி அறிவுடைச் சென்ம தேசமாகிய நம் தந்தைக்கு உண்டாகாதா?

66. தன் வயிற்றுப் பிள்ளைகளுக்குச் சொத்துத் தேடிவைக்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு அதுபற்றியே யுண்டாகிறதென்பது தப்பா?

67. தப்பெனின் யாங்ஙனம்?

VIII, 68. தந்தையைத் தெரிந்த பிள்ளைக்குந் தெரியாதபிள்ளைக்குந் தோற்றத்தில் வித்தியாசமுண்டா?

69. இல்லையாகலின் மனைவியின் கற்பொழுக்கத்தைப் பல்லாற்றானுங் காத்துகோடல் பிள்ளையாசையுடைய கணவனுக்கு அவசியமாகாதா?

IX. 70. ஆடவர்க்குங் கற்பொழுக்கம் ஏன் வேண்டாமென வாதிப்பீராயின் பிள்ளைப் பேற்றுக்கு மூலமாய அவரும் அவ்விதியிற் கட்டுண்டாராயின் ஜன சங்கியா விருத்தியில் மண்விழாதா?

71. பிள்ளை பிறந்த பிறகு தாய்க்கு உள்தாகும் புத்ர வாத்ஸல்யமும், பிள்ளைக்கு உளதாகும் மாத்ரு பக்தியும், அவ்விருவர்க்கும் உளதாகும் மாதா புத்ரவுறவும் தந்தையின் கற்புச் சிதைவதாற் கெடுமா?

72. தன் மூலம் பிள்ளை யுதியாதபடி தடை செய்துகொண்டு சாத்தன் இன்பத்தின் பொருட்டுக் கொற்றன் மனைவியைப் புணரலாமென்பீராயின் அவ்வின்பத்தை விரும்புபவர் கொற்றன் மனைவியா? சாத்தனா?

A. 73. கொற்றன் மனைவியெனின் ஆண் தயவை யெதிர்பார்த்துப் புணரும் எளிமையிலுள்ள பெண்ணாகிய அவள் 'உன் மூலம் என் வயிற்றிற் பிள்ளை யுதியாதபடி ஏதேனுந் தடை செய்து கொண்டு என்னைப் புணர்' என்று அச்சாத்தனுக்கு நிபந்தனையை விதிக்க முடியுமா?

74. அவள் கற்பரசியாயின் தன் கணவன் பிள்ளைப் பேற்றோடு புணர்ச்சி யின்பத்தையுங் கொடுத்துவரும்போது அயலானை நாடமாட்டாளென்பதை யறிவீரா?

75. மேலும் அவளுக்குப் பிள்ளைப் பேற்றினும் புணர்ச்சியின்பம் பெரிதெனவே தோன்றுதென்பதும் உமக்குத் தெரியுமா?

B. 76. சாத்தனெனின் 'என் மூலம் பிள்ளை யுதியாவண்ணந் தடை செய்துகொண்டு நான் உன் மனைவியைப் புணர்வேன்' என்று கொற்றனுக்கே நேரில் அவன் தடையுறுதியைச் செய்து கொடுக்க வேண்டுமன்றோ?

77. கொற்றன் மனைவியும் சாத்தனும் புணரும் போதெல்லாம் பேற்றுத் தடையோடு புணர்கின்றனராவென்று காணக் கொற்றன் கண்விழித்துக்கொண்டே யிருக்க வேண்டாமா?

X. 78 சாத்தன் தன் மனைவியையும் அவ்வாறே பிறனுக்குக் கொடுக்க இசைவானென்பது பெறப்படவில்லையா?

79. தம் பெட்டைகளை வேறு ஆண்கள் புணரவரின் சீறி விழுந்து அவற்றைத்துரத்தும் ரோஷம் சில விலங்கு பறவையாதி களிடமும் உண்டென்பதை யறிவீரா?

XI. 80. பெண்டிருட் சிலர் கற்புக் கெடுதற்கு ஆடவரின் துஷ்டத்தனமே காரணமென்பீராயின் எல்லா ஆடவருமே அல்லது அவருட் பெரும்பாலாராவது துஷ்டத்தனம் சிறிதுமில்லாதிருக்கும் உலகத்தை என்றாவது எதிர் பார்க்கிறீரா?

81. அன்று வரையிலாவது அத்துஷ்டத்தனத்துக் கிரையாகாவண்ணம் ஒவ்வொருத்தியும் ஒவ்வொருவனுக்கே மனைவியாகி அவன் பாதுகாப்பிலோ, கணவனை யடைவதற்கு முன்னரும் விதவையான பின்னரும் அவள் பெற்றோர் உடன்பிறந்தோர் பிள்ளைகள் கணவனின் தாயத்தார் முதலியவர் பாதுகாப்பிலோ இருந்தே திர வேண்டுமென்பது விளங்கவில்லையா?

82. அதனை விடுத்து ஆடவரைத் துஷ்டர் துஷ்டரெனத் தூஷித்துக்கொண்டே அவர் துஷ்ட கிருத்தியங்கள் எளிதிற் கிளர்ந்தெழுந்து வளருமாறும், பெண்டிர்க்குச் சுதந்திரம் வேண்டுமென்னும் வியாஜத்தால அவர் கட்டைக் குலைத்து அவரை நடுத் தெருவிற் கொண்டுவந்து திரியவிட்டு அக்கிருத்தியங்களுக்கு வசமாமாறுஞ் செய்வது உமக்கு அடுக்குமா?

83. பெண்டிருள் துஷ்டரே யிலரா?

XII. 84. கற்பரசிகள் தங் கற்பை உலகிற்குக் காட்டவும் பிறர் காணவும் வாயிலுண்டா?

85. இல்லையெனக் கொண்டு பல விபசாரிகள் அக்கற்பரசிகளைப் பார்த்து 'நீவிர் மாத்திரம் யோக்கியர்தாமோ? அதனை

யேவர் கண்டார்?' என்று ஓரோ வொருகாற் பிதற்றி மகிழ்வதைக் கேட்டிலீரா?

86. அவர் கற்புக்குச் சான்றுகற்பாளன் ஈசுரனொருவனே யாகலின் சான்றில்லையேல் நிரூபிக்கப்படும் பொருளுமில்லையெனப் பட்டுவிடுமென்னும் உண்மையைக் கடைப்பிடித்து அவர் தங் கற்பே கரியாக அவனுண்மையை உடன்பட்டு விசுவசித்து 'ஈசுரனே! அவ்விபசாரிகளுக்குக் கூலியை நீயே கொடுப்பாயாக' வென வேண்டித் தம் நெறியைச் சோர்வின்றிக் காத்து அமைந்து அவ்விபசாரிகளின் முகதரிசனமுஞ் செய்யா தொழுவதையன்றி வேறென்செய வல்லார்?

XIII. 87. ஒருத்தி சிலகாலம் விபசாரியாய்த் திரிந்து பிறகு ஒருவனுக்கு மனைவியாகித் தன் எஞ்சிய வாழ்நாள் முழுதும் ஒழுங்காயிருந்து வருவாளேயாயின் அவளைச் சமூகத்தில் ஏற்றுக் கௌரவிப்பதற்குத் தடையென்னை யென்பீராயின் அவள் பலகாலம் விபசாரியாய்த் திரிந்து பிறகு ஒருவனுக்கு மனைவியாகித் தன எஞ்சிய வாழ்நாளில் ஒழுங்காயிருந்து வருவாளாயின் அவளை அங்ஙனமே கௌரவிக்க ஒருப்படுவீரா?

88. அவளொழுக்கத்துக்குஞ் சான்றுகற்பாலான் ஈசுரனே யல்லனோ?

89. நாத்திகராகிய நீர் அவள் பொருட்டுப் பரிவதேன்?

90. அவளொழுக்கத்துக்கு நீர் சான்றாக வல்லீரா?

91. வாழ்நாள் முழுவதுங் கற்பரசியா யிருப்பாளையே பகைமை, பொறாமை முதலிய காரணங்களாற் சம்சயித்துப்பேசத் துணியும் நீர் சிலகாலமோ பலகாலமோ விபசரித்த வொருத்தி பிறகு எவனுக்காவது மனைவியாகி ஒழுங்காய்க் காலந் தள்ளுகிறாளென அவளுக்கு நற்சாட்சிப் பத்திரங் கொடுக்க முன்வருவது உமக்கு வெட்கமின்மையைக் காட்டாதா?

XIV. 92. ஒருத்தி விபசரித்துப் பெற்ற பிள்ளையும், பிறகு ஒழுங்காய் வாழ்கிறாளென நீர் கூறுங் காலத்திற்பெற்ற பிள்ளையும் பிறப்பாற் சம கௌரவ முடையர்தாமா?

93. அவ்விருவருஞ் சகோதர ராகலாமா?

94. தாய் விபரித்துப் பெற்ற பிள்ளை அவள் விபசாரத்துக்குக் காரனை வல்லனெனக் கொண்டு அவன் தன் பிறப்புப்பற்றி அவௌரவமடையா னென்பீராயின் ஒவ்வொருவனுக்கும் பிறப்புத் தற்செயல். அல்லது அவனவன் ஈட்டினைத் தொடர்ந்த காரணத்தின் வழித்தாகாதது என்பவற்றுள் உண்மையாவ திதுவெனத் திர விசாரித்திருக்கிறீரா?

ஆக அநுவாதம் 22க்கு ஆசங்கை 1489.

— (❀) —

23. கலியாணம்.

அநுவாதம்.

பிள்ளை வேண்டுமென்ற ஆசையுடையான் கூலி கொடுத்து ஒருத்தியை நியமித்து அவள் வழியே பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படியே பிள்ளை வேண்டுமென்ற ஆசையுடையாள் கூலி கொடுத்து ஒருவனை நியமித்து அவனைக் கொண்டு பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகலிற் கலியாணம் பிள்ளைப் பேற்றின் பொருட்டன்று. அன்பின் பொருட்டேயாம்.

ஆசங்கை.

I. 1. அக்கூலிக்காரிக்கு அவள் பெற்ற பிள்ளையிடம் அன்பு பிறக்குமா? பிறவாதா?

A. 2. பிறக்குமெனின் அவளுக்குக் கண் பிள்ளைமேலா? கூலி மேலா?

a. 3. பிள்ளைமேலெனின் அவளைக் கூலிக்காரியெனல் யாங்ஙனம்?

b. 4. கூலிமேலெனின் அவள் முதலிற் கூலி கொடுத்தவனை விட்டு அதிகக் கூலிகொடுப்பவன் அகப்பட்டால் அவனிடம் ஏன் ஓடமாட்டாள்?

5. கூலிக்காரியும் எசமானனும் புணரலாமா?

B 6. பிறவாதெனின் விலங்குபறவைகளி லாயினுங் குட்டி குஞ்சுகள்பால் அன்புபிறவாத தாய் உண்டா?

7. கள்ளப்பிள்ளை பெற்றவளுக்குத் தானும் அதனிடம் அன்பு பிறவா தென்னலாமா?

8. அவளுந் தன் மானம் போய்விடுமே யென்றஞ்சித் தான் அப் பிள்ளையை யழிக்கவோ வீசியெறியவோ செய்கிறு ளென்பது தெரியவில்லையா?

9. மேலும் அக் கூலிக்காரி தன் வயிற்றிற் பிறந்த பிள்ளைக்கு அம்மையாக மாட்டாளா?

10. அவள் ஒருவனுக்குப் பிள்ளைபெற்றுக் கொடுத்துவிட்டு வேறெவனேனுங் கூலிகொடுப்பவனுக்குப் பிள்ளை பெற்றுக் கொடுக்கப்போனுல் அம் முதற்பிள்ளை அறிவு வந்தபிறகு மானக்கேடடையானு?

11. கூலிக்காரத் தாய்வயிற்றிற் பிறந்த வொருவன் திராவிட நாட்டானுயின் அவன் தன் நாட்டைத் திராவிடத்தாயென எங்ஙனம் போற்றக்கூடும்?

II. 12. விபசாரிகள் எவனுக்கேனுங் கூலிகொடுத்துப் பிள்ளையைத் தம் வயிற்றில் வாங்கிக்கொள்கின்றனரா?

13. கூலிவாங்கிக்கொண்டு பிள்ளை கொடுப்பதற்கு உழைக்கிறவோராடவன் அங்ஙனம் பல பெண்டிரைத் தனக்குக் கூலி தரும்படி ஏககாலத்தில் அமர்த்திக்கொள்ள மாட்டானு?

14. கூலிக்காரனும் எசமானியும் புணரலாமா?

15 கூலிக்காரனென ஒருவனையே நியமித்துக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் எசமானிக் குண்டா?

16. கூலிக்காரத் தந்தைக்குப் பிள்ளைப்பாச மிருக்குமா?

17. இங்ஙனம் தாய் வேண்டாத பிள்ளைகளுந் தந்தை வேண்டாத பிள்ளைகளும் பல்கியா உலகத்தை நிரப்பவேண்டும்?

III. 18. விலங்குபறவைகளுள் குட்டிகுஞ்சுகளைத் தன் வயிற்றிற் பெற்ற ஆண் விலங்குபறவை எதுவாயினும் அவை தன்

வயிற்றிற் பிறந்ததேபற்றி அத் தாய்விலங்கு பறவை அவற்றின் மாட்டன்புகாட்ட வில்லையா?

19. விபசாரித் தாயுங்கூடத் தன் வயிற்றுப் பிள்ளையைப் பெற்றவன் இவனென அறியாபலிருந்துங் கூட பெற்றபின் அப் பிள்ளையிடம் வாத்ஸல்யங் கொள்வ தில்லையா?

20. ஆகவே தாய்க்குப் பிள்ளைபால் அன்பு அப்பிள்ளை தன் வயிற்றிற் பிறந்ததேபற்றிப் பிரத்தியேகமாய் இபற்கையிலேயே யுண்டென்பதை யறிகிறீரா?

21. இங்ஙனம் தம் வயிற்றிற் பிறந்ததே காரணமாகக் குட்டி குஞ்சு பிள்ளைகளிடம் அன்பு வையாத பெண்கள் எந்த வர்க்கத்திலு மில்லையென்பது முடிந்த வுண்மையன்று?

22. ஆனல் ஆண் விலங்கு பறவைகள் குட்டி குஞ்சுகளிடம் பற்றுச் செலுத்துகின்றனவா?

23. ஆமென்பீராயின் அவை மிகமிகச் சிலவேயென்பதும் அவையும் அக்குட்டிகுஞ்சுகள் தம் வயிற்றிற் பிறந்தன வென் பதை யறிந்து அதுவே காரணமாகக்கொண்டு பற்றுச்செலுத்த வில்லையென்பதும், தாம் நேசிக்கும் பெண்விலங்கு பறவைகளின் வயிற்றிற் பிறந்தன வென்பதையே காரணமாகக்கொண்டு பற் றுச் செலுத்துகின்றன வென்பதும் உம்மாற் கண்டுகொள்ள முடியவில்லையா?

24. மிகமிகப் பெரும்பான்மை விலங்குபறவைகளில் ஆண் களுக்கு அப்பற்றுச் சிறிது மில்லையென்பது தெரியுமா?

25. அஃதெனில்லை?

26. ஒரு வர்க்கத்திற் பெரும்பகுதிக்குரிய வியல்பே அவ் வர்க்க முழுவதற்கு மியல்பாமெனக் கருதப்படவேண்டு மென் னும் நியாயத்தை யறிவீரா?

27. அவ் விலங்கு பறவைகளுள் தாய்தானுந் தன் குட்டி குஞ்சுகளிடம் அவை பிறந்ததிலிருந்து சிறிதே வளர்ந்து யதேச் சையை யடையும் வரையுமே பற்றுச் செலுத்திவருவதைக் காண்கி றீரா?

28. அப்பாசப் பெருங்கயிற்றுக்கு அங்ஙனங் கால அளவு ஏன் குறுகியதா யிருக்கவேண்டும்?

29. விலங்குபறவைகள் இன்பத்தை மாத்திரம் விரும்பிக் கொண்டு புணர்கின்றனவென்பது தெரியவருமா?

30 எந்த விலங்காவது பறவையாவது அவற்றுட் பெண் தானும் தனக்குக் குட்டியோ குஞ்சோ வேண்டுமென்று புணர்ச் சிக்கு முன் விரும்புவதுண்டா?

31. அப்பெண்ணும் தனக்கு அவைகள் பிறந்த பின்னர்த் தான் அவற்றிடம் அன்பு வைக்கின்ற தென்பதை யறிவிரா?

32. வேண்டிப்பெறாத அவற்றிடம் அத்துணைக் காலமாவது அத்தாய்க்கு அன்பிருக்கட்டு மென்று இயற்கையன்னை அவற் றின்மேல் வைத்துள்ள கருணையன்றா அது?

33. விலங்கு பறவைகளுள் தாய் தனக்குக் குட்டி குஞ்சு கள் பிறந்த பின்னராவது அவற்றின்பாற் பற்றுச் செலுத்துவது கண்கூடாயிருப்ப மக்களுள் யார்தான் தம் பிள்ளையின்பால் அன்பு செலுத்த விரும்பாதவர்?

34. அன்றியும் இருபால் மக்களுமே தமக்குப் பிள்ளை வேண்டுமென்ற விருப்பத்தைப் புணர்ச்சிக்கு முன்னரேயே கொள் வதில்லையா?

35. விலங்கு பறவைகளிடங் காணப்படாத அவ்விருப்பம் மக்களிடமே காணப்படுதலின் அது மக்களுக்கே யுரிய சிறப்பியல் பன்றா?

36. ஆகவே இன்பம் பேறு என்னும் புணர்ச்சிப்பய னிரண் டனுள் பேற்றை விரும்பாமல் இன்பத்தை மட்டில் விரும்பிப் புணர்வன விலங்கு பறவைகளும் மக்களுள் விபசாரம் பண்ணுகிற ஆடவரும் பெண்டிருமே யென்பதும், இன்பத்தை வரைசெய்து நுகர்ந்துகொண்டு பேற்றையே விரும்பிப் புணர்பவர் மக்களுள் ஏனையோ ரென்பதும் விளங்குகின்றனவா?

IV. 37. இனித் தனக்குப் பிள்ளைவேண்டுமென்று விரும்புகிற வோரரிவை ஒருவனையே தன் காலமெல்லாம் புணரவேண்டு மென்ற அவசிய முண்டா?

38. அவன் வேறிடங்களிற் போய் விபசரித்தால் அவள் வயிற்றுப் பிள்ளையை அவள் பிள்ளை யில்லையென்று சொல்லிவிட முடியுமா?

39. ஆனால் தனக்குப் பிள்ளைவேண்டுமென்று விரும்புகிற வோராடவன் தனக்கென வொருத்தியை நியமித்துக்கொண்டாலன்றி அவனாற் பிள்ளை பெற்றுக்கொள்ள முடியுமா?

40. ஆகவே கலியாணமென்பது தனக்குப் பிள்ளைவேண்டுமென்ற ஆசையை யியல்பாகவுடைய வோராடவன் அதனைப் பெற்று மகிழ்தற்பொருட்டு ஓ ரரிவையைத் தனக்கேயென நியமித்து அவளுக்கே யுரிய கற்பொழுக்கத்தில் நிறுத்திவைத்து அவளாயுள்கால முழுவதும் தான் பல கஷ்டநஷ்டங்களுக் குள்ளாகியும் அன்பால் ஆதரித்துவரப் பிரதிஞ்ஞை செய்துகொள்வதேயாமென்பதை யறிகிறீரா?

V. 41. '————சாத்தனுக்கு————கொற்றியை விவாகஞ் செய்விப்பதாக————' என்று கலியாண பத்திரிகையில் எழுதுமுறை தமிழ் நாட்டில் நெடுங்காலமா யுள்ளதன்று?

42 அதிலுள்ள நான்காம் வேற்றுமைக்குக் கோடற்பொருளும், இரண்டாம் வேற்றுமைக்குக் கொடைப்பொருளுமல்லாமல் வேறு பொருளுண்டா?

43. ஆடவர் விரும்பும் பிள்ளைப் பேற்றிற்கே கலியாணமென்பது அதனாலும் விளங்க வில்லையா?

44. '————————சாத்தனுக்கும்————கொற்றிக்கும் விவாகஞ் செய்விப்பதாக————' என்றெழுதுமுறையும் சிலவிடங்களிற் காணப்படுகின்றதே யென்பீராயின் 'நேற்றுச் சாத்தனுக்குங் கொற்றனுக்குங் கலியாணம் நடந்தது; நாளைச் சாத்திக்குங் கொற்றிக்குங் கலியாணம் நடக்கும்' என்று வழங்குவதைக் கேட்டுளீரா?

45. அவ் வழக்குக்குப் பொருளென்னை?

46. அதற்கு வேறான பொருள் சாத்தனுக்குங் கொற்றிக்குங் கலியாணமென்னும் வழக்கிலுண்டா?

47. உண்டாயின் அதனை யிலக்கணத்தோ டியைத்து விளக்குவீரா?

48. பிள்ளை வீட்டாருக்கும் பெண் வீட்டாருக்குமுள்ள கொண்டான் கொடுத்தான் சம்பந்தம் அதில் விளங்க வேண்டாமா?

49. மேலும் அவ்விரண்டாம் அழைப்பு முறையும் ஆடவன் செய்துகொள்ளும் பிள்ளைப்பேற்றிற்கே கலியாண மென்பதை மறுக்கவல்லதா?

50. ஆகவே அதற்கும் அம்முதலாம் அழைப்புமுறைப் பொருளைக் காட்டவே முற்படமாட்டீரா?

51. I gave my daughter in marriage to him என்று சொல்லுவதுபோல் I gave my son in marriage to her என்று சொல்வது ஆங்கிலேயரிடந்தானு முண்டா?

52. '————கொற்றிக்கு————சாத்தனை விவாகஞ் செய்விப்பதாக————' என்ற வேறோர் அழைப்புமுறையுங் கையாளலாம் என்பீரா? மாட்டீரா?

A. 53. என்பேமெனின் ஆடவன் கோடற் பொருளா யிருக்கும் போது முதலில் மனைவியாகக் கொண்ட வொருத்தி வயிற்றிற் பிள்ளை யுதியாவிடின் இன்னொருத்தியையும் மனைவியாகக்கொண்டு அவளிடத்திற் பிள்ளையைப் பெற்றுக்கொள்ளலாமன்று?

54. அம் மூத்தமனைவி அவனிடம் பற்றுள்ளவளாயின் அப்பிள்ளையைத் தன் பிள்ளை யெனக் கருதிப் பெருமித மடையாளா?

55. அம் மூன்றும் அழைப்பு முறைப்படி மனைவி கோடற் பொருளானல் அவனல் தன் வயிற்றிற் பிள்ளை யுதியாவிடின் வேறொருவனையுங் கணவனகக்கொண்டு அவனற் பிள்ளையைப் பெற்றுத் தன் முதற் கணவனுக்குக் கொடுக்கலாமா?

56. அவனும் அவளிடம் பற்று வைத்துக்கொண்டு அப் பிள்ளையைத் தோள்மேலேற்றித் திரிவானு?

57. குட்டிகுஞ்சுகளைக் கோடலாயிருந்து பெண் பெறக் கொடையாயிருந்து ஆண் ஏற்றல் விலங்கு பறவைகளிடமாயினு முண்டா?

58. இல்லையாகலின் மனைவியைக் கோடலாக்கித் தான் கொடையாகித் திரிபவன் விலங்குபறவைகளிலுங் கடையனல்லனு?

B. 59. மாட்டேமெனின் ஆடவன் செய்யும் பிள்ளைப் பேற்றிற்கே கலியாணமென்பதுஉளதாயிற்றென்ற வுண்மையை நீருஞ் சம்மதித்தி ராயிலீரா?

60. ஆகவே பிள்ளைப்பேற்றின் பொருட்டே மணமென்பதிலுள்ள பிள்ளைப்பேறு கணவன் பிள்ளை பெற்றுக்கொள்வதென்பதைக் குறிக்குமன்றி மனைவி பிள்ளைபெற்றுக் கொள்வதென்பதைக் குறியாதென்ற வுண்மை யிப்போதாயினும் விளங்கிற்ரு?

61. ஆனால் அக் கலியாணம் பெண்டிர்பக்கல் செய்யத்தக்கதொன்று மில்லையோ வென்பீராயின் கணவன் தன்மனைவிக்கும் பிள்ளையாமாறுதன் பிள்ளையை அவள் வயிற்றிற் கொடுத்தலாகிய வேறெதனுலும் ஈடுசெய்ய முடியாததாகிய நன்றியையும், கணவனிடமிருந்து தனக்கும் பிள்ளையாமாறு அவன் பிள்ளையைத் தன் வயிற்றில் வாங்கிக்கொள்ளுதலாகிய அவன் வயத்துநிற்றலாலன்றிப் பிறிதோராற்ருல் தீர்க்கமுடியாததாகிய கடனையும் அம் மனைவியிடம் சதா வுறுத்திக் கொண்டிருப்பதற்குக் கணவனேடு தொடர்பு படுத்திவைப்பதுதான் கலியாணம் பெண்டிர்பக்கல் செய்யத்தக்கது என்பதன்றி வேறென்?

62. அங்ஙனமாக அவள் சென்ற வழியில் அவன் ஏன் செல்லவேண்டும்?

63. பிரஞ்சு மன்னனுகிய நெப்போலியன் ஐரோப்பா முழுவதையும் நடுங்கவைத்த ஆண்டகை யல்லனு?

64. அப்பெருவீரன் தன் மனைவியிடம் 'நான் உன்னை மணந்துகொண்டது உன்னிடமிருந்து குழந்தைகளை யடைவதற்குத்தான்' எனறு கூறியதையும் இத்தாலிய பிரதம மந்திரி பெனிடா முசோலினி அதனை யாதரித்ததையும் பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா'விலிருந்து தமிழில் மொழி பெயர்த்து 6—2—1930 'தமிழரசு' காட்டியுள்ளதை யறிவீரா?

65. அந்தக்காலத்தில் உடன்கட்டை யேறியவர் மனைவியரா? கணவன்மாரா?

VI. 66. ஓராடவன் ஒரறுதலியிடம் பிள்ளை பெற்றுக்கொள்ளலாமா வென்பீராயின் அவள் முதலில் ஒருவனுலோ பலராலோ பலபடியாலும் அசுத்தப்படுத்தப் பட்டவளல்லளா?

67. அவளிடம் அவன் பெற்றெடுத்த பிள்ளை அறிவு வந்த பிறகு அவனைப் பார்த்து 'நீ என்னைப் பெற்றெடுப்பதற்கு இவ் வசுத்தைதான் அகப்பட்டாளா? இவளுடம்பிற் பல அயலாரின இரத்தங்கள் புகுந்து ஊறியிருப்பது உனக்குத் தெரியாதா? அத்தனை யிரத்தங்களிலுங் கிடந்து வந்த என்னுடம்பு உனக்கே முற்றிலுஞ் சொந்தமென்று எப்படிச் சொல்ல முடியும்? இத்தகைய மானங்கெட்ட பிறப்பையுந் தாயையுந் தந்த வுன்னைப் புத்ரத்ரோகி யென்று ஏன் சொல்லக்கூடாது? முன் ஒருவனாலுந் தீண்டித் தூய்மை கெடப்பெறாத வோருத்தமி என்னை வயிற்றில் தாங்க உனக்கு அகப்பட்டிலளா?' என்று கடியமாட்டானா?

VII. 68, இக்கலியாணமே யில்லாவிட்டால் பெண்டிர்க்குக் கர்ப்பம், பிரசவம் முதலிய வேதனைகளோடு விலங்கு, பறவை, விபசாரிகளுக்குப்போற் பிள்ளைகளைப் போஷிக்கும் வேதனையும் வந்துவிடாதா?

VIII. 69. கலியாணம் அன்பின் பொருட்டேயாமாயின் புணர்ச்சிக்குத் தகுதியில்லாதார் அன்பின் பொருட்டுத் தம்முள் மணந்து கொள்ளலாமா?

IX. 70. பல புதல்வர்க்கு Unmarried mothers உளராகி அவர் இவர்தான் என்று காணவும் அப்புதல்வரால் மதிக்கவும் பட்டு வருதல் போன்று Unmarried fathers உளராயினும் அவர் இவர் தான் என்று காணவும் அப்புதல்வரால் மதிக்கவும் பட்டு வருதல் உண்டா?

71 இன்ருகலின் அதுகொண்டும் கலியாணம் ஆடவர் பிதாக்களாதற் பொருட்டு அவர்க்கே வேண்டப்படுவதென்பதும் பெண்டிர் மாதாக்களாதற் பொருட்டு அவர்க்கு வேண்டப்படுவதன்றென்பதும் விளங்கவில்லையா?

ஆக அநுவாதம் 23-க்கு ஆசங்கை 1560.

——(:)——

24. போக்கியம்.

அநுவாதம்.

மிருகசுபாவம் ஆடவர்க்கே மிகுதி: பெண்டிர்க்குக் குறைவே. ஆகையாற்றான் ஆடவர் தம்மால அனுபவிக்கப்படும் இன்பப் பொருளேயெனப் பெண்டிரைக் கருதலாயினர்.

I. 1. மிருகங்களுட் பெண்கள் இலவா?

2. அவற்றிற் இருப்பது மிருகசுபாவ மில்லையா?

3. ஆடவர்க்கு ஆண் மிருக சுபாவ மிருக்கும்போது பெண்டிர்க்குப் பெண் மிருக சுபாவ மில்லாமற் போய்விடுமா?

4, அவ்விருவகை மிருக சுபாவங்களுள்ளும் மிகுதி குறைவுகள் எப்படி நேரக்கூடும்?

II. 5. பெண்குறி ஒருமுறை புணர்ந்து மறுமுறை புணர்வதற்குச் சிறிதேனுங் கால இடையீட்டை வேண்டுமா?

6. வேண்டாதாகலின் பெண்டிர்க்கே மிருகசுபாவம் இயற்கைத்தடை யில்லாததென்பது பெறப்படவில்லையா?

7. ஓர் அளவு குறித்த நேரத்தில் ஒருத்தி பல ஆடவரைப் புணரமாட்டாளா?

8. புணர்வாளென்பதற்குப் பெண்டிருள் ஒரு சாரார் பெண்குறி விற்பனை செய்துவருவது சான்றாகாதா?

9, அவ்வியாபாரிகள், உலகெங்குமே யிலரா?

10. அவர் பரம்பரை யெத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக இல்லையா?

11. ஆடவர் அவரிடஞ் சென்று அதனை விலைகொடுத்து வாங்கிப் புணர்ந்து வருவது இன்றும் நடைபெறவில்லையா?

12. ஆண்குறி ஒருமுறை புணர்ந்து மறுமுறை புணர்வதற்குச் சிறிதேனுங் கால இடையீட்டை. வேண்டாதா?

13. வேண்டுமாகலின் ஆடவர்க்கு மிருக சுபாவம் இயற்கைத்தடை யுடையதென்பது பெறப்படவில்லையா?

14. அதே அளவு குறித்த நேரத்தில் ஒருவன் அத்துணைப் பெண்டிரைப் புணர மாட்டுவானு?

15. மாட்டா னென்பதற்கு ஆடவருள் ஆண்குறி விற்பனை செய்வார் ஒருவர்தானு மில்லாமையே சான்ருகாதா?

16. அவ்வியாபாரிகள் எங்கேனும் என்றேனும் உளரா?

17. பெண்டிர் அவரிட ஞ் சென்று அதனை விலை கொடுத்து வாங்கிப் புணர்ந்து வருவதுண்டா?

III. 18. Prostitute, Concubine, வேசி, விலைமகள் என்பனவற்றிற்கு ஆண்பால் உளதா?

IV. 19. பெண்டிரைத்தான் ஆடவர் சிறையெடுக்கின்றனரென்பது தெரியுமா?

20. ஆடவரைப் பெண்டிர் சிறையெடுப்ப துண்டா?

V. 21. பெண்டிரின் சம்மதமின்றியே ஆடவர் அவரை வலாற்காரமாகப் புணரவல்ல ரல்லரா?

22. ஆடவரின் சம்மதமின்றிப் பெண்டிர் அவரைப் புணர்தல் கூடுமா?

23. அப்பொருட்டு ஆடவரின் தயவைப் பெறுதல் பெண்டிர்க்கு அவசியமன்ரு?

24. ஆகலின் ஆடவர்க்குப் பெண்டிர் அடியரா யிருக்கும் பான்மைய ரல்லரா?

25. ஆங்கிலத்திற் காதலனை Lover என்றும், காதலியை Loved அல்லது Love என்றுங் கூறக் காரண மென்னை?

26. ஆங்கிலேயருள்ளும் பெண்டிர் தத்தமக்கெனப் பெயர்களுடைய ரல்லரா?

27. ஆனல் மணத்தின் பின்னர் அவர் தங் காதலன் பெயர்களை Mrs. என்பதை முன் வைத்துத் தமக்கு இட்டுக் கொள்வதென்னை?

28. அப்படியே காதலர் தங் காதலிமாரின் பெயர்களைத் தமக்கு இட்டுக் கொள்ளாமை ஏன்?

29. உம்மவர்க்குள் குப்பி யென்னும் பெயருள்ள வொருத்தி திம்மன் என்னும் பெயருள்ள வொருவனோடு வாழ்க்கை யொப்பந் தஞ் செய்துகொண்டபிறகு அவ்விரண்டு பெயர்களின் கூட்டாகிய குப்பிதிம்மன் என்பதைத் தனக்கு இட்டுக் கொள்ளும் வழக்கம் இருந்துவர வில்லையா?

30. அக்கூட்டுப் பெயரை யப்படியேயாவது அல்லது திம்மன்குப்பியென மாற்றியாவது அவன் தனக்கு இட்டுக்கொள்ளும் வழக்கம் உண்டா?

31. அவன் எப்போதுந் திம்மனுகவே திரிவதில்லையா?

32. இன்னானுக்கு மனைவியாகிய இன்னாள் என்று குறிக்கப் படாவிடில் அவள் சம்பந்தமான பத்திரங்கள் பதிவுச்சாலை (Registrar's Office) களில் பதிவு செய்யப்படுமா?

33. அவன் சம்பந்தமான பத்திரங்களில் இன்னாளுக்குக் கணவனுகிய இன்னான் என்று அவன் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டுமா?

34. ஆகவே ஆடவர்க்கு அடியராகிய பெண்டிர் அம்முகத்தால் உடைமையு மாவரென்பது சித்திக்க வில்லையா?

VI. 35. ரஜஸ்வாலை, கர்ப்பம், பிரசவம், விலக்க வறட்சி முதலியன பெண்டிர்க்கு இன்பத்தடை யர்காவா?

36. ஆடவர்க்கு அன்ன தடைகள் உளவா?

VII. 37. விலங்கு பறவைகளில் பெண்ணினும் ஆணே அழகுடையதன்று?

38. அப்படியிருந்தும் இன்பத்தின் பொருட்டு ஆணே பெண்ணைத் தொடர்வது தெரியுமா?

VIII. 39. தலைவனை யெதிர்ப்பட்டுத் தலைவி காட்சி, ஐயம் முதலியவற்றைக் கொண்டாளெனத் துறைகள் வர்ணிக்கப்பட்டுள்ள தமிழ்க்கோவை எது?

IX. 40. ஆடவர் வகுத்தனவாகச் சொல்லப்படும் மண், பெண், பொன் என்னும் மூவகை யாசைகளிற் பெண்ணை யெடுத்துவிட்டு ஆணைப் புகுத்திய பெண்டிர் உளரா?

X. **41.** இயற்கை யென்பது நியமந் தவறியும் பலிக்குமா ?

42. அஃது உழைப்பவர்க்கே யின்பங் கொடுத்தல் வேண்டாமா ?

43. புணர்ச்சியிற் பேருழைப் பெடுத்துக் கொள்பவர் ஆடவரல்லரா ?

ஆக அநுவாதம் 24க்கு ஆசங்கை 1603.

சுயமரியாதை யியக்கச் சூறுவளி முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

ஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடி வாழ்க.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்
13	20	றுணுபா	றுணிபா
15	28	உவக	உலக
17	21	b.	b. 7
23	2	யியற்று	யிற்று
23	21	அல்வ	அவ்வ
26	11	297	267
29	13	267	297
34	7	துராசார	ஆசார
47	16	கொவ்வாதள	கொவ்வாதன
62	12	தன்னைக்	தன்னைப்
64	14	தணையெ	தணையே
66	23	புடைய	யுடைய
76	1	லாசிய	லாகிய
78	16	முதவி	முதலி
79	1	87	XII. 87.
79	4	83	88
84	5	கொடுக்ச	கொடுக்க
84	17	தம்மூட்	தம்முட்
86	10	மெளின்	மெனின்
86	12	னெனிள்	னெணின்
89	18	தம்மூள்	தம்முள்
90	2	வாமா	லாமா
90	7	லாமா?'	லாமா
91	14	37	38
98	9	மூருகள்	முருகன்
98	11	பிள்ணை	பிள்ளை
104	28	பெ்ற	பெற
108	26	இம்போ	இப்போ

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்
111	13	டிர்ச்	டிர்க்
114	16	38	VIII. 38.
121	1	ம்னு	னும்
122	1	Sogotra	Sagotra
122	27	Stristly	Strictly
126	2	லென்ளை	லென்னை
132	16	ரோரும்	ரோடும்
132	24	பறலை	பறவை
134	18	போநு	போது
134	27	த்ாகுக	தாகுக
137	16	அம்மைபு	அம்மையு
137	29	துளன்	துனன்
139	12	உம்கொள்	உம்
142	3	எத்தளை	எத்தனை
146	17	கா்ாண	காரண
149	9	தொமுவ	தொழிவ

Lalitha Press Madras P.I.OMS-336 C-1000. 30-10-46

பழைய வைதிக சைவம்

பரக்கவே.

Sri Lalitha Press, P.I.C.M.S. *336* C–*1000*. 13-11-46.